# புதிய தளம்

The New Base

புதிய பண்பாட்டுத் தளம்

சமூக பண்பாட்டு கலை இலக்கிய இரு மாத இதழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Multivision printers

## All kind of Printing Works

**Authorized dealer for Gestetner**

**Photo copier,Colour Copier. Digital Duplicator,Roneo Machine,**



Manufacturers of Quality T-Shirts, Bags, Caps & Hats with Customized Embroidery & Print.

Mugs, Key Tags, Umbrellas, Trophies, Awards & Medals.

Holdings, Visibility board & Banners

**No .77,1st Cross Street Vavuniya, Sri Lanka.**

**T.P : 024 222 3669 e-mail : multivition@gmail.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பண்பாட்டுத் தளம்


| | | |
|---|---|---|
| புதிய பண்பாட்டுத் தளத்தின் | : | சமூகம் - கலை - இலக்கியம் - பண்பாட்டு இரு மாத இதழ் |
| ஆசிரியர் குழு | : | நீர்வை பொன்னையன்<br>கே.சுப்பையா<br>ந.இரவீந்திரன்<br>லெனின் மதிவானம்<br>மல்லியப்பு சந்தி திலகர்<br>ஜெயக்குமார் |
| தொடர்பு முகவரி | : | ந. இரவீந்திரன்<br>13, மவுண்ட் அவென்யு,<br>மவுன்ட் லவேனியா (கல்கிசை) - 10370.<br>இலங்கை |
| மின்னஞ்சல் | : | puthiyathalam@gmail.com |
| தொலைபேசி | : | 0094718207252 |
| பதிவிலக்கம் | : | LK/T/1/181508 |
| தளம் | : | 1 |
| ஆண்டு | : | 2013 கார்த்திகை |
| விலை | : | ரூபா 140 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| புதிய தளம்..... | 03 |
| ஒரு சர்வதேசப் போராளியின் உயிர்ப்பும் அர்ப்பணிப்பும் | 04 |
| பிரமிப்பு | 08 |
| பெண்களே உங்கள் மாண்பை இழிவு படுத்த இடந்தராதீர்கள் | 13 |
| பழமையும் புதுமையும் | 15 |
| மலையக தேசியம் பற்றி தோழர் இளஞ்செழியனின் சமூகநோக்கும் பங்களிப்பும் | 19 |
| நேர்காணல் – மா.பாலசிங்கம் (மா.பா.சி.) | 25 |
| கல்வெட்டுக்கள் | 32 |
| மதராஸ் கஃபே – Madras Cafe | 33 |
| கைபேசி | 36 |
| ஈக்கி | 39 |
| புதிய பண்பாட்டுத் தளம் | 45 |
| வாக்குகளால் ஆனவாழ்க்கை | 45 |
| இனி... | 46 |
| வழி தொடருதல் | 46 |
| நீதி | 47 |
| வாசற்கதவு.... | 47 |
| புதிய தளத்தின் தேடல் ... | 48 |
| சிப்பிலியாட்டம் – மாற்றான் | 56 |
| இலங்கையின் பொருளாதாரம் | 60 |
| தளக் கணிப்பு .... | 63 |
| தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் .... | 65 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தளம்.....

இடைவிடாத இன்னல்களும், இனம் தெரியாத நெருக்கடிகளும் சூழ்ந்திருக்கும் வேளை அடுத்த கணம் எவ்வாறு ஆகும் என்ற பரிதவிப்பு இருந்து கொண்டேதான் இருக்கும். தழுவக் கிடைப்பது சிறு துரும்பெனினும் அதனைப் பற்றிப் பிடிப்பதால் ஏதோ கதி மோட்சம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை வளர்க்க விரும்புவோம். இன்று தமிழர் பிரச்சனையும் இலங்கை நிலவரமும் அந்தக் கதியில்.

வடமாகாண சபைத் தேர்தல் குழப்பமின்றி நடந்து முடிந்துள்ளது. யுத்தக் குற்றவாளியாக சித்திரிக்க விரும்பும் ஜனாதிபதி முன்னிலையில் வடமாகாண சபைத்தலைவர் சத்தியப் பிரமாணம் செய்துள்ளார். நாடு முழு அளவில் இயல்புவாழ்வுக்கு மீண்டிருப்பதோடு கண்கவர் காட்சிக்குரிய அழகிய வளர்ச்சிக்குறிகளையும் காட்டிநிற்பதாக வெளிப்படுத்த ஏற்ற வேலைப்பாடுகள் அசுரகதியில் நடந்துகொண்டிருக்கிறது. இருப்பினும் யுத்தக் குற்றங்கள்,நல்லிணக்க நடவடிக்கையின் போதாமை பற்றிய சர்ச்சைகள் வளர்ந்த படியே உள்ளன. போதாக்குறைக்கு பிரதம நீதியரசர் நீக்க விவகாரத்தில் கொம்மன்வெல்த் மனித உரிமைச் சட்டத்தரணிகள் (லண்டன்) சங்கம் பங்கெடுக்கக் கேட்கும் விவகாரம்ஐ.தே.க.தலைமைப் பிரச்சினையில் அரசு நடவடிக்கை, குடிநீர் நச்சாவதற்கு எதிரான மக்கள் போராட்டத்தைக் கையாண்ட முறை தொடர்பிலான சர்ச்சை எனத் தொடரும் விவகாரங்கள் வில்லங்கமானவையாகவே வளர்வன.

தமிழர் தரப்புக்கும் இது பல தலையிடிகளைத் தந்தபடிதான். ஜனாதிபதியை யுத்தக் குற்றவாளியாக சித்திரிக்க முனைப்புக் காட்டும் வேளை எப்படி அவர் முன் வடமாகாண முதல்வர் சத்தியப்பிரமாணம் எடுக்கலாம் எனக்கேட்கப்படுகிறது. அவர் முன்னிலையைத் தவிர்ப்பது என்ற பேரிலேயே ஜனாதிபதி தேர்வு செய்யப்பட்டார். அது உண்மையல்ல, உலகின் முன் இயல்புக்கு திரும்புகின்றோம் என்பதை உணர்த்துவதே இதன் குறிகாட்டி என்ற கருத்தும் புறக்கணிக்க இயலாதது. புலம்பெயர் தமிழ்த் தேசியர்களில் கணிசமானவர்கள் இதனை ஏற்புடைய முன்னேற்றம் எனக் கருதுகின்றனர். இது ஆரோக்கியமான மாற்றம். அதேவேளை 'அடைந்தால்...மரணதேவி' என்றபடியே உள்ளவர்களும் விட்டபாடாயில்லை. அவர்கள் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என்பதில் நாட்டம் கொள்வதை விடவும், தமக்கான விருப்பம் சாத்தியமே இல்லாததாயினும் நிறைவேற்றித் தரப்பட வேண்டும் என்பதிலேயே குறியாக உள்ளனர். சாத்தியமே இல்லை என்ற சூழல் முன்னென்றும் இல்லாத அளவில் அதிகரித்து வருகிறது. மிகச் சிறுபான்மையினர் பிரிவினை நாட்டத்துடன் செயலாற்றுவதை வைத்து இங்கே பேரினவாதிகள் மாகாணசபைக்கான அதிகாரங்களையே ஒன்றுமற்றதாக்க வேண்டும் என்கின்றனர். இனப்பிரச்சினை என்று எதுவுமில்லை, சிறு தேசிய இனங்கள் இதனைச் சிங்களத் தேசமாய் அங்கீகரித்து இணங்கி வாழவேண்டியது கட்டாயமானது என்பது அவர்கள் கருத்து. ஆயினும் புறத்தாக்கங்களும், தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களும் காரணமாய், அனைத்துத் தரப்பையும் இணங்கவைக்கும் தீர்வை எட்டும் நிர்ப்பந்தத்தில் அரசு. இந்த யதார்த்தத்தை விளங்கிய வகையில் தமிழ்த் தேசியத் தலைமை. இரு தரப்புமே மக்கள் நலனை முதன்மைப்படுத்த ஏற்றவர்கள் அல்ல என்றபோதிலும், இன்றைய நிலையை விளங்கி மக்கள் விரோத நிலைப்பாடில்லாத அவசியப்படும் தீர்வை நோக்கி நகர்கின்றனர்.அதன்பொருட்டு தத்தம் தரப்பு தீவிர வாதிகளை சமாளிக்கும் பொறுப்பு அவர்கள் தலைகளில். சிரிய விவகாரத்தில் ரசியத் தலையீட்டால் ஈராக் – ஆப்கானிஸ்த்தான் போல் வீறுநடை போட இயலாமல் போன அமெரிக்கா இந்த மாறும் உலகச் சமநிலையில் எங்களைப் பகடைக்காயாக்கிக்கொள்ள இடமளிக்காதிருக்க எவையெல்லாம் அவசியமோ அவற்றை முன்னெடுப்போம்.

– ஆசிரியர் –


**2013 November**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சர்வதேசப் போராளியின் உயிர்ப்பும் அர்ப்பணிப்பும்

ந.இரவீந்திரன்



டாக்டர் நார்மன் பெத்யூன்

இது ஒரு நூலுக்கான உப தலைப்பு. இன்றைய எமது இருப்பில் உலக சமூகம் எமக்காக ஏதும் செய்து உய்யமாட்டோமா என்பதாக தமிழ்த் தேசியத்துக்கு தலைமை தாங்கும் வக்கற்ற நிலை நிலவும் காரணத்தால் அந்த நூலை எல்லாரோடும் உரையாட எடுப்பது நல்லது எனப்பட்டது. ஜூலை மாதத்தில் அந்தச் சர்வதேசப் போராளி சிறுவனாய் ஓடியாடி விளையாடி, வாழ்ந்த கிராமத்துக்கும் நினைவில்லமாக இன்று பேணப்படும் வீட்டுக்கும் சென்று பார்த்துவர இயலுமாயிருந்ததால் இந்த நூலை மீண்டும் கையில் எடுக்க நேர்ந்தது. 'டாக்டர் நார்மன் பெத்யூன்' கதை (ஒரு சர்வதேசப் போராளியின் உயிர்ப்பும் அர்ப்பணிப்பும்) எனும் இந்த நூலை சிட்னி கார்டன், டெட் ஆலென் என்போர் எழுதியுள்ளனர். தமிழில் சோ.பிரபாகரன் தடையற்ற வாசிப்புக்கு உகந்ததாகத் தந்துள்ளார். மூல நூல் 1952இல் எழுதப்பட்டு,1971, 1973 களில் மீட்டுருவாக்கப்பட்டது. அந்தப் பொலிவடைந்த பிரதி 2006 இல் சவுத் விஷன் பதிப்பகத்தால் 415 பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

பதிப்பாசிரியர் எம்.பாலாஜி தனது பதிப்புரையை '1980 இல் மதுரை தியாகராசர் பொறியியல் கல்லூரியில் ஜனநாயக சமத்துவ உரிமைகளுக்காகப் போராடிய இந்திய மாணவர் சங்கத்தைச் (sfi ) சேர்ந்த இரண்டு அற்புதத் தோழர்கள் சோமு – செம்புவைச் சாதி வெறியர்கள் படுகொலை செய்தனர். இந்தத் தமிழ்ப் படைப்பை அவ்விரண்டு தோழர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து – ஆயிரமாயிரம் நார்மன் பெத்யூன்களை, கொட்னீஸ்களை, சோமு – செம்புக்களை உருவாக்கப் பாடுபடுவோம் என சபதமேற்று அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்' எனும் வார்த்தைகளுடன் நிறைவு செய்திருந்தார். நோர்மன் பெத்யூனுடன் இணைத்து சொல்லப்படும் கோட்னீஸ் இந்திய டாக்டர்.பெத்யூன் கனடாப் பிரஜை. இருவரது கல்லறைகளும் சீனத்தலைநகர் பெய்ஜிங்கிற்கு தென்கிழக்கே உள்ள ஷிக் சா சுவாங்நகரத்திலுள்ள வீரத்தியாகிகளின் கல்லறைத் தோட்டத்தில் அருகருகே உள்ளன. இருவரும் ஜப்பானின் ஆக்கிரமிப்புக்கு எதிரான சீன மக்களின் விடுதலைப் போராட்டத்தில் யுத்தகளத்தில் வைத்தியப் பணியாற்ற சென்று பணியின் போது தமது உயிர்களையும் ஈர்ந்தவர்கள்.

நூலின் இறுதிப் பந்திக்கு முந்திய பந்தி இதன் பொருட்டு கவனிப்புக்குரியது. 'அந்தக் கல்லறைகளின் சூழலும், வடிவமைப்பும், உலகத்தின் இதயத் துடிப்பை உணர்ந்த கலைஞர்களால் படைக்கப்பட்டது. இங்கே இந்த அருமையான பூங்காவில், மரங்களின் மெல்லிய காற்று மட்டுமே அங்கேயுள்ள அமைதியைக் கெடுக்கும் சூழலில், யுத்தத்தில் இறந்த இரண்டு மாபெரும் மனிதர்கள், கறுப்பர்கள் மற்றும் வெள்ளையர்களின் சகோதரத்துவத்தையும், ஆசிய – அமெரிக்க சகோதரத்துவத்தையும் வலியுறுத்தும் வண்ணம் அங்கே நிரந்தரமாய் துயில் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரும் சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தை படைக்க வேண்டும் எனக் கனவு கண்டவர்கள் மட்டும் அல்லாது, காயத்தை ஏற்படுத்துபவர்களின் அதிகாரத்தை அழிக்க வேண்டும் என்றும் விரும்பியவர்கள் ஆவார்கள்' (ப.415).

வீரம்செறிந்த போராட்டக் களத்தில் தம்மை அர்ப்பணித்தவர்களை உலகுக்கு எடுத்துக்காட்ட போர்க்குணத்தை அடையாளமாக்காமல் இதென்ன கலை என எண்ணலாம். பெத்யூன் வெறும் வைத்தியராயும் போராளியாயும் மட்டும் இருந்தவரல்ல. முழுமையான மனிதராக வாழ்ந்தவர். அதன் காரணமாக நூலாசிரியர்கள் பெத்யூனின் குறிப்புகள் பற்றிக் கூறும்போது 'குண்டுவெடிப்பு, தெருக்களில் நடக்கும் கொலை பற்றி விளக்கமாக எழுதினார். இருந்தாலும் அது போதாது என்றும், தான் இத்தனை மாதங்களாய் அனுபவித்த சாவைப் பற்றிய அனுபவங்களையும் கொடூரங்களையும், கலை மட்டுந்தான் சரியாக எடுத்துச் சொல்லும். ஏனெனில் கலைதான் 'மெய்யான, ஒருவர் உணரக்கூடிய அனுபவக் குழந்தையாகும்'எனக் கூறியிருந்தனர்(209). 'ஏனெனில் இப்புத்தகத்தில் அவரது வாழ்க்கையையும், அவரது கருத்துகளையும், அவரது ஆவணங்கள் மற்றும் சாசனங்கள் மூலமாகவே தெரிந்துகொள்ளும் படி விளக்கியுள்ளோம்'(vii ) என்ற நூலாசிரியர்கள் முன்னதாக வழங்கிய வாக்குமூலத்துக்கு அமையக் கூடியவரை நோமன் பெத்யூனின் குறிப்பேட்டில் அவர் எழுதிய விடயங்களைத் தந்துள்ளனர்.அந்த மரண விளைச்சல் மலிந்த யுத்த களத்தில் ஓய்வொழிச்சலின்றி ஒவ்வொரு உயிரையும் காக்கப் போராடிய போதும் கிடைக்கும் நேரத்தில் மக்கள் அரசுக்கும், கனடா– அமெரிக்காவில் உதவும் அமைப்பினருக்கும் அறிக்கைகளை எழுதுவதோடு இத்தகைய அபிப்பிராயங்களையும் எழுதிக்கொண்டிருந்துள்ளார். 'கலைஞனின் வேலை என்பதே பாதிப்பு ஏற்படுத்துவதுதான். அவனது பணி என்பது தூங்கிக்கொண்டிருப்பவர்களை விழித்தெழ வைப்பதுவும், மனநிறைவுற்ற சுவர்களை ஆட்டி எடுப்பதுவும்தான். அவன் உலகத்தின் பழைய இருட்டிப்போயிருந்த நமது குலமரபை ஞாபகப்படுத்தி, தற்போதைய உலகைக் காட்டி,அதன் புதிய பிறப்பிற்கான வழியைச் சுட்டிக்காட்டுவான். அவன் ஒரேநேரத்தில் காலத்தின் விளை பொருளாகவும் காலத்தின் ஆசானாகவும் இருப்பான். அவன் நம்மை விட்டுப் போனால் நாம் மிக எளிதான ஏற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்தத்தை குறித்தே சரியான உறுதிப்பாடு எடுக்கமுடியாது, திணறிப்போவோம். அவன் எளிதற்றவற்றைக் கூட, நிலையானதாகவும், நிறுவப்பட்டதாகவும், உறைந்துபோனதாகவும் ஆக்கிவிடுவான். மாற்றத்தினால் பயந்துபோயிருக்கும் இந்த உலகத்திற்கு, அவன் புரட்சியை போதித்தான்புரட்சிதான் வாழ்க்கையின் தத்துவம். அவன் கிளர்ச்சியாளன் அமைதியைக் கெடுப்பவன். வேகமாகவும், பொறுமையற்றும், நம்பிக்கையுடனும், அமைதியற்றும், ஆரவாரத்துடனும் செயற்படுபவன். அவன் தான் மனிதனுடைய ஆத்மாவுக்குள் உள்ள படைப்பு, மற்றும் சக்தியாவான்'' என்பது பெத்யூனின் குறிப்பேட்டுப் பதிவு(210).

இது தொடர்பில் இந்நூலைத் தமிழாக்கித் தந்த சொ.பிரபாகரனின் இந்த வார்த்தைகள் கவனிப்புக்குரியான "பெத்யூன் வெறும் மருத்துவர் மட்டுமல்ல ஒரு கலைஞர். கலைஞர்கள் எப்போதும் படைப்பாளிகளாய்த்தான் இருப்பார்கள். பெத்யூனைப் படிப்பவர்கள் யார் வேண்டுமானாலும் படைப்பாளிகளாக முடியும் எனும் நம்பிக்கையை விதைப்பதுதான் இப்புத்தகத்தின் வெற்றி. படைப்பாளி தனது படைப்பின் சிகரத்தைத் தொட எந்தவித தியாகத்தையும் செய்யத் தயாராய் இருப்பின், அந்தப் படைப்பாளியின் மரணத்திற்குப் பிறகும்கூட, அந்தப்படைப்பாளியின் படைப்பு மற்றவர்களை உந்திக்கொண்டிருக்கும்' (xx ).

சான்ஸி – சாஹர் – ஹோபெய் எனும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போர்முனையில் இரண்டு ஆண்டுகள் மருத்துவப் பணியாற்றிய போது பல கிராமங்களிலும் ஊடாடினார் நோர்மன். காயப்பட்ட போராளிகளுக்கு மட்டுமன்றி மக்களுக்கும் வைத்தியப் பணிபுரிந்தார். இதன்பேறாய் சூ என் எனும் சீனப் பெயரில் அழைக்கப்படுகிற அளவில் சீன மண்ணோடு கலந்தவரானார். இவ்வகையில் அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டறக்கலக்கக் காரணமாய் அமைந்தது சீனக் கொம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் முன்னெடுக்கப்பட்ட மக்கள் விடுதலைப் போராட்டம் நீரில் மீன் போலப் போராளிகளை மக்களோடு உறவாட ஆற்றுப்படுத்தியிருந்த பண்பு ஆகும். அவ்வகையில் கட்சியை வழிநடத்துவதில் பல தலைமைத் தோழர்கள் உழைத்தபோதிலும் மாஓ சேதுங்கின் நெறிப்படுத்தல் பாங்கு விதந்துரைத்தலுக்குரியதாகும். தனது பணியை மேற்கொண்ட 1937 இல் மாஓவை அவர் சந்தித்து அளவளாவிய விபரம் ஆறு பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

மாஓவுக்கும் ஆழ்ந்த நம்பிக்கையைக் கொடுத்து நோமன் பெத்யூன் விடைபெற்ற அப்பகுதியின் இறுதி வாசகங்கள் இவை "ஏன் மாஓவினால் தான் போகும் வழியில் உள்ளவர்கள் அனைவரையும் ஈர்க்கமுடிகிறது என்பதற்கான காரணம் தற்போது சரியாகப் புரிகிறது. அந்த மனிதர் பேராற்றல் படைத்தவர்! அவர் இன்றைய உலகத்தில் உள்ளதில் உள்ள மகத்தான மனிதர்களில் ஒருவர்" (252 – 3). அத்தகைய மகத்தான தலைவருக்கே நம்பிக்கையை வலுப்படுத்திய அம்சத்தில்தான் பெத்யூனின் மருத்துவப் பணி நுட்பம் உறைந்திருந்தது. முன்னதாக காயப்பட்டவர்கள் மருத்துவமனையில் இருக்கும் வைத்தியரை நோக்கிக் கொண்டுவரப்படுவதாக இருந்தது. வரும் வழியிலேயே பலரும் இறந்துபோவர். போர்முனையுடன் நகரும் மருத்துவப் பணி மேற்கொள்ளப்படின் 75% இறப்பைத் தவிர்க்க இயலும் என பெத்யூன் கூறுவதை மாஓவால் நம்பமுடியாமல் இருந்தது. உலகப் புகழ் பெற்றுள்ள இந்த சத்திர சிகிச்சை நிபுணரை யுத்த முனையில் நடமாடும் வைத்தியப் பிரிவாக அனுப்புவதா? அத்தனை தொகையானவர் காப்பாற்றப்பட இயலுமெனில் இந்தப் பயங்கரச் சோதனையில் இறங்காமலும் இருக்க முடியாது. மீண்டும் மீண்டும் கேட்டார். நோமன் பெத்யூன் உறுதியாகக் கூறியதன் பேரில் மாஓ இறுதியில் சம்மதித்தார். தனது அந்த உறுதிப்பாடு வெறும் தம்பட்டமல்ல எனக்காட்டும் வகையில் அவர் ஆற்றிய பணியில் பலரும் காப்பாற்றப்பட்டதும், தனக்குப்பின் பணி தொடரப் பலரையும் பல்வேறு தளங்களில் (டாக்டர்,நேர்ஸ்,ஓடலி என்பதாக) பயிற்றுவித்தமையும் விடுதலைப் போராட்டத்தில் சீன மக்கள் வெற்றிபெற உதவியுள்ளது.

இதன் காரணமாக நோமன் பெத்யூன் மீது அளவற்ற பாசத்தை சீன மக்களும் சர்வதேச வாதிகளும் கொண்டுள்ளனர். சிறுவனாக இருந்தபோதே, சத்திரசிகிச்சை நிபுணரான தனது தாத்தா நோமன் அவர்களால் ஆகர்சிக்கப்பட்டு இத்துறையைத் தெரிவுசெய்தவர் பெத்யூன் (தன்னை நோமன் என அழைப்பதை அவர் பெரிதும் விரும்பியமைக்கு இந்த வைத்திய நாட்டம் காரணமாயிருந்தது). உயர்படிப்பை மேற்கொண்ட காலத்தில் முதலாம் உலகப் போர் மூண்ட நிலையில் படிப்பை இடைநிறுத்தி கனேடிய இராணுவத்தில் இணைந்து யுத்தகளத்துக்கு செல்கிற அளவில் துடிப்புமிக்கவராக விளங்கினார். அது ஏகாதிபத்திய நலன் சார்ந்தது என்பதும், மக்கள் நலனாட்டப் பாதை இன்னொன்று என்பதையும் அனுபவங்களூடாகக் கற்றுக்கொண்டார். அதனை வழங்குவதில் பாசிசத்துக்கு எதிரான ஸ்பெயின் குடியரசின் போராட்டத்தில் பங்கேற்றமை காரணியாக அமைந்தது. அங்குதான் இரத்த மாற்று, களத்தில் நேரடிச் சிகிச்சையின் அவசியம் என்பவற்றை உணர்ந்து நடைமுறைப்படுத்தியிருந்தார்.

அப்போது அவருக்கு மார்க்சியத்தின்பால் ஈடுபாடு வலுப்பெற்றது. நாடு திரும்பிய பின்னர் கொம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்த நிலையிலேயே சீனாவுக்கு உதவும் அமெரிக்க – கனடா அமைப்பின் ஏற்பாட்டில் சீனா சென்றார். இந்த சமூக விடுதலை நாட்டம் வலுத்தபோது தனது துறைசார் அறிவையும் திறனையும் விருத்தி செய்ய மறந்ததில்லை. டொரொண்டோ, பேர்லின், லண்டன், வியன்னா, நியூயோர்க் எனப் பல நகர்களிலும் வளர்ந்த வைத்தியத் தொழில் நுட்பத்தைக் கற்றுத்தேர்ந்தார். உள்ளதில் திருப்தியுறாது மாற்றங்கள் வாயிலாக மேலும் நுட்பத்திறன் மிக்கதாக்க தனது அறிவையும் உழைப்பையும் அர்ப்பணித்தார். பெத்யூன் கருவி என்பதாகவே உபகரணங்கள் வழக்கில் வந்தன. அதன் வருமானமும் ஆய்விலே கரையும். வெறும் சாகச நாட்டம், சாதனைப்போதை என்பதைக் கடந்து மக்கள் விடுதலையில் நாட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலுப்பெறுவதற்கு 39 வயதில் மரணத்தை நெருங்கிய காச நோய்த்தாக்கமும் காரணியாயிருந்தது. "சாவை எதிர்கொள்ளும் பாக்கியம் பல மனிதர்களுக்குக் கிடைப்பதில்லை. சாவை எதிர்கொள்ளும்போது தான், ஒருவன் தனது வாழ்க்கையின் உண்மை மதிப்பை தெரிந்துகொள்கின்றான். பிறகுதான் அவன் வாழ்கின்றான்" (10) என்பது பெத்யூன் இறப்பின் எல்லையைத் தொடுவதாக உணர்ந்த நோய்க்கால நினைவு. நோயிலிருந்து மீள வழியை தானே தேடி, அதற்கான சத்திர சிகிச்சைப் பிரேரணையைப் பலரும் பயந்த வேளை தன்னையே ஆய்வுகூட எலியாக ஒப்புக்கொடுத்தவர் பெத்யூன்.பின்னர் நெஞ்சுக்கூடு அறுவைக்கான கருவிகளை வடிவமைத்து பல சாதனைகளைப் புரிந்தார். இவற்றால் பணம் பெருகிய போதிலும் பணமின்மையால் இறப்பைத் தழுவும் மக்களிடம் வைத்தியம் செல்லவேண்டும் என வலியுறுத்தினார். சமத்துவ மருத்துவம் – தனியார் மருத்துவம் ஒழிக்கப்படல் என்பவற்றுக்கு கனடாவில் அமைப்பை உருவாக்கிப் போராடினார். இந்த அமைப்பாக்கங்களின் போது சோவியத் யூனியனின் சர்வதேச மருத்துவர் மாநாட்டில் கலந்து திரும்பியமை புதிய தெம்பை அவருக்கு ஊட்டியது. சில டாக்டர்கள் அங்குள்ள குறைகளைக் கூறியபோது' தற்போது ரஷ்யா தனது பிரசவத்தில் சென்றுகொண்டிருக்கிறது. தாதிகளும், மகப்பேறு மருத்துவர்களும் குழந்தையை உயிரோடு காப்பாற்றுவதற்குப் பரபரப்பாகத் திரிந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அந்தக் குழப்பத்தைச் சரிப்படுத்தி முடிக்கவில்லை. எல்லாம் குழம்பித்தான் கிடக்கின்றன. இந்த வசதியற்ற குழப்பமும், இந்த அசிங்கமும் தொற்று நீக்கிய ஆன்மாவை உடைய பயந்துபோன திருமணமாகாத ஆண்கள் மற்றும் பெண்களின் கண்களைப் பகிரங்கமாக உறுத்துகின்றன. மூக்கைச் சுழிக்க வைக்கிறது. இந்த இரத்தத்தின் பின்னுள்ள முக்கியத்துவம் வாய்ந்த பிறப்பைப் பார்க்கும் கற்பனைவளம் அவர்களுக்கு இல்லை என வாதிட்டார் நோமன் பெத்யூன்(118).

அவர் நம்பிக்கை வைத்த விடுதலையும் புத்துலக சாத்தியப்பாடும் அவரது மரணத்தின் பின் ஒரு தசாப்தத்தில் சீனாவில் எட்டப்பட்டது. ஆயினும் மேலாதிக்கசக்திகளின் சூழ்ச்சிகளும் விடுதலை நாடும் சக்திகளின் தவறுகளும் இன்னமும் குழப்பங்களை வளர்த்துவிட்டுள்ளன.அவர் நாடிய புத்தாக்க நெறியாக மாக்சியத்தைக் காணத்தவறி மாறா நிலைப் புத்தகவாத வரட்டுச் சூத்திரங்களில் உழல்வோர் புதிய நோமன் பெத்யூன்களால் உலுப்பப்பட அவசியமுள்ளது.அதன் பொருட்டு அவர் பற்றிய இந்த நூலைக் கற்போம். நோமன் பெத்யூன் 1890மார்ச் 3இல் பிறந்து 1939நவம்பர் 13இல் தனது இதயத் துடிப்பை நிறுத்திக்கொண்டவர். டிசெம்பர் 21,1939 நினைவஞ்சலி உரையில் மாஓ குறிப்பிட்ட இந்த இக்குறிப்புரையை நிறைவு செய்வோம்: "லெனினிசம் உலகப் புரட்சியைப் பற்றிப் பேசுகிறது. உலகப் புரட்சி வெற்றிபெற வேண்டுமெனில், முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளி மக்கள், காலனிய மற்றும் அரைக் காலனிய நாடுகளில் உள்ள மக்களின் விடுதலைக்காக உதவ வேண்டும் என்றும், அதுபோலவே காலனிய மற்றும் அரைக் காலனிய நாட்டில் உள்ள பாட்டாளிமக்கள், முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளிகளுக்கு உதவ வேண்டும் என்றும் லெனினிசம் கூறுகின்றது. தோழர் பெத்யூன் லெனினினது இந்தத் தத்துவத்தை நடைமுறைப் படுத்தியவர். சீனக் கொம்யூனிஸ்ட்டுகளாகிய நாமும், இந்தத் தத்துவத்தை நடைமுறைப் படுத்த வேண்டும். நாம் முதலாளித்துவ நாடுகளிலுள்ள அனைத்துப் பாட்டாளிகளையும் இணைக்க வேண்டும். ஜப்பானிய, பிரித்தானிய, அமெரிக்க, ஜேர்மனிய, இத்தாலிய மற்றும் முதலாளித்துவ நாடுகளிலுள்ள பாட்டாளிகளும் இணைய வேண்டியது என்பது அவசியம் அதுதான் ஏகாதிபத்தியத்தை தூக்கி எறிவதற்கு உதவும் ஒரே வழியாகும். இதுதான் நமது தேசத்தையும், மக்களையும் விடுவிக்கவும் உதவும். இப்படியான உணர்வுதான், நமது சர்வதேசியம். இந்த சர்வதேசியத்தைக் கொண்டுதான், நாம் குறுகிய தேசியத்தையும் குறுகிய நாட்டுப்பற்றையும் எதிர்த்து வெற்றிபெற முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# பிரமிப்பு

*நீர்வை பொன்னையன்*



'சாப்பாட்டு நேரம் பிழையான நேரத்திலை வந்திட்டமோ' வந்தமூவரும். 'பசியோடை வந்திருப்பியள். எனக்கும் பசிதான். முதலிலை எல்லாரும் சாப்பிடுவம்.பிறகு எல்லாத்தையும் கதைப்பம். சின்னத்தம்பியர் கூறுகின்றார். ஏறு நெற்றி. நெற்றியில் தாம்பாளமாய்ச் சந்தணப் பொட்டு. பிழந்து விரிந்த மார்பகம். உருண்டு திரண்ட புயங்கள். தீட்சண்ய விழிகள். சாந்த சுபாவம். பேச்சில் கனிவு. அர்த்தபுஷ்டிச் சிரிப்பு. சாப்பாட்டு மேசையைச் சுற்றி நால்வர்.

சின்னத்தம்பியரும் அவரைச் சந்திக்க வந்த மூவரும் இருப்பு. 'செல்லம் பரிமாறு.' நான்கு பெரிய தலைவாழை இலைகள். செல்லம்மா இலைகளில் கறிவகைகளைப் பரிமாறுகிறாள். இண்டைக்கு வெள்ளிக் கிழமை.அதுதான் மரக்கறிச் சாப்பாடு. 'தங்கம் சோற்றை வை.' தங்கம்மா சோற்றைப் படிக்கிறாள். 'ஓஹோ இவர் வள்ளி–தெய்வானையைக் கைப்பிடித்த முருகனோ!' சோறு ரோஸ் நிறம். சுடு சோற்றில் நெய் விடுகின்றாள் செல்லம்மா. கம கமவென்ற பசுநெய் வாசம். 'எங்கடை பசுமாட்டு நெய்.' 'மொட்டைக்கறுப்பன் அரிசிச் சோறும் எங்கடை வயலிலை விளைஞ்ச நெல்லும்' சின்னத்தம்பியர் பெருமையுடன் கூறுகின்றார். பசி வயிற்றை விறாண்டுகின்றது. பசி எண்டால் என்ன எண்டு சின்னத்தம்பியருக்கு நல்லாய்த் தெரியும். சின்ன வயதிலை சின்னத்தம்பியர் பசியிலை எத்தனை நாட்கள் துடிச்சிருப்பார். சின்னத்தம்பியர் மாத்திரமில்லை அவற்றை ஆச்சி,அக்காமாரெண்டு மூண்டு பேரும் எத்தினையோ நாட்கள் வெறு வையித்தோடை படுத்திருப்பினம். நீண்ட பெருமூச்சு விடுகின்றார் சின்னத்தம்பியர். அது பழங்கதை. 'எல்லாரும் சாப்பிடுவம்.ஏன் தயங்கிறியள்? எப்பிடித் திடீரெண்டு உங்களுக்கு சாப்பாடு சமைச்சதெண்டு யோசிக்கிரியலா? நீங்கள் வருவியள் எண்டு உங்களுக்கு சாப்பாடு சமைக்கேல்லை. இண்டைக்கு எங்கடை வயலிலை சூடு மிதியல். ஏழெட்டு ஆக்கள் அங்கை வேலை செய்யினை. அவைக்கும் அவையின்டை குடும்பங்களுக்கும் சேத்துத்தான் சமைச்சது.' 'நீங்கள் மூண்டு பேர் சாப்பிட்டா போல குறைஞ்சா போகப்போகுது? சரி,எல்லாரும் சாப்பிடுவம்.' கூறிக்கொண்டே சாப்பிடத் தொடங்கினார் சின்னத்தம்பியர். சின்னத்தம்பியர் சாப்பிடுகின்றார்.ஆனால் அவரது மனசு எங்கோ தொலை தூரத்துக்குச் சென்று சஞ்சரிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல எத்தினையோ நாட்கள் எண்டை ஆச்சி,நான் அக்காமார் எல்லாரும் பட்டினியாக் கிடந்தம். நாங்கள் சின்ன வயதாயிருக்கும் போதே அப்பு செத்துப்போனார். எங்களுக்கு சொந்தமாய் தோட்ட நிலமில்லை.கூலிப் பிழைப்புத்தான்.என்னாலை எந்த வேலையும் செய்யேலாது. ஆச்சியும் அக்காக்களும்தான் கூலி வேலைக்குப் போவினை. வேலை கிடையாத நாட்களிலை எல்லாரும் பட்டினி. ஆச்சியாக்கள் வேலைக்குப் போய்விடுவினை. காலையிலை நாங்கள் எல்லாரும் அரைகுறைச் சாப்பாடுதான். சிலநாளிலை அதுவுமில்லை. நான் எங்கடை படலையடியிலை நிக்கிற பூவரச மர நிழலிலை இருப்பன். வெய்யில் ஏற ஏற எனக்கும் பசி ஏறிக்கொண்டிருக்கும். எங்கடை கை ஒழுங்கையாலை ஆக்கள் போவதும் வருவதுமாயிருப்பினை. சிலர் தங்கடை தோட்டங்களிலை இருந்து மரவள்ளிக் கிழங்கு சுமையோடை வருவினை. சில நாளையிலை சின்னையாப் பொடியன் மரவாள்ளிக் கிழங்குச் சுமையோடை எங்கடை படலையடியாலை வருவான். 'தம்பி,தம்பி எனக்கு கடுமையாப் பசிக்குது மோனை. ஒரு கிழங்கு தா மோனை.நான் சுட்டுத் தின்ன. நான் மன்றாடிக் கேப்பன். சிலவேளை அந்தத் தம்பி மனமிரங்கி ஒரு கிழங்கைத் தரும். நான் சுட்டுத் தின்னுவன். சின்னத்தங்கச்சி அக்கா ஒரு சில நாளையில் நார்க் கடகத்திலை பனம்பழங்கள் சுமந்துகொண்டுவருவா. 'அக்கா, என்ர ஆசை அக்காவல்வே. எனக்குப் பசிக்குதெனை. நான் சுட்டுத்தின்ன ஒரு பனங்காய் தாணை. நான் சுட்டுத் தின்ன.' நான் இரண்டு கைகளையும் நீட்டி அவவை மண்டிக் கேட்பன். அவ இரக்கப்பட்டு எனக்கு ஒரு பனம்பழத்தை தருவா, நான் சுட்டுத் தின்னுவன். சிலவேளை ஏதாவது கிடைக்கும். ஒண்டும் கிடைக்காட்டி அம்மாக்கள் வருமட்டும் பட்டினிதான். நாப்பது வரியங்களாகியும் நான் இதுகளை மறக்கேல்லை.

'தம்பிமாரே, நல்லாய்ச் சாப்பிடுங்கோ. ஒருநாளும் வயித்துக்கு வஞ்சகம் செய்யக்கூடாது.' செல்லம், தங்கம் தம்பியளுக்கு என்ன வேணும் எண்டு பார்த்து வையுங்கோ.' 'சோற்றை அவைக்கு வைத்து மோர் விட்டு ஊறுகாயும் வையுங்கோ. இல்லாட்டி மிளகு ரசம் விடுங்கோ.' செல்லம் – தங்கம் ஆக்களைப் போலை என்ரை அக்காக்கள் மூண்டு பேரும் நல்ல லட்சணம். அவை ஒவ்வொருத்தராய் வெளியூர்க்காரங்களை கலியாணம் கட்டிக்கொண்டு போச்சினை. இடைக்கிடை எப்பாலும் அவை எங்களை எட்டிப் பார்ப்பினை. அவையின்ரை பாடும் கஸ்டம்தான். என்ரை ஆச்சியாலை வேலை செய்யேலாமல் வந்திட்டுது. அவவுக்கு கைகால் மூட்டு வலி. அப்பம் சுட்டு வித்தா. அதுவும் நட்டத்திலை போச்சுது. ஒண்டுக்கும் ஏலாத்தன்மையிலை ஆச்சியும் நானும் கடைசியிலை பிழைப்புத்தேடி வன்னிக்கு வந்து சேர்ந்தம். முல்லைத்தீவு எங்களுக்குத் தஞ்சம் குடுத்தது. அந்தப் பகுதியில உள்ள ஆக்கள் எங்களுக்குக் கைகுடுத்து உதவிச்சினை. முதலில ரோட்டுக்கரையிலை உள்ள ஒரு பெரிய வேப்ப மரத்துக்குக் கீழை ஒரு சின்னக் கொட்டிலைப் போட்டம்.

தொடக்கத்திலை தேத்தண்ணி,வடை, சுண்டல் வித்தம். படிப்படியாய் வியாபாரம் கூடிச்சுது. முதலிலை வேப்ப மர நிழலிலை களைப்பாறுறதுக்கு வண்டிலை நிப்பாட்டிறவை தேத்தண்ணி குடிச்சினை. பிறகு லொறிகாறர், பஸ்காறரும் தங்கடை வாகனங்களை நிப்பாட்டிச்சினை. எங்களுக்கு யாவாரம் க்ளைகட்டிச்சுது. இடியப்பம், புட்டு,தோசை எண்டும் பிறகு சோறும் விக்கக்கூடியதாய்க் கடை பெரிசாய் வந்திட்டுது. வெறும் தேத்தண்ணிக் கடையாய்த் துவங்கினது அமுதசுரபி ஹோட்டலாய் வளந்தது. துவக்கத்திலயிருந்து நான் காசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையிலதான். ஒருகட்டத்திலை ஆச்சியாலை வேலை செய்யேலாமல் போச்சுது. நான்தான் முழுப்பொறுப்பும். சமையலுக்கு இரண்டு பேர். சாப்பாடு பரிமாற மூண்டு பேர். காசுமேசையிலை நான்.

எங்கட ஹோட்டலில் இருந்து கல்லெறி தூரத்திலை ஒரு காணிவாங்கி வசதியான ஒரு வீடு போட்டம். எங்கடை வீட்டுக்குப் பக்கத்திலை தம்பிமுத்தற்றை வீடு. அவருக்கு இரண்டு பெண்பிள்ளைகள்.தாய் சிறு வயதிலேயே செத்துப்போனா. தம்பிமுத்தர் கடலில் பிழைப்பு. அவற்றை மூத்த மகள் செல்லம்மாவைத்தான் கல்யாணம் கட்டினன். ஐஞ்சு குடமாகியும் எங்களுக்கு குழந்தை கிடைக்கேல்லை. செல்லம்மாவின்ரை ஆலோசனைப்படி அவளின்ரை தங்கை தங்கம்மாவின்ர முழுச் சம்மதத்தோடை அவளைக் கல்யாணம் கட்டினன். தங்கம்மாவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இரண்டு வாரியங்களுக்கு பிறகு செல்லம்மாவுக்கும் ஒரு ஆண் குழந்தை கிடைச்சுது. அதுக்குப் பிறகு எங்களுக்கு நாலு குழந்தைகள்எல்லாமா ஆறு.

அமுதசுரபி வளர்ச்சி கண்டது. அதேடை நான் ஒரு நெல்லு வயலையும் கொள்முதல் செய்தன். நாப்பது பரப்பு.வயலும் வருடாவருடம் நல்ல விளைச்சல் கண்டு வருகுது. கொழும்பு ஓட்டத்துக்கு இரண்டு லொறிகள். முல்லைத்தீவிலிருந்து மீன், கருவாடு கொழும்புக்கு அந்த லொறியளிலை அனுப்பிவைக்கப்படும். கொழும்பிலையிருந்து சீனி, மா போன்ற சாப்பாட்டுச் சாமான்களை இஞ்சை ஏற்றிவரும் அந்த லொரியள். பெற்றோல் நிலையத்தை எனக்கும் செல்லம்மாவுக்கும் பிறந்த மகன் செல்லையா நடத்துறான். கொழும்பு ஓட்ட லொறியளுக்கு எங்கடை மகன்மார் செல்லத்துரையும் சுப்பிரமணியமும் பொறுப்பு. நான் இப்பவும் அமுதசுரபி மேசையிலை தான்.

திடீரென ஆச்சி இறந்துபோனா. எனக்கு எல்லாம் முடிஞ்ச மாதிரி. ஆனா என்ரை செல்லமும் தங்கமும் என்னைத் தாங்கிப்பிடிச்சுக் கொண்டு இருக்கினை. என்ரை பிள்ளையளும் எனக்கு பக்கபலமாயிருக்குதுகள். வீட்டு நிர்வாகத்தையும் வயல் பராமரிப்பையும் செல்லமும் தங்கமும் சீராக நடத்தினை. வயல் மூண்டு போகங்களும் நெற்செய்கை. ஆறேழு பசுமாடுகளைப் பராமரிக்க ஒரு ஆள் சமையல் வேலைக்கும் வளவைப் பராமரிக்கவும் ஒரு பெண் இவர்கள் செல்லத்தின் மேற்பார்வையில் வயல் வேலைக்கு தங்கத்தின் பொறுப்பில் ஆறு ஏழு பேர். ‘தம்பியள் சாப்பிட்டு முடிஞ்சுதா? எப்பிடிச் சாப்பாடு?’ சின்னத்தம்பியர். சாப்பாடெல்லாம் பிரமாதம் பெரியவரே. இப்பிடியிருக்கும் எண்டு நாங்கள் நினைக்கேல்லை.’ மூவரும் ஏககாலத்தில். சரி இப்ப நீங்கள் வந்த விசயத்துக்கு வருவம். எதுக்காக நீங்கள் என்னைப் பாக்க வந்தியள்?’ சின்னத்தம்பியர் அவர்களைக் கரிசனையுடன் கேட்கிறார், எங்கடை ஊருக்கு மேற்குப் பக்கமாய் கிடக்கிற காணியிலை ஒரு பள்ளிக்கூடம் கட்டினம். அந்தக் காணி பத்துப்பரப்பையும் இறந்துபோன தன்ரை கணவன் ஆறுமுகம் ஆசிரியருடைய மனைவி பள்ளிக்கூடம் கட்டிறத்துக்கு நன்கொடையாக் குடுத்தது. பள்ளிக்கூடத்துக்கு மூண்டு அறையள் கட்டி முடிச்சம். தலைமை ஆசிரியருக்கு ஒரு அறை. மற்ற இரண்டும் சின்ன வகுப்பறைகள். இரண்டு வகுப்புகள் மர நிழலில் நடக்குது. அடுத்தவரியம் ஐந்தாம் வகுப்பு துவங்க இருக்கு.அதுதான் இன்னும் மூண்டு வகுப்பறையல் கட்ட நினைக்கிறம். மூண்டு புதிய வகுப்பறையள் கட்டிமுடிக்க நிதி சேர்க்க முடிவெடுத்திருக்கு.

‘இது நல்ல முயற்சிதான்.’ சின்னத்தம்பியர் ஆமோதிக்கிறார். ‘நிதி சேர்க்கிறதுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிட்டைத்தான் முதல்முதலாய் வந்திருக்கிறம்.' வந்த மூவரில் ஒருவர் தயங்கித் தயங்கிக் கூறுகின்றார். (தம்பியள் எங்கடை வீட்டுக்குக் கிட்ட ஒரு பள்ளிக்கூடம் இருந்துது. அது வேதப் பள்ளிக்கூடம். அங்கை மூண்டாம் வகுப்புவரைதான் இருந்துது. நான் அங்கைதான் படிச்சனான்.

அந்தப் பள்ளிக்குடத்திலை இரண்டு வாத்திமார்தான் படிப்பிச்சவை. அவையிரண்டு பேரும் கணவனும் மனைவியும். அந்தப் பள்ளியிலை ஏழைப் பிள்ளையள்தான் படிச்சுதுகள். பெம்பிளைப் பிள்ளையள் கந்தல் அழுக்குச் சட்டையளோடை வருங்கள். ஆம்பிளைப் பிள்ளையள் அழுக்குத் துண்டை அரையிலை கட்டிக்கொண்டு வருவினை. மேல்சட்டை இல்லை. அதுக்கு வழி இல்லை. அந்தப் பள்ளிக்குடம் காலை ஒன்பது மணிக்குத்தான் துவங்கும்.சில பிள்ளையள் ஒன்பதரை பத்து மணிக்குத்தான் வருங்கள். ஏன் பிந்தி வாறியள் எண்டு அதுகளைக் கேட்பாரில்லை. அங்கை படிப்பிக்கிற வாத்தியாராக்கடை வீடு பள்ளிகுடத்தோடை தான். அந்த வாத்தியாரம்மா தங்கடை மத்தியானச் சாப்பாடு சமைச்சுப்போட்டு தங்கடை வீட்டு வேலையள் எல்லாம் செய்து முடிச்சுப்போட்டுத்தான் பள்ளிக்குடத்துக்கு வருவ. பள்ளிக்கூடத்துக்கு கிணறில்லை. பக்கத்து வீட்டுக்காறற்றைதான் கிணறு. அவை தண்ணி அள்ளி ஊத்தினாத்தான் நாங்க தண்ணி குடிக்க முடியும். இல்லாட்டி நாங்கள் வீட்டை போய்த்தான் தண்ணி குடிக்க வேணும். எனக்கு படிக்கவேனுமெண்ட ஆசை. ஆனா நான் மூண்டாம் வகுப்புவரை தான் படிக்க முடிஞ்சுது. மூண்டாம் வகுப்புக்கு மேலை படிக்க வேணுமெண்டால் தெருவுப் பள்ளிக்கூடத்துக்குத் தான் போக வேணும். அங்கை போறதுக்கு நல்ல உடுப்பு வேணும். நல்ல உடுப்பு வாங்க எங்களிட்டை காசில்லை. தெருவுப் பள்ளிக்கூடம் தூரத்திலை இருக்கு. வாதப்பள்ளிக்கூடத்துக்கு ஆச்சி என்னை தன்ரை ஒக்கலையிலை தூக்கி வைச்சுக்கொண்டுதான் போறவ.ஆச்சியாலை என்னை தன்ரை இடுப்பிலை தூக்கி வைச்சுக்கொண்டு தூரத்திலை உள்ள தெருவுப் பள்ளிக்கூடத்துக்கு போக ஏலாது. மூண்டாம் வகுப்போடை என்ரை படிப்பு முடிஞ்சுது. மேலை படிக்க வேணுமெண்டு ஆசை. ஆனா படிக்க முடியேல்லை எண்ட கவலை எனக்கு.

சரி தம்பியள்,என்னட்டை நீங்கள் வந்த விஷயத்தை இப்ப எனக்கு சொல்லுங்கோ. எதுக்கு வந்தனியள்?'' 'உங்களிட்டைத்தான் நாங்கள் முதல் முதல் வந்திருக்கிறம்.' நிதி சேர்க்கும் பட்டியலை நாங்கள் அவரிடம் குடுக்கிறம். அவர் குறைஞ்சது ஒரு பத்தாயிரம் ரூபாவாவது போடுவார் எண்ட எதிர்பார்ப்பு எங்களுக்கு. அவர் நிதிப் பட்டியலை எங்களிட்டையிருந்து வாங்கேல்லை.

எங்களுக்கு அதிர்ச்சி. 'அப்ப நாங்கள் இவ்வளவு தூரத்திலை இருந்து இவரிட்டை வந்தது வீண்தானா? நாங்கள் நூற்றைம்பது மைல் தூரத்திலையிருந்து வந்திருக்கிறம். அப்பிடி இருந்தும் நாங்கள் வெறுங்கையோடை திரும்பிப் போக வேணுமோ? இவரை நம்பி நாங்க வந்தது வீணாச்சு. எங்களுக்குப் பெரும் ஏமாற்றம்,கவலை.

போனவரியம் நாலு தொண்டர்கள் எங்கடை ஊரிலை இருந்து இவரிட்டை வந்தினை. அவையள் மத்தியானம் இவற்றை வீட்டிலை பசியாறின பிறகு,என்ன விசயமாய் நீங்கள் என்னட்டை வந்தனியள் எண்டு அவையளைக் கேட்டார். எங்கடை ஊரிலை உள்ள பிள்ளையார் கோயிலுக்கு ஒரு புதுக் கோபுரம் கட்டப் போறம் எங்கடை ஊரிலையுள்ள மற்ற மூண்டு கோயில்களின்ரை கோபுரங்களை விட உயரமானதாய் கட்டிறதுக்கு முடிவெடுத்திருக்கிறம். அதுதான் உங்களிட்டை முதல் முதலாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறம் எண்டு அவை சொல்லிச்சினை. 'தம்பியள்,வேறை ஏதாவது நல்ல விசயத்துக்கு நிதி உதவி கேட்டு நீங்கள் வாருங்கோ. நான் தாராளமாய், நிச்சயம் நிதி உதவி செய்யிறன்'எண்டு அவர் சொல்லி வெறுங் கையோடை அவையளைத் திருப்பி அனுப்பிப் போட்டார்.

அதைப்போலை இவர் எங்களுக்கும் சொல்லப்போறாரோ? 'தம்பியள் இப்ப நீங்கள் ஊருக்குப் போங்கோ.' எங்களை வெறும் கையோடை திரும்பிப் போகச் சொல்லிறாரே இவர். இவரை நாங்கள் நம்பி வந்ததுதான் பெரும் பிழை. ஒரு மனிசனா? எங்களுக்கு எரிச்சல் ஆத்திரம். நீங்கள் ஊருக்குப் போன கையோடை, உங்கடை பள்ளிக்குடத்துக்கு தேவையான மூண்டு வகுப்பறையளைக் கட்டி முடிக்கிறதுக்கு எவ்வளவு தொகை பணம் தேவைப்படும்? அதுக்கான ஒரு எஸ்ரிமேற்றை எடுத்து உடனடியா அனுப்புங்கோ. என்ன இவர் சொல்லுறார்? எங்களுக்கு ஒண்டும் புரியேல்லையே. அதுக்குத் தேவையான முழுத் தொகைப் பணத்தையும் நான் உடனை உங்களுக்கு நிச்சயமாய் அனுப்பி வைப்பன்.' உறுதியுடன் கூறுகின்றார் சின்னத்தம்பியர். இதை எங்களால் நம்ப முடியேல்லை. நாங்கள் தயக்கத்துடன் அவற்றை முகத்தைப் பாக்கிறம். 'நீங்கள் ஒண்டுக்கும் தயங்க வேண்டாம்.நான் சொன்னால் சொன்னதுதான்.' அவர் திடமாய், உறுதியாய்க் கூறுகிறார்.

எங்களுக்குப் பேராச்சரியம். ஆனால் ஒரு நிபந்தனை. என்ன நிபந்தனை பெரியவரே? நாங்கள். கட்டட வேலையை கெதியாய்ச் செய்து முடிக்கவேணும். நாங்கள் நிச்சயமாய்ச் செய்து முடிப்பம். ஒப்புக்கொள்கின்றோம். இன்னொரு முக்கிய விசயம் என்ன பெரியவரே? பிள்ளையள் தண்ணி குடிக்க அந்தப் பள்ளிக்கூட வளவுக்கை கிணறு இருக்கா? இல்லை. பக்கத்து தோட்டத்திலையுள்ள கிணத்திலைதான் தண்ணியள்ளி ஊத்தவேணும்.' நாங்கள் கூறுகின்றோம். 'பள்ளிக்குட வளவுக்கை ஒரு கிணறு வெட்டி கட்டி முடிக்க வேணும். அதுக்கு எவ்வளவு செலவாகும் எண்ட எஸ்ர்றிமேற்றும் எடுக்க வேண்டும். இரண்டு வேலையளையும் செய்து முடிக்க எவ்வளவு பணம் தேவைப்படும் எண்டு இரண்டு எஸ்றி மேற்றுகளையும் எடுத்து உடனடியாக எனக்கு நீங்கள் அனுப்பி வையுங்கோ. அதுக்கான முழுத் தொகைப் பணத்தையும் நான் உங்களுக்கு உடனை அனுப்பி வைப்பன்.'

அறுதி, உறுதியாகக் கூறுகிறார் சின்னத்தம்பியர். பூரண திருப்தியுடன் நாங்கள் புறப்படுகிறோம். குழந்தையாய்த் தரையில் தவழ்ந்து வந்து எங்களை வழி அனுப்பி வைக்கின்றார்.

தவழ்ந்து வந்த அவரைப் பார்த்து எங்களுக்குப் பிரமிப்பு .

## பாரதி ஆய்வில் விபுலானந்தர்

முதன் முதலில் பாரதியாரின் பெரும்பான்மையான பாடல்களை திறனாய்வு செய்தவர் எனும் நோக்கில் சுவாமி விபுலானந்தர் பாரதியின் முதல் திறனாய்வாளர் ஆவார். இவருக்கு முன்பு தமிழ் அறிஞர் திருநெல்வேலி ஏ.வி சுப்பிரமணிய ஐயர் பாரதியாரின் தேசிய பாடல்களை மட்டும் ஆங்கிலத்தில் திறனாய்வு செய்துள்ளார். இந்தக் கட்டுரை அன்னிபெசன்ட் அம்மையாரின் 'நியூ இந்திய' எனும் நாளேட்டில் 1919 சூன் 7ம் தேதி அன்று வெளிவந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களே உங்கள் மாண்பை இழிவு படுத்த இடந்தராதீர்கள்

-உங்கள், டொக்ரர்
எம்.கே.முருகானந்தன்

'எப்ப ஏதாவது நல்ல காரியம் சுப காரியம் நடந்தாலும், வெளியிலை' என்று சொல்லிக் கொண்டு இவள் 'நிற்பாள்' என்ற நக்கல் பேச்சைக் கேட்காத பெண்ணா நீங்கள்?நிச்சயம் அதிர்ஷ்டசாலிதான். மாதவிடாய் என்பது வழமையாக நடைபெறும் இயற்கையான செயற்பாடு. ஆனால் பெண்கள் பலருக்கும் இடைஞ்சலாக இருப்பதை மறுக்க முடியாது. அந்த நேரத்தை சிறுநீர் கழிப்பது போல சிம்பிளாக சாதாரணமாக எடுத்துக் கொண்டு சகசமாக உலவக் கூடிய பெண்கள் ஒரு சிலர்தான். ஆனால் பலருக்கும் சனிட்டரி பாட்ஸ் அணிந்து கொண்டு வழமையான வீட்டு வேலைகள் செய்வதும், பணிக்குச் செல்வதும் பாரிய இடைஞ்சல், அசௌகரியம், மன உளைச்சல். அத்துடன் குருதி இழப்பினால் ஏற்படும் களைப்பும், ஹோர்மான் மாற்றங்களால் உண்டாகும் உடல், மன உபாதைகளும் தொல்லை கொடுக்கும்.

இதை புரிந்து கொண்டு ஆதரவாக நடப்பது எங்காவது ஓரிரு ஆண்கள்தான். ஏதோ தூங்குவதும் விழித்தெழுவதும் போன்ற சாதாரண நிகழ்வாக எடுத்துக் கொள்கிறார்கள். அவளுக்கு அது மாதா மாதம் வருகிறதே, அதோடை எவ்வளவு சிரமத்துடன் எல்லா வேலைகளையும் கவனிக்கிறாள் என எண்ணுவதே கிடையாது. ஆனால் ஏதாவது மத, சமூக, காலாசார சடங்குகள் என வரும்போதுதான் அது ஆண்களின் கண்களைக் குத்தும். இதனால் ஏதாவது மங்கள காரியம் அல்லது சமயச் சடங்கு வருகிறதென்றால் முதல் தவிப்பு பெண்களுக்கே. அடுத்த 'சுகயீனம்' எப்ப வரும் என்பதை கணக்கிட்டுப் பார்ப்பதே முதல் வேலையாக இருக்கும். காரியத்திற்கு சுகயீனம் இடைஞ்சலான நாள் என்றால் சுபகாரியத்தைப் பிற் போட முடியாது. மாதவிடாயை சுலபமாகப் பிற்போடலாம் என்ற 'மருத்துவ ரகசியம்' எல்லோருக்குமே இப்பொழுது அத்துப்படி. கலியாணம், காதுகுத்து, சாமத்தியச் சடங்கு, வீடு குடிபுகுதல் முதல் எது வந்தாலும் வீட்டில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் தள்ளிப் போட வேண்டும் என்பார்கள். இது தேவைதானா? சில வேளை பிறந்த நாள் கொண்டாட்டத்திற்கும் கூட. கோயில் பூசை. திருவிழா, காப்புக்கட்டு, சரஸ்வதி பூசை, எந்த விரதம் என்றாலும் கேட்கவே வேண்டாம். தள்ளிப் போட வேண்டியதாக இருக்கிறது.




மகனுக்கு கல்யாணமாம் ஆனால் தங்கச்சிக்காரிக்குத்தான் தள்ளிப் போட வேண்டுமாம். இது என்ன நியாயம்.?? மணப்பெண்ணுக்கு தள்ளிப் போட வேண்டுமெனில் அது ஒத்துக்கொள்ள வேண்டிய விடயம்தான். ஆசையோடு தவமிருந்த புதுமாப்பிளைக்கு கோபம் வரும் என்பதால் மறுப்புச் சொல்ல முடியாது. ஆனால் தங்கச்சிக்கும் மாமியாருக்கும், தோழிப் பெண்ணுக்கும் தள்ளிப் போடு என்பது சரியா? 'பேய்க் கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையாதை....‘ ‘..எங்கடை கலை, கலாசாரம் எல்லாவற்றையும் சீரழிச்சுப் போட்டுத்தான் வேறை வேலை பாப்பியள் போலகிடக்கு. இதோடை எப்படி மங்கள நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது?’ என்பார் தாத்தா. சரியான நியாயம் போலத் தோன்றுகிறதா? அப்படியானால் நீங்களும் அவரது சாடிக்கு மூடிதான். வேட்டி உடுத்து குடுமியும் வைத்திருந்த தாத்தா இன்று டவுஸர் போட்டு பெல்ட்டும் கட்டியது மட்டுமல்ல, தலைமுடிக்கு டை அடித்து இளவட்டம் போலத் திரிகிறாரே, அதற்கென்ன பெயர். இதுவும் கலாசார சீர்கேடா? இரண்டுமே காலாசார சீர்கேடல்ல. காலம் மாறும்போது எமது பழக்கவழக்கங்கள் மாறுகின்றன. கருத்துக்கள் மாறுகின்றன. கொள்கைகள் மாறுகின்றன. நம்பிக்கைகள் சீர் குலைகின்றன. அது நியதி. காலையில் பழங்கஞ்சி குடித்த எமது சமுதாயத்திற்கு இன்று காப்பி, தேநீர் இல்லையென்றால் ‘விடிய மாட்டேன்’ என்கிறதே அதுபோலத்தான். ‘கலாசார சீர்கேடு விஷயத்தை விடு.’ ‘இது சுகாதாரம் சம்பந்தப்பட்டது. இதோடை எப்படி கண்ட இடமும் திரியிறது‘ என்பார் மற்றொருவர். இரத்தமும் சீழும் வடியிற அழுக்குப் புண்ணுக்கு மருந்து கட்டிக்கொண்டு கோயில் குளம், சாமியறை, சமையலறை எல்லாம் கூச்சமின்றித் திரிவார்கள். அதில் சுகாதாரக் கேடு இல்லையென்றால், பெண்களின் இந்த இரத்தத்தில் மட்டும் என்ன சுகாதாரக் கேடு இருக்கப் போகிறது. அழுக்குப் புண்ணில் கிருமி தொற்றியிருக்கிறது அது சுகாதாரக் கேடு. ஆனால் பெண்களில் கசிவது புது இரத்தம். கிருமித் தொற்று எதுவும் கிடையாது. வாயால் எச்சில் வழிகிறது, மூக்கால் சளி ஒழுகுகிறது. அதைத் துடைத்து விட்டு சகல வேலைகளையும் செய்கிறோம்தானே. அதை விட மேலானது பெண்களின் இந்த மாதாந்த இரத்தப் போக்கும். அதோடை திரிவதும், அதைத்தள்ளிப் போடுவதும் அவர்களது இஷ்டம். ஆணாதிக்க நிலைப்பாடுதான் பெண்களை துடக்கென்றும், விலக்கென்றும் அந் நாட்களில் விலக்கி வைப்பதும், விலகியிருக்க நிர்ப்பந்திப்பதுமாகும்.


அதற்கு பெண்கள் தாங்களாகவே அடிபணிவதா? ஏற்கனவே சொன்னது போல மாதப்போக்கு என்பது ஒரு சாதாரண நிகழ்வு. சுவாசப்பையானது காற்றை உள்ளும் வெளியும் சுவாசிப்பது போல, ஆண்களுக்கு விந்து உற்பத்தியாகி வெளியேறுவது போல, கண்ணீர் சிந்துவது போல இதுவும் ஒரு சாதாரண உடலியல் செயற்பாடு. இதில் வெட்கப்படுவதற்கோ, அசிங்கப்படுவதற்கோ எதுவும் இல்லை. ஆண்டாளும், உமாதேவியும், கன்னி மேரியும் கூட இதற்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. அவர்களுக்கு வந்ததுதான் இன்றைய பெண்களுக்கும் வருகிறது. ‘அவர்கள் புனிதமானவர்கள், தெய்வீகப் பிறவிகள். அவர்கள் இவற்றிற்கு அப்பாற்பட்டவர்கள்’ என்று யாராவது சொன்னால், அவர்களைப் பெண்கள் என்றே சொல்லமுடியாது என்பேன். எனவே மாதவிலக்கு நாட்களிலும் ஏனைய நாட்களில் உண்பதுபோல, உடுப்பதுபோல, தொழில் புரிவதுபோல செயற்படலாம். கோயிலுக்கும் போகலாம். திருமணத்திற்கும் போகலாம். விரதமும் பிடிக்கலாம். ஆசார பூச்சாண்டிகள் காட்டி பெண்களைப் பயமுறுத்தாதீர்கள். சுகாதார விதிகளைக் கூறித் தனிமைப்படுத்தாதீர்கள், பண்பாட்டுப் பெருமைகளைக் கூறி அவர்களை முடக்கி வைக்க முயலாதீர்கள். தள்ளிப் போடுவதிலும் தவறெதுவும் இல்லை. அதிலும் முக்கியமாக கடுமையான வலி, உதிரப் பெருக்கு அல்லது அவளது வேலைக்கு இடைஞ்சலாக இருந்தால் மட்டும். மருத்துவ ரீதியாகப் பார்த்தால் மிக அவசிய தேவைக்காக ஒரு சில நாட்கள் தள்ளிப் போடுவதில் பாதிப்பில்லை என்றே சொல்கிறார்கள். மாறாக, கோயில், விரதம், நல்லநாள், ஆசாரம், சுகாதாரம் போன்றவற்றிற்கெல்லாம் தள்ளிப்போடுவது பெண்கள் தங்களைத் தாமே, தமது பெண்மையை, தமது மாண்பை இழிவு படுத்தும் செயல் என்றே நான் சொல்வேன். ‘சரி, நீ தள்ளிப் போடாவிட்டால் கிட. நாங்கள் நிகழ்ச்சிக்கான திகதியைத் தள்ளிப் போடுறம்’ என்றால் ஏற்றுக் கொள்ளலாமா?

உங்களுக்காக விட்டுக் கொடுப்பது போலக் காட்டிக் கொண்டே உங்கள் பெண்மையை அவமதிக்கும் கபட நாடகம் இது. மசிந்து கொடுக்காதீர்கள். ஆனால், தள்ளிப் போடுதல் தவறில்லை. அது உங்களுக்காக மட்டுமே, அதுவும் உங்கள் உடற் தேவைகளுக்காக மட்டுமே இருந்தால்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமையும் புதுமையும்

**க. கைலாசபதி**



கடந்த சில காலமாக எமது இலக்கிய உலகிலே பல விதமான வாதப் பிரதிவாதங்களும், கருத்து மோதல்களும் காணப்படுகின்றன. இவை இயக்கத்தின் இனங்காட்டிகள். வளர்ச்சியின் அறிகுறிகள். ஆயினும் எந்த மோதலையும் போல இங்கும் குழப்பம் விளைந்துள்ளது. குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்ளும் நிலை ஏற்படும் ஆபத்தும் தோன்றியுள்ளது. எனவே இன்றைய இலக்கிய நிலையை சற்று நிதானமாக நோக்குவது பயன் தரும் செயலாகும்.

### மூன்று பொருள் பற்றியன

எம்மிடையே கேட்கும் குரல்கள், உரத்த குரல்கள் மூன்று பொருள் பற்றியன. 1. பண்டைய இலக்கியம். 2. புதிய இலக்கியம். 3. இலக்கியமும், அரசியலும். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று விரோதமானவை என்ற அடிப்படையிலேயே வாதப்பிரதிவாதங்கள் நடந்துள்ளன. நடைபெறுகின்றன. மூன்று பொருள் பற்றியும் பலர் உணர்ச்சிவசப்பட்டு வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசிப் பேசி உள்ளனர்.

பண்டைய இலக்கியங்களை நன்கு படித்தவர்கள் எந்தச் சமுதாயத்திலும் வெகு சிலரே. எனினும் காலத்தின் மதிப்புடன் நிலவுவனவாகையால், அவை பவித்திரமானவை எனும் நம்பிக்கை இயற்கையாகப் பலரிடம் குடிகொண்டுள்ளது. பெரும்பாலானோரைப் பொறுத்தவரையில் இது வெறும் மூட நம்பிக்கையே என்பதில் ஐயமில்லை. ஆயினும் நம்பிக்கை நம்பிக்கைதான். அதன் சக்தியை நாம் மறந்துவிடலாகாது. அதுமட்டுமன்று. எமது பழைய இலக்கியங்களிற் பெரும்பாலானவை நிலப்பிரபுத்துவ, முடியரசுக்காலச் சமூக அமைப்பின் நிழலிலே தோன்றியவை. சைவ சமயக் கோட்பாடுகளுடன் பின்னிப் பிணைந்தவை. ஏற்றத்தாழ்வு நிறைந்த சமூக உறவுக் கருத்துக்களைத் துணையாகக் கொண்டவை. இவை அழுக்குப்பிடியுடன் ஒட்டிக்கிடப்பன. தாமே இலகுவில் மாறா. வாழ்க்கை நிலை மாறும்போதுதான் உணர்வும் மாறுகின்றது. பண்டைய இலக்கியங்களையே படிக்கும் வாய்ப்பும், அவை காட்டும் வாழ்க்கை முறையில் பற்றும் கொண்டவர்களைப் பழமை விரும்பிகள் என்பது எளிது. ஆனால் அது பெருமைப்படக்கூடிய விஷயமன்று. கவலைக்குரிய விஷயம். பழமை விரும்பிகள் ஏன் அவ்வாறு தொடர்ந்து இருக்கின்றனர் என்று கேள்வியைத் தொடங்குவது சிறிது பயனுள்ள முயற்சியாகும். அதே சமயம் பழமை விரும்பி என்று ஒருவருக்கு பட்டம் சூட்டும்போது, எதிர்ப்பக்கத்தில் நிற்பவர்களுக்கும் பழமைக்கும் எத்தகைய தொடர்பும் இல்லையென்னுங் கருத்துத் தொனிக்கிறது. அது சரியா? இல்லை! உண்மையில் ஒருவர் பழமையை விரும்புகிறார் என்பதல்ல முக்கியம். பழைய கலை இலக்கியம் பற்றி தவறான கருத்துக்கள் கொண்டிருக்கிறார் அல்லது பழம்பெரும் படைப்புக்களைத் தவறாக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதே மனங்கொள்ள வேண்டியதாகும். அதற்கு பழைய இலக்கியங்களிற் காலத்தாற் சாகாத கருத்துக்கள் எவையெவை என்பதும் மனிதனை வாழ்விக்கும் கருத்துக்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன என்பதும் எமக்குத் தெளிவாயிருத்தல் அத்தியாவசியம். பண்டைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியங்களெல்லாம் பவித்திரமானவை என்னும் கருத்து மூட நம்பிக்கையாயின் அதன் மறு தலையும் மூட நம்பிக்கையேயாகும்.

**பழைய கனவும் புதிய நனவும்**

வையத்தில் மனிதருக்கு விடுதலையும், நல்வாழ்வும், சகல விதமான இன்பங்களும் கைவசப்படல் வேண்டும் எனும் கனவு தொன்றுதொட்டே விழையப்பட்டுள்ளது. எமது பண்டைய இலக்கியங்கள் இவ்வுண்மைக்கு விதிவிலக்கல்ல. வரலாற்றுப் போக்கிலே எமது இலக்கியத்தில் முற்போக்கான புரட்சிகரமான – மக்களையளாவிய சனநாயகக் கருத்துக்கள் ஏன் தோன்றின என்றும், எப்படித் தோன்றின என்றும் பின்னர் எப்படி வலுவிழந்தன என்றும் தெள்ளத்தெளிவாக உணர்வது இலக்கிய ஆசிரியனுக்கு இன்றியமையாதது. ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஆட்சி பீடத்திலிருக்கும் ஆளும் வர்க்கம் மனிதனின் உணர்வையும், சிந்தனையையும் தனது ஏதேச்சாதிகாரத்திற்கு ஏற்ப பயன்படுத்த முனைகிறது. புரட்சிகரமான உணர்வுகளை வளைத்தும், சுளித்தும், திசை திருப்பியும் முடியுமாயின் அடக்கியும் வழிநடத்துகின்றது. ஆனால் இம்முயற்சிகளையெல்லாம் உதறித் தள்ளிக்கொண்டு நசுக்கப்படும் மக்கள் முன்னேறுகின்றார்கள். அவர்களின் இதயச்சுமையும், உடல் வருத்தமும் சிலரின் இலக்கிய வாயிலாகக் கனிகின்றது. வணிக வர்க்கத்தின் பிடியிற் சிக்கி பிறமொழி, பர சமயம் ஆகியவற்றைப் பின்பற்றிப் பொது மக்களின் நல்வாழ்வைக் கவனியாத பல்லவ மன்னனின் கட்டளையை உதாசீனஞ் செய்து " யாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்று புரட்சிக்குரல் எழுப்பிய அப்பர் தனது காலத்து முற்போக்கான அணியில் நின்றவரே யாவர். வரலாற்று வளர்ச்சியில் சதா காணப்படும் இது போன்ற எண்ணற்ற முரண்பாடுகள் எல்லாம் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையிலேயே தோன்றுவனவே. இப்போராட்டமே வரலாற்றை இயக்கும் சக்தியாகும். இந்நிலையில் பழைய இலக்கியங்களைத் தள்ளி வைத்தால் காலூன்ற இடமின்றி ஆகாயத்தில் மிதப்பவராகி விடுவோம். முதலாளித்துவ தத்துவவாதிகளும் அறிஞர்களும் பழம் பெருமையைக் கூண்டிலடைத்து வைத்துக் காட்டுபவர்கள் என்று ஓரிடத்தில் ஸ்டாலின் கூறியுள்ளார். கூண்டிலடைத்துள்ளனர் என்பதற்காக நாமும் அதனைப் புறக்கணிக்க முடியுமா? அவர்களின் பின்னோக்குச் சிறையிலிருக்கும் பழைய செல்வங்களை எமதாக்கி முன்னோக்கிச் செல்பவருக்குத் துணையாக்குதல் வேண்டும்.

**இலக்கியங்களும் வர்க்க வேர்களும்**

பழைய சமுதாயங்களில் இலக்கிய கர்த்தாக்கள் கண்ட கனவுகள் பெருமளவிற் கனவுகளாகவே இருந்தன. முதலாளித்துவ சகாப்தத்திலே வர்க்கபேதம் நிறையப் பெற்ற தொழிலாளரும், விவசாயிகளும், முற்போக்கணியைச் சாரும் சிந்தனையாளரும் பிறரும் கனவை நனவாக்கும் அமைப்பு முறைகளையும், தத்துவப் படைக்கலத்தையும் மக்கள் சக்தியையும் கைவரப் பெற்றுள்ளமையால் புதியதொரு சமுதாயத்தை அமைப்பது சாத்தியமாயுள்ளது.

காற்றிலேறி விண்ணையுஞ் சாடுவோம் சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம் என்றெல்லாம் பாரதி போன்ற கவிஞர் கண்ட கனவுகள் விஞ்ஞான வளர்ச்சியால் நாளடைவிலே நடைமுறை சாத்தியமாகி வருவதைப்போல பசியும் பிணியும் இன்றி வசியும் வளனும் நிறைந்த சமுதாயக் கனவுகள் மாக்சிச லெனினிச தத்துவ நெறியால் உண்மையாக்கப்பட்டு வருகின்றன. ஆமாம் பழைய கனவுகள் புதிய பொருள் பெறுகின்றன.

பழைய இலக்கியங்களையும், புதிய படைப்புக்களையும் மாறுகொள வைத்து ஒப்புநோக்காமல் இரண்டனுக்கும் ஊடாக இழையோடி வரும் ஒற்றுமைச் சுருதியைத் தெளிவாக்குதல் அவசியம். அப்பொழுது பழமை விரும்பியின் கண் புதுமையைப் பார்க்கக் கூடாது. இது நடைபெறுவதற்கு இரண்டு வழியுண்டு. ஒன்று பழைய இலக்கியங்களின் வர்க்க வேர்களைக் கண்டறிந்து அவற்றின் அரசியற் சமூக அமைப்பு முறைகளைத் தெளிவாக்கி அவற்றிற்குப் பாதகமாகவோ பல்வேறு படைப்புக்கள் தோன்றியுள்ளமையைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த முறையிற் காட்டுதல் வேண்டும். இரண்டு பழைய இலக்கியங்களின் குறை நிறைகளைத் தராசில் நிறுத்திக் குறைபாடுகளை எவ்வாறு எமது கால மாற்றங்களினால் நிறைவாக்க முடியும் என்பதை நிலைநாட்ட வேண்டும். இதன் விளைவாகப் பண்டையப் புலவர் பலரும் இன்றை எழுத்தாளனுக்குமுள்ள வாய்ப்பு வசதி வேறுபாடுகள் புலனாகும். உதாரணமாக, இடைக்காலத்திலே வாழ்ந்த காளமேகப் புலவர், படிக்காசுப் புலவர், இரட்டையர் முதலியோர் தத்தங்காலத்து சமூக நிறுவனங்களைக் கிண்டல் செய்தும், உயர் சாதிக்காரர், தலைமைக்காரர், ஆட்சியாளர் முதலியோரை நையாண்டி செய்தும் பல பாடல் எழுதியுள்ளனர். அன்ன சத்திரத்தை நடத்துபவர் செய்யும் தகிடு தத்தத்தையும், ஏழை விவசாயிகளைப் பண்ணைக்காரர்கள் நடத்தும் அதிகார முறையையும், விபசாரம் ஆணையும், பெண்ணையும் மிருக நிலைக்கு இழிவு படுத்தும் அவலத்தையும் வரட்டு கௌரவம், போலிப்பக்தி முதலியவற்றின் பரிதாபகரமான நிலைமையும் வரண்டு வாடிய மலட்டுப் பாண்டித்தியத்தினதும் செப்பிடுவித்தைப் புலமையினதும் திசையறியாத் தயக்கத்தையும், பிறவற்றையும் இப்புலவரின் படைப்புகளிலே உய்த்துணரலாம். இன்றைய எழுத்தாளன் மேற்கூறிய புலவரின் வழித்தோன்றலே. அவர்களைவிட இன்றைய எழுத்தாளனுக்கு வாய்ப்பும் வசதியும் நிரம்பியுள்ளன. அவர்கள் தனிப்பட்ட முறையில் வெந்து வெம்பிய உள்ளக் குமுறல்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் குறிப்புரையாகவும் இலக்கியங்களிற் படைத்தனர். இவற்றையெல்லாம் அறியும் இன்றைய எழுத்தாளனுக்குக் கூட்டு முயற்சியின் அனுபவம் உண்டு. மார்க்சிசம், லெனினிசம் காட்டும் சித்தாந்த ஒளியுண்டு. உலகப் புரட்சியின் படிப்பினைகள் உள்ளன. நவ யுகத்தின் அத்தனை வாய்ப்புக்களுமுள. எனவே தனிமையில் கூனிக் குறுகாமல் நிமிர்ந்து நடக்க நெஞ்சத் தைரியமுண்டு. ஆனால் அன்றைய எழுத்தாளன விட்ட குறையைத் தொட்டாலன்றி தொடங்கு நிலை தெளிவாகாது. புதுமையிலக்கியம் படைப்பவர்கள் சங்கிலிப் பின்னல் போல வளர்ந்துள்ள மனிதாபிமானப் பண்பின் உரிமைக்காரர் என்பதை உணர வேண்டும். மரபு மரபாக இலக்கியம் படைத்த பெருமக்களின் பணியானது விளலுக்கு இறைத்த நீரல்ல. அது மக்களின் உரிமையாகிவிட்டது. அது எமது முன்னோர் அளித்த அருஞ்செல்வம். அதனைப் பழம்பெருமை என்னும் இன மொழி மதச் சிறையில் பூட்டித் தனியுரிமை கொண்டாட எவருக்கும் உரிமையில்லை. பொதுச் சொத்து உண்மையில் பொதுவுடமையாக வேண்டும்.

### அரசியலும் இலக்கியமும்

வரலாற்று அடிப்படையிலே நோக்கும்போது காலப்பகுதிகளில் எல்லாம் அரசியல், இலக்கியத்தைப் பந்தித்துப் பாதித்துள்ளமை புலனாகும். மனிதன் ஓர் அரசியல் ஜீவன் என்று பண்டைய கிரேக்க தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் கூறினான். அரசியல் மக்களின் வாழ்க்கையைத் தழுவியுள்ளது. அதே நேரத்தில் மக்கள் அரசியலை உருவாக்கி வழி நடத்துகின்றனர். இவ்விரண்டு சக்திகளும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத உறவுடையன. ஒருவர் அரசியலில் இருந்து விட்டு விடுதலையாகுவேன் என்பது புவியீர்ப்பு சக்தியிலிருந்து விடுபடுவது போன்றதே. இலக்கிய கர்த்தாவிற்கும், அரசியலுக்கும் தொடர்புண்டா இல்லையா என்பது தேவையற்ற வீண் விவாதம். எத்தகைய அரசியலில் எந்தளவு ஈடுபாடு கொண்டுள்ளார் என்பதே பயன் விளைக்கும் கேள்வியாகும். பரணரிலிருந்து பாரதிதாசன் வரை முரஞ்சியூர் முடிநாகராயரிலிருந்து முருகையன் வரை எல்லோரும் வகையிலும், அளவிலும் வேறுபாடுகளுடன் அரசியல் வட்டத்தில் இயங்குபவரே. இதனை நிலைநாட்ட வேண்டியதில்லை. தானே புலப்படும் உண்மையாகும். இதனால் மேற்கூறிய புலவரெல்லாம் கேவலம் அரிசியல்வாதிகள் என்று யாரும் கூறுவாரோ? கூறமாட்டார்! கூறமாட்டாராகவே, அரசியலும் இலக்கியமும் முரணானவை என்னும் பிரமை வாதம் அடிபட்டுப் போகும். கார்ல் மார்க்ஸ் எழுதிய கம்யூனிஸ்டு அறிக்கை ஓர் அரசியல் சாதனம். வர்க்க பேதமுள்ள சமுதாய அமைப்பை மாற்றி வர்க்க பேதமற்ற எதிர்கால அறிவுலகை அமைக்கக் கோரும் அறைகூவல்.

இது யாமறிந்த செய்தி கம்பன் காட்டும் அயோத்தி வருணனை முடியாட்சியில் நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பின் வரம்பிற்குள் பிணி, வறுமை, கல்விக்குறை மனத்துயர், ஏற்றத்தாழ்வு முதலியன இல்லாதிருக்க அவாவிய வெளிப்பாடு. கம்பன் கண்டது கனவு. கம்யூனிஸ்டு அறிக்கை அதனை நனவாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும் என்று காட்டியது. கம்பன் அரசியல்வாதியா? கம்பனின் அயோத்தி வருணனைக்காக, அவனைக் கொள்ளவும் வேண்டாம். தள்ளவும் வேண்டாம். ஆனால் தனது காலத்து அரசியலிலிருந்து அவனால் விலக முடியவில்லை என்னும் அடிப்படை உண்மையை உணர்ந்தாற்போதும். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றுமறியேன் என்று மனங் குழைந்த ஞானியும், "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்று கர்மவீரம் பேசிய நாவுக்கரசரும் தத்தங்காலத்து இலக்கிய வடிவிற் கனவு கண்டவரே. அவரெல்லாம் அரசியலிலிருந்து தூரப்போனவரல்லர்.

எனவே பழமையையும் புதுமையையும் இயைபு நோக்கி இணைத்து, அமைதி காணும் பொழுது அவ்விடத்திலே ஆதார சுருதியாகக் கேட்பது, சமூக பொருளாதார அரசியல் இயக்கக் குரல்களே. உதாரணமாக தீந்தமிழ்க் காப்பியமாம் சிலப்பதிகாரத்தை நோக்குவோம். முத்தமிழ் வளமும் காவிய நயங்களும் இலக்கிய உத்திகளும் பிறவும் பொதியப்பட்ட அப்பெட்டகத்தின் பெருமை அரசியலை தழுவியே அமைந்துள்ளது. "மாதவி மடந்தை கானற் பாணி கனகவிசயர்தம் முடிதலை நெரித்தது" என்று இளங்கோ பாடுகையில் கானல் வரிக்கும் அரசியற் செய்தியான வடநாட்டு போருக்கும் உள்ள பிணைப்பு தெரிந்துவிடுகின்றது. அதுமட்டுமன்று. இளங்கோவடிகளே தனது காப்பியத்தின் நோக்கங்களை விபரிக்கும் பொழுது "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதனைக் காட்ட முனைந்தேன்" என்கின்றார். இளங்கோ கேவலம் அரசியற் பிரசாரகர் என்று எவரும் கூறுவாரோ? இவ்வாறிருக்க சிலப்பதிகாரத்தை முத்தமிழ்ச் சிறையில் அடைத்து மகிழும் பழமை விரும்பிகளை ஒருபுறம் விட்டு விட்டு நாமே அதன் உண்மையான உரிமையாளர் என்பதனை உணர்ந்தால், காவியாசிரியர் இளங்கோவைப் போல நமது கால இலக்கிய கர்த்தாக்களும் "குடி மக்கள் காப்பியம்" படைக்கலாமன்றோ! முடியரசின் அந்தரங்க வாழ்வையும், பகிரங்க வாழ்வையும் நடுவிலிருந்து கண்டறிந்த அவர், அரசின் அழைப்பிதழ்களைக் காட்டினாரென்றால், மக்கள் மத்தியில் வாழக்கூடிய இன்றைய எழுத்தாளன் அரசாங்கங்களின் கட்சிகளின் வர்க்கத்தின் – நெறிப்பிறழ்வை நேரிதாகச் சித்திரிக்கலாமன்றோ.

இந்த விடத்தில் மாசே – துங் கலை இலக்கியம் பற்றிக் கூறியது பொருத்தமாகும். "நமது நாட்டிலும், பிற நாடுகளிலும் சென்ற காலத்திற்றோன்றிய கலை இலக்கியப் படைப்புக்கள் நதிமூலமன்று. பிரவகித்து வரும் பேராறு. மூதாதையர் அவரவர் காலத்து மக்கள் வாழ்விலே காணப்பட்ட கலைப் பண்புகளிலிருந்து படைத்த இலக்கியச் செல்வங்களை எமதாக்குவதுடன், அவற்றைத் திறனாய்ந்து தெளிந்து அவற்றுட் குணமிக்கவற்றைக் கொண்டு, நாமும் எமது காலத்து மக்கள் வாழ்விற் காணப்படும் கலைப் பண்புகளைச் சிறந்த படைப்புகளாக்குதல் வேண்டும். "பழைய இலக்கியங்களை அணுக இதை விடச் சிறந்த மார்க்கம் இருக்க முடியாது. பொருள் உற்பத்திச் சாதனங்களையும், அதன் வழியாகப் பெறும் அரசியல் ஆதிக்கத்தையும் முதலாளித்துவ வர்க்கத்தினின்றும் மீட்டெடுத்து புதிய சமுதாய உறவு முறைகளையமைத்து, வரலாற்றை மாற்ற முனையும் பெரும் பணியின் – உலகப் புரட்சியின் ஓர் அங்கமே இலக்கியப் போராட்டம். பழைய இலக்கியங்களின் காவலர்கள், பாதுகாப்பாளர் என்று தம்மைத் தாமே கூறிக் கொள்பவர்கள் அவற்றைச் சிறையிலடைத்ததன் காரணமாக உரிமையிழந்து விட்டனர்.

நிகழ்காலத்தை உருவாக்குபவனே சென்ற காலத்துக்குச் சொந்தக்காரனாகின்றான். இது வரலாற்று நியதி. இவ்வுண்மையை மனதிற்கொண்டு "வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபில் யானுமொருவனன்றோ" எனப்பாடிய வள்ளலார், பாரதி முதலியோரைப் போல நாமும் "கலை கலைக்காக" என்னும் விரக்திக் கீதம் இசைப்பவரை விட்டுவிட்டு, மார்க்சிச லெனினிசத்தின் ஒளியில் பழமையைப் போற்றுவோமாக. "நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்!!!"

**வசந்தம் – 1965**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக தேசியம் பற்றி தோழர் இளஞ்செழியனின் சமூகநோக்கும் பங்களிப்பும்

லெனின் மதிவானம்

இவ்வாண்டு (2013) தோழர் இளஞ்செழியன் இந் நாட்டிற்காகவும் அடக்கியொடுக்கப்பட்ட மக்களுக்காகவும் தன் வாழ்நாளை அர்பணித்தவர். ஒரு நசுக்கப்பட்ட சமூகத்திலிருந்து தோன்றுகின்ற இவ்வாறான ஆளுமைகள் இரு வழிகளில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதை வரலாறு எமக்கு புதிய படிப்பினையாக தந்துள்ளது. ஒன்று தம்மைதாமே சுத்திகரித்துக் கொள்ளல், இரண்டு தமது சமூக வளர்ச்சிக்கு தடையாகவுள்ள எதிரிகள் மீதும் அதன் தளங்கள் மீதானதுமான தாக்குதல்கள். இளஞ்செழியனது நோக்கும் போக்கும் அது சார்ந்த முன்னெடுப்புகளும் இந்தப் பின்னணியிலே பிறக்கின்றன என்பது புலனாகுகும். குறிப்பாக மலையக மக்களின் வாழ்வுக்கான மார்க்கம். அது தொடர்பில் எழுப்ப வேண்டிய அறைக்கூவல் – அத்தகைய செயற்பாடுகள் உழைக்கும் மக்களின் நலனை பழுதுபடுத்தாமல் முன்னெடுத்து செல்கின்றதா என்றவகையில் அவர் பொறுத்தும் அவர் சார்ந்த இயக்கங்கள் பொறுத்தும் ஆய்வுகள் வெளிவரவேண்டியுள்ளது. அத்தகைய ஆய்வுகள் புதிய உலகை நிர்மாணிக்கும் அழகும் யௌவனமும் நிறைந்ததோர் நாகரிகத்தை கட்டியெழுப்ப முனைவதாக அமைய வேண்டும். அதேசமயம், இவ்வகையான ஆய்வுகளுக்கு கணிசமான அளவு சான்றாதாரங்கள் இலகுவில் கிடைக்க கூடியனவாய் இல்லை. இளஞ்செழியன் வெளியிட்ட அறிக்கைகள் தோழர்களுக்கு எழுதிய கடிதங்கள் இன்னும் இது போன்ற ஆவனங்கள் தொகுக்கப்படவில்லை. எனவே இருப்பவற்றை வைத்துக் கொண்டே நாம் இவற்றை செய்ய வேண்டியுள்ளது. இந்தப் பின்புலத்தில் மலையக தேசியத்திற்கு இளஞ்செழியனின் பங்களிப்புக் பற்றி நோக்க வேண்டியுள்ளது காலத்தின் தேவையாகும்.



இளஞ்செழியன் இந்தியாவிலே பிறந்தவர். அவர் தமது 12 இரண்டாவது வயதில் இலங்கைக்கு வந்ததாக அவரும் அவருடன் தொடர்புக் கொண்டிருந்த மூத்த தோழர்கள் சிலருடன் கலந்துரையாடியதிலிருந்து அறிய முடிகின்றது. இளஞ்செழியன் பெரியார் ஈ.வே ராமசாமி நாயக்கரின் சிந்தனையால் கவரப்பட்டவர். அவரது சமூக பண்பாட்டு கருத்தியல் தளத்தை உருவாக்குவதில் பெரியாரிய சிந்தனைக்கு முக்கிய இடமுண்டு. பெரியார் தமிழ் நாட்டில் மிக நீண்ட காலம் வாழ்ந்து பண்பாட்டுத்தளத்தில் மிக முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திய தலைவர்களில் ஒருவராவர். காலத்திற்கு காலம் அவரது சிந்தனைகளிலும் செயற்பாடுகளிலும் முரண்பாடுகள் தோன்றிய போதினும் தனக்கான தனிப்பாதையை வகுத்துக் கொண்டு பிராமணிய ஆதிக்கத்தை தகர்க்கும் வகையிலான பண்பாட்டு போராட்டத்தை முன்வைத்தவர். இந்தியாவில் இந்துத்துவம் முனைப்புற்றிருந்த சூழலில் பெரியாரால் கட்டியெழுப்பபட்ட சுயமரியாதை இயக்கமே அத்தகைய தீவிரவாதத்தின் தாக்கம் தமிழகத்தல் செல்வாக்கு பெற முடியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனமைக்கான அடிப்படையாகும். அந்தவகையில் பெரியாரினது பிராமண எதிர்ப்பு மத எதிர்ப்பு தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாகும். அவரது சாதியத்திற்கு எதிரான போராட்டத்திலிருந்து பெற வேண்டிய விடுதலைக் கூறுகள் உண்டு. அதேசமயம் மேலாதிக்கம் ஏகாதிபத்தியம் பேரினவாதம் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டத்தில் பார்பனியத்திற்கு எதிரான முனைப்புறும் முரண்பாட்டின் கூறுகள் கவனத்தில் எடுக்கத்தக்கனவாய் உள்ள அதே சமயம், வரலாற்று பொருள் முதல்வாத நோக்கில்லாத பெரியாரின் பார்பன எதிர்ப்பையும் நாத்திக வாதத்தையும் சாதிய விடுதலைப் போராட்டத்திலிருந்து பிரித்துப் பார்கின்ற நிலையும் காணப்படுகின்றது. இந்திய தேசிய போராட்டத்தில் பிராமணர்களின் பங்களிப்பை பிரித்தெடுத்து எல்லாத் தவறுகளுக்கும் பிராமணர்களே காரணம் என குறுகிய தலித்திய பார்வைகள் தோன்றுவதற்கும் பெரியாரியம் காரணமாக இருந்துள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இவ்வாறானதோர் சூழலில் பெரியாரிய உலக நோக்கை வரித்தபடியே தமது சமூக செயற்பாடுகளக்கு தளம் அமைத்துக் கொண்டவர் இளஞ்செழியன். பெரியாரிரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கம் இலங்கையிலும் செல்வாக்கு செலுத்தியது. அதன் விளைவாக 1932 ஆண்டு கொழும்பில் தோற்றுவிக்கப்பட்ட இயக்கமே இலங்கை சுயமரியாதை இயக்கமாகும்(இ.சு.இ). திரு. ந. முத்துப்பரியரை தலைவாராக கொண்டு தோற்றுவிக்கப்பட்ட இவ்வியக்கத்தில் இளஞ்செழியன் முக்கிய உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர். கடை சிப்பந்திகள், வீட்டு வேலையாட்கள், நகர சுத்தி தொழிலாளர்கள், சலவை, சிகயலங்கார தொழிலாளர்கள் என இன்னும் இது போன்ற தொழில்களில் ஈடுப்படுபவர்கள் இவ்வியக்கத்தில் அங்கம் வகித்தனர். கூட்டம் பொதுவாக இவர்களின் இரவு 10 மணிக்கு பின்னர் தான் நடைப்பெற்றிருப்பதை அறிய முடிகின்றது. 1932இல் பெரியாரின் இலங்கை வருகையின் போது கூட அவருடனான சந்திப்பு கூட்டமும் இரவு 10 மணிக்கே தொடங்கியுள்ளது. இவ்வியக்கத்தில் அங்கம் வகித்த பெரும்பாலானோர்கள் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் அவர்களக்கான ஓய்வு நேரம் அதாகவே இருந்துள்ளது என்பதை இளஞ்செழியன் தமது □□ ஈழத்தில் பெரியார் முதல் அண்ணாவரை□ என்ற நூலில் பதிவாக்கியிருக்கின்றார். இக்காலச் சூழலில் இ.சு.இ பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் நேரடி தாக்கத்தினாலேயே செயற்பட்டது. அக்காலக்கட்டத்தில் இவ்வியக்கத்தினர் முன் வைத்த நாத்திகவாதம், சாதி எதிர்ப்பு, பெண்ணடிமைக்கு எதிரான குரல், மூடநம்பிக்கைகளுக்கு எதிரான கோபாவேசம் என்பன பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் நேரடி விளைவுகளே. இக்காலச் சூழலில் இளஞ்செழியனின் சமூக நோக்கும் பங்களிப்பும் இப்பின்னணியிலே வேர் கொண்டிருந்தது.

இத்தகைய பின்னணியில் தமது சமூக பண்பாட்டுச் செயற்பாடுகளுக்கு வியூகம் அமைத்துக் கொண்ட இளஞ்செழியனுடைய பார்வை மலையகத்தை நோக்கி நகர்கின்றது. சுயமரியாதை திருமணம் ஒன்றிற்காகவே அவர் மலையகத்திற்கு (கடுகண்ணாவில் உள்ள கிரிமெட்டியா தோட்டத்திற்கு) வருகின்றார். இக்காலப் பின்னணியில் இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் (இ.தி.ம.க) நோக்குகளும் போக்குகளும் இலங்கையை தழுவியதாக மாறியது. இது தொடர்பில் இளஞ்செழியன் வெளியிட்ட துண்டுப் பிசுரத்தில் பின்வரும் பந்தி அவதானத்திற்குரியது.

"இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம், இலங்கை மக்களுடையது என்பதே அதன் லட்சியமும் வாழ்வும் ஆகும் என்பதை புரிந்துக் கொண்டு ஒரே இன மக்கள் என்ற திராரவிட இனத்தவர்களுக்கான தன்னால் ஆன மட்டும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களாக இருக்க வேண்டுமே தவிர, பாரத நாட்டு காந்தியார்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேருஜி போன்ற தலைவர்களின் பெயர்களை கூறி நாம் இந்தியர்கள் நமது தலைவர்கள் காந்தி நேரு என காங்கிரஸ் பக்கம் மலைநாட்டு மக்களை இழுத்து மக்கள் மீது இந்நாட்டுப் பற்றும், இந்நாட்டு நம்பிக்கையை கொள்ளாத வண்ணம் பல லட்சம் மக்களது வாழ்விலே மண்ணைத் தூவி அவர்களை நாடற்றவர், நாதியற்றவர், என்ற நிலைக்கு ஆளாக்கியுள்ளனர். முலைநாட்டு மக்களே! அஞ்ஞாதீர்! அஞ்ஞாதீர்! உங்களது பிரஜா உரிமை இதோ பாரோர் புகழும் பாரதப் பிரதமர் நேருவிடமிருந்து வருகிறது தபாலில் என்ற நம்பிக்கையை ஊட்டி... இன்னுமொரு பிரிவினர் சென்னையை காட்டி அங்கிருந்துதான் உங்கள் விடுதலை நிச்சயமாக வரும் என்ற ஆகாத ஊட்டி "...வருகின்றனர் என இ.தி.மு.க சார்பில் தோழர் இளஞ்செழியன் வெயிட்ட அறிக்கையில் குறிப்பிருகின்றார் (மேற்கோள், முத்துலிங்கம். பெ. மே.கு.நூ. ப.40).

பெரும்பாண்மையாக உழைக்கு மக்களை தளமாக கொண்டிருக்கின்ற மலையக வாழ்நிலை இ.தி.ம.க. த்தினதும் இளஞ்செழியனதும் சமூக செயற்பாடுகளுக்குமான பரந்து விரிந்த தளத்தை வழங்குகின்றது. இவிவிடத்தில் இ.தி.ம.க. த்தின் நோக்குகளும் போக்குகளும் இலங்கையை தழுவியதாக மாறியமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இதே காலப்பகுதியில் இளஞ்செழியனின் சிந்தனையில் இனனொரு பாரிய மாற்றமும் நிகழ்கின்றது. மலையகத்தில் ஏற்கனவே செல்வாக்கு பெற்றிருந்த நவ சமஜமாச கட்சியினரின் தொடர்பு ஏற்படுகின்றது. இதன் காரணமாக அவர் ட்ரொட்க்ஸிய சிந்தனையின் தாக்கத்திற்குட்படுகின்றார். உலகளவில் இடது சாரி இயக்கங்கள் தோன்றி வளர்ச்சியடைதிருந்த காலத்தியெல்லாம் தொழிலாள வர்க்கத்தின் ஓற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிப்பதாகவே .டரொக்ஸியவாதம் இருந்து வந்துள்ளது. பேச்சில் அதிதீவிர வாத்தையும் நடைமுறையில் பாராளுமன்ற சரணாகதிையையுமே பிரதானமாக கொண்டு செயற்பட்டிருக்கின்றது என்பதை இதுவரைக்கால வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. இலங்கை இதற்கு அந்நியப்பட்டதொன்றல்ல. இந்த பண்பை நாம் இலங்கையில் ட்றொக்ஸிவாத்தை அடிப்படையாக கொண்டு இயங்கிய இயக்கங்களிலும் காணலாம். இதே காலத்தில் மலையகத்தில் திரு. சண்முகதாசன் தலைமையிலான இடதுசாரி இயக்கமும் தொழிற்சங்கம் சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருந்தது. இளஞ்செழியன் தமது ட்ரொட்க்ஸிய தத்துவார்த்த நிலைப்பாட்டின் காரணமாக மா ஓ நிலைப்பாட்டினை ஏற்றிருந்த அணியினருடன் ஐக்கிய படத்தவறியிருந்தார். அதேபோன்று இவ்விடதுசாரி இயக்கங்களும் இளஞ்செழியனின் முக்கியத்துவத்தை உணரத்தவறியிருந்தன. மலையகத்தில தொழிற்சங்க அரசியலை இடதுசாரி முனைப்புடன் முன்னெடுத்த ந. சண்முகதாசன் சிங்கள மக்களின் மனம் நோகக் கூடாது என்ற வகையில் தமிழர்கள் தேசிய இனமல்ல என்ற முடிவுக்கு வருகின்றார். இந்நிலைப்பாட்டினையே அவர் மலையக மக்கள் தொடர்பிலும் முன் வைத்தனர். மறுப்புறத்தில் மொழியுரிமை மலையக மக்களின் வாக்குரிமை தொடர்பில் கூடிய கவனமெடுத்த இளஞ்செழியன் மலையக மக்களின் வர்க்க ஒடுக்குமுறைக் குறித்து கவனமெடுக்கவில்லை. அந்தவகையில் இவ்விரு போக்குகளுமே மலையக சமூகமாற்றத்திற்கான போராட்டத்தில் ஒவ்வொரு பகுதிகளை நிறைவு செய்வதாக அமைந்துள்ளன. இந்த பின்னணியிலே இளஞ்செழியனின் மலையக தேசியம் குறித்த அவரது சமூக நோக்கு செயற்பாடுகள் என்பன எத்தகைய தாக்கங்களை கொண்டு வந்து சேர்த்தன என்பது பற்றி நோக்குதல் அவசியமானதாகும்.

இலங்கை அரசியலில் காலத்திற்கு காலம் முக்கிய அம்சமாக திகழ்ந்து வந்த விடயம் தேசிய இனப்பிரச்சனையே. தேசிய உணர்வு என்பது ஒரு மக்கள் கூட்டத்தினரின் தன்னடையாளங்களில் ஒன்றாக செயற்படுகின்றது. இன, மத, மொழி சாதி, கலாசார வேறுப்பாடுகளால் அது நிலைநிறுத்தப்படுகின்ற போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வம்சங்கள் புறக்கணிக்க தக்கதொன்றல்ல. மனித சிந்தனைகள் மனித நாகரிகம் வளர்ச்சி அடைகின்ற போது அது இயல்பான ஒன்றாக காணப்படுகின்றது. அதே சமயம் அவ்வுணர்வுகள் தம்மை – தன் இனத்தை முதன்மைப்படுத்தின் கொண்ட அதே சமயம் இன்னொருவர் – இன்னொரு இனத்தின் மீது மேலாதிக்கம் செலுத்த முனைகின்ற போது அது பகை முரண்பாடாக மாறுகின்றது. இவ்வாறான சூழலில் தேசியம் என்பது ஓடுக்கப்படுகின்ற தேசியமாகவும் ஒடுக்கும் தேசியமாகவும் வளர்சியடைகின்றன. தேசியத்தின் இந்த குணாதிசியத்தை அடிப்படையாக கொண்டே முற்போக்கு தேசியம், பிற்போக்கு தேசியம் என வரையறை செய்வர்.

சிங்கள மக்கள் மத்தியில் தென்னிந்தியா குறித்த அச்சம் நீண்டகாலமாகவே இருந்து வந்துள்ளது. வெவ்வேறு காலகட்டங்களில் இலங்கை மீதான தென்னிந்திய படையெடுப்புகள் இதற்கு தக்க எடுத்தக்காட்டுகளாகும். இததகைய வரலாற்று நிகழ்வுகளை மையப்படுத்தி இலங்கையில் நிலவிய சிங்கள இராஜ்சியங்களும் அவர்களது நாகரிகமும் பண்பாடும் தமிழர்களால் அழிப்பப்பட்டது என்ற எண்ணகருவை பேரினவாதிகளும் வரலாற்று ஆசிரியர்களும் தமிழ் மக்களுக்கு எதிரான திரிபுபடுத்தியே கூறி வந்துள்ளனர். முலையகத்தவர்களுக்கு வாக்குரிமை வழங்க வேண்டும் என்பது தொடர்பில் வாதபிரதிவாதங்கள் எழுந்த போது டி. எஸ் சேனநாயக்கா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

"சிங்களவர் துரதிஸ்டம் பிடித்த சமூகத்தினர்...... அவர்களுடைய தாராள மனப்பாண்மை மறக்கப்பட்டு தவறாக விளக்கப்பட்டுள்ளனர். மற்றவர்களின் நன்மைக்காகத் தம்மை ஒறுப்பதற்குச் சம்மதிக்கும் சிங்களவர் போன்று வேறு ஒரு சமூகம் இருக்கும் என நான் எண்ணவில்லை........, இந்தியர்களுக்கு பெரிய நாநாடு உள்ளது. எங்களுக்கு இச்சிறு துண்டு நிலமே உள்ளது. இந்த நாடு எங்களுக்கு வேண்டும்." (குமாரி ஜெயவர்தனா, 1995, மேற்கோள் இலங்கையில் இனவர்க்க முரண்பாடுகள், பாரிநிலையம், சென்னை, பக். 64,65). இதற்கு மேலாக பிரான்சிஸ் மொலாமூர் இந்திய அச்சுறுத்தல் பற்றிக் குறிப்பிடுகையில் "பழைய காலத்தில் இலங்கையை லிப்டன் தோட்டம் என்றனர். எதிர்காலத்தில் இலங்கையை இந்திய ஆலமரத் தோட்டம் என்றுக் குறிப்பிடக் கூடும்."

எனவும் குறிபிட்டார். மக்கள் விடுதலை முன்னணி(ஜே. வி .பி) முதலான இனவாத கட்சிகளும் மலையகத்தை இந்திய விஸதரிப்பு வாதத்தின் ஒரு பகுதியாகவே நோக்கினர். இவர்களது ஐந்து வகுப்புகளில் ஒன்று இந்திய விஸ்தரிப்புவாதமாகும். எண்ணிக்கையளவில் இம் மக்கள் இந்நாட்டின் இரண்டாவது தேசிய இனமாக இருந்தமையினால் இந்தியா பற்றிய அச்சத்தை சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமன்று இந்நாட்டில் வாழ்ந்த தமிழ் மேட்டுக் குடியினரித்திலும் ஏற்படுத்தியிருந்தது. மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமையும் அதற்கு சார்பாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் முதலானோர் வாக்ளித்தமையும் இதற்கு தக்க எடுத்துக்காட்டுகளாகும். பேரிவாதத்திற்கு எதிரான பார்வைக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியினர் இக்கொடுரத்தை எதிர்த்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலத்திற்கு காலம் மலையக மக்களின் இனத்தனித்துவத்தை சிதைப்பதற்பாக் பல பேரிவாத நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. 1948 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட குடியுரிமை பறிப்பு சட்டம், இம்மக்களை அரசியல் அநாதைகளாக்கியதுடன் அவர்களை இந்நாட்டின் மூன்றாவது தேசிய இனம் என்ற நிலைக்கு தள்ளியது. 1964 ஆண்டு கொண்டு வரப்பட்ட ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம் இன்னும் போன்ற சட்டங்கள் சாட்சியாக அமைந்திருக்கின்றன. அத்துடன் காலத்திற்கு காலம் இம்மக்கள் மீதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டழித்து விடப்பட்ட காட்டு மிராண்டி தனமான இனவண்முறைகள், திட்டமிடப்பட்ட குடியேற்றவாதங்கள் இவையாவும் இம்மக்களின் இருப்பை சிதைப்பதற்கான பேரினவாத முயற்சிகளாகவே அமைந்திருந்தன. ஒருவகையில் இம்மக்கள் மீதா பேரினவாத அடக்குமுறைகளே மலையக மக்களிடையே தாம் தனித்துவவமான தேசியஇனம் என்ற உணர்வை ஏற்படுத்தியிருந்தது.

சிங்கள வலதுசாரிகள் தான் மலையக மக்களுக்கு எதிராக இத்தகைய பேரினவாத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்றால் சிங்கள தமிழ் இடதுசாரிகளின் நிலைப்பாடு எத்தகையதாக இருந்தது என்பது முக்கியமானதோர் வினாவாகும். சுதந்திரத்திற்கு பின்னராக வடக்கிழக்கில் தோன்றிய தமிழ் தேசியம் ஏகாதிபத்தியத்திற்கு காட்டிக் கொடுக்கும் மனப்பாங்கோடு வளந்த போது அதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுப்பதில் தமிழ் இடதுசாரிகள் கவனமெடுத்திருந்தனர். அதன் பின்னணியில் தமிழர் மத்தியில் பண்ணையடிமைத்தனமாக காணப்பட்ட சாதியத்திற்கு எதிராக போராடி வெற்றியும் கண்டனர். அதே சமயம், தோழர் சண் போன்றோர் பெரும்பான்மையான சிங்கள மக்களின் மனம் நோக கூடாது என்றவகையில் தமிழ் மக்கள் தேசிய இனமல்ல என வாதாடினார். இந்நிலைப்பாட்டினையே அவர் மலையக சமூகம் பற்றியும் கொண்டிருந்தார். இந்தப் பின்னணியில், முளையிட்டு மேற்கிளம்பிய சிங்களபேரிவாதத்திற்கு எிராக போராடத்தவறி விட்டனர். சிங்கள இடதுசாரிகள் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போர்குணத்தை கொண்டிருந்த அதேசமயம், பேரிவாதத்திற்கு எதிராக போராட்டத்தில் போதி கவனமெடுக்க தவறியிருந்தனர். இதே நிலைப்பாட்டை மலையக மக்கள் தொடர்பிலும் அவர்கள் கொண்டிருந்தனர். மலையக மக்களை இந்திய விஸ்தரிப்புவாத்துடன் ஒரு பகுதியாக கருதியமையமை இதற்கான காரணமாக இருக்கலாம்.

இவ்வாறானதோர் சூழலில் இளஞ்செழியன் பெரியாரிய கோட்பாடுகளை மாறி வருகின்ற மலையக சூழலுக்கு ஏற்றவகையில் பிரயோகித்து வெற்றியும் கண்டவர். தமது பண்பாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்து செல்கின்ற போது பல அரசியல் தொழிற்சங்க அமைப்புகளை சார்ந்தவர்களை வெகுசனமாக அணித்திரட்டியிருந்தார். அவ்வாறு வெகுசனங்களை அணித்திரட்டுகின்ற போது பெரும்பாண்மையான தொழிலாளர்களே அணித்திரண்டுயிருந்தாரகள். பல இடங்களில் அரசியல் வகுப்புகளையும் எழுச்சி கூட்டங்களையும் மநாடுகளையும் ஒழுங்கமைத்து தொழிலாளர்களை விழிப்படைய செய்தனர். அதன் விளைவாக தொழிலாளர்கள் விழிப்புணர்வு பெற்றதுடன் தாம் சார்ந்த இயக்கங்களிலும் கேள்விகளை எழுப்பியுள்ளனர். மலையக வரலாற்றினை எடுத்து நோக்குகின்ற போது இத்தகைய இத்தகைய ஒரு மரபு இளஞ்செழியனால் தோற்றுவிக்கப்பட்டிருந்ததை நான் சிறுவனாக இருக்கும் காலத்திலே அறிவேன். ஒரு காலக்கட்ட ஆர்பரிப்பில் இளஞ்செழியனின் அரசியல் தளமாக (கோட்டை என்றுக் கூட கூறலாம்) ஹட்டன் காசல்றி தோட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தை சேர்ந்த ஜீ. ஆறுமுகம் என்பவர் தொழிலாளர் தேசிய சங்கத்தில் அங்கம் வகித்தவர். அவ்வாறே வே. மணிபாலன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் அங்கம் வகித்தவர். திரு. ந. இராஜசிங்கம் திமு.க வின் அங்கத்தவர். இவர்கள் பொதுவாக உரையாற்றுகின்ற போதோ அல்லது தொழிற்சங்க கூட்டங்களில் உரையாற்றுகின்ற போதோ போதோ தங்களை இளஞ்செழியனின் அரசியல் மாணவர்கள் எனக் கூறிக் கொள்வார்கள். அதே போன்று அப்பிரதேசத்தில் வாழ்ந்த பலர் தி.மு.வினதும் இளஞ்செழியனதும் தீவீர ஆதரவாளர்களாக இருந்து வந்துள்ளதை அவதானித்திருக்கின்றேன். இந்த போக்கு முழு மலையகம் சார்ந்து வெளிப்பட்டதாக கூற முடியாது. இளஞ்செழியனை அவர்களை அறியாமலே மலையகத்தில் பெரியார் அண்ணாதுரை ஆகியோரின் கருத்துக்கள் பரவியுள்ளமையும் கவனத்தில் கொள்ளத்தக்கது. இளஞ்செழியன் எப்போதும் அவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்கள் மலையக மக்களின் பிரச்சனைகளை மலையக மக்களின் தேசியத்துடன் அவர்களின் குடியுரிமையுடன் இணைத்தே பார்த்துள்ளார். இவ்வாறு வெகுசனங்களை திரட்டிய இளஞ்செழியன் மொழியுரிமை, வாக்குரிமை, சாதிய எதிப்பு, பெண்ணடிமைதன எதிர்ப்பு ஆகிய விடயங்களை முன்னிறுத்தியே தமது செயற்பாடுகளை முன்னெடுத்து சென்றுள்ளார். மலையககத்தை பொருத்த மட்டில் அவர் அதிகமாக கவனமெடுத்ததொரு அம்சம் தான் மலையகம் மக்களின் இருப்பு தொடர்பான அம்சமாகும்.

இவ்விடத்தில் பிறிதொரு அம்சம் குறித்தும் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. இலங்கை அரசியல் வரலாற்றில் பேரினவாத்தை சரியாக அரசியல் தளத்தில் அடையாளம் கண்டு அதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதிகளாவார். சேர். பொன். அருணாசலம் அரசியல் அரங்கிலே பேரினவாதத்தை அடையாளம் கண்டிருந்து போதினும் அதனை இயக்கவடிவத்தில் முன்னெடுப்பதற்கு முன் இறந்து விடுகின்றார். பின் வந்த தலைவர்கள் அதனை கவனத்திலெடுக்கவில்லை. அவர்களின் வர்க்க நலன்களும் அதனடியாக கிடைக்க கூடிய சலுகைகளும் அதற்கு இடம் தரவில்லை என்பது வேறுவிடயம். இவ்வானதோர் சூழலில் இளஞ்செழியன் பேரிவாதத்திற்கு எதிராக் விட்டுக் கொடுக்காத போராட்டத்தை முன்னெடுத்துள்ளார். மலையகத்தில் பேரினவாதத்திற்கு எதிராக அவர் முன்னெடுத்த பேராட்டங்களே மலையக தேசியத்திற்கான போராட்டங்களாக அமைந்திருந்தன. இந்த பின்னணியில் தான் அவர் பேரிவாதத்திற்கு எதிரான விழிப்புக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சியினருடன் இணைந்து செயற்பட்டார். ஆனால் தமிழரசுக் கட்சி பிற்போக்கு வாதிகளின் கூடாரமாக மாறிய போது இளஞ்செழியன் அதனை எதிர்க்கவும் தவறவில்லை. இவ்விடத்தில் பேரினவாதத்திற்கு எதிராகவும் மலையக தேசியம் தொடர்பிலும் இளஞ்செழியன் முன்னெடுத்த செயற்பாடுகள் இரண்டை சுட்டிக் காட்டுவது அவசியமானதாகும்.

இவ்வகையில் 1963 ஆம் ஆண்டு பண்டாரவளையில் நடாத்தப்பட்ட நாடற்றவர் மறுப்பு மநாடு முக்கியமானது. இம்மாநாட்டின் போது திரு. கே.எம்.பி ராஜரட்ணா தலைமையில் இயங்கிய ஜாதிக விமுத்தி பெரமுன( தேசிய விடுதலை முன்னணி)இயக்கத்தை சார்ந்த பேரினவாதிகள் இக்கூட்டத்தினரை தாக்கவும் செய்தனர். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இடதுசாரிகள் இ.தி.மு.க ஆதரவாக செயற்பட்டுளள அத்தாக்குதல்களிலிருந்து இ.தி,ம.க அங்கத்தவர்களை காப்பாற்றியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வகையான செயற்பாடுகளினால் ஆத்திரமடைந்த பேரினவாதிகளும் அரசாங்கமும் இ.தி.மு.க சட்ட ரீதியாக தடைசெய்ய முற்பட்டனர். இளஞ்செழியனை இனவாதியாகவும் இந்திய விஸ்தரிப்புவாத்தின் பிரதநிதியாகவும் காட்ட முற்பட்டனர். இவ்வாறான சூழலில் தமிழ் அரசியல்வாதிகள் பல மௌன விரதம் அனுஸ்டிக்க, சிங்கள இடதுசாரி தலைவர்கள் பலர் எதிர்த்து குரல் கொடுத்துள்ளனர். இந்நிகழ்வே இளஞ்செழியன் ஒரு இனவாதியல்ல என்பதற்கு தக்க எடுத்துக்காட்டாகும். இளஞ்செழியனை இந்திய விஸ்தரிப்புவாத்துடன் இணைத்து பார்ப்பதற்கு அவர் அங்கம் வகித்த அமைப்பான இ.தி.மு.க. தின் பெயரும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம். துடை நீக்கிய பின்னர் புதிய ஜனநாயக முன்னணி ஏன்ற அமைப்பை தோற்றுவித்து செயற்படத் தொடங்கினார் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

இலங்கையின் மூலவளத்தை கொள்ளையடித்து அதனை இந்தியாவிலே பதுக்குகின்ற – இந்நாட்டில் வாழ்கின்ற இந்திய முதலாளிகளுக்கு எதிரான இனவாத பார்வை மலையக மக்களுக்கு எதிராகவே திருப்பட்டிருந்தன. இதற்கு முக்கியமான காரணம் இலங்கை வாழ் இந்திய முதலாளிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கான எதிர்ப்புக்கு ஆதரவு தேடி மலையக மக்களை அணித்திரட்டும் முயற்சியில் ஈடுப்பட்டிருந்தனர். இனனொருபுறத்தில் இவர்களின் சமூக இருப்பை சிதைக்க் வேண்டிய தேவை பேரினவாதிகளுக்கு இருந்தது. மக்கள் விடுதலை முன்னணியின் ஐந்து வகுப்புகளில் ஒன்று இந்திய விஸதரிப்புவாதம் ஆகும்.

இதனை ஆட்சேபித்தும் மற்றும் இது தொடர்பில் விஜயவீரா போன்றோருக்கு தெளிவுப்படுத்துவதற்குமான கூட்டமொன்று(1970களின் இறுதிப்பகுதியில்) நோர்வூட்டில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இக்கூட்டத்தை இளம் சோஷலிச முன்னணியின் சார்பில் திருவாளர்கள் கருப்பையா, பி.எம். லிங்கம், இரா ஜெயராமன், ஜெகதீஸ்வரன், முதலானோர் ஒழுங்கமைத்திருந்தனர். திரு. சி. மாசிலாமணி கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். தோழர் இளஞ்செழியன் இக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் திரு. திரு ரோஹன விஜயவீர இந்தீய விஸ்தரிப்பு வாதம் குறித்து பேச மறுத்து விட்ட அதே சமயம் அதனை அவர் சார்ந்த கட்சியுடன் தனிப்பட்ட பேச்சுவார்த்தையின் போது நிகழ்த்தலாம் எனக் கூறிவிட்டதையும் இளஞ்செழியன் தமது நூலில் பதிவு செய்திருக்கின்றார். இது தவறானது என்பதை திரு. ரோஹகண விஜயவீரவுக்கு சுட்டிக்காட்டியதிலும் அதனை மக்கள் மத்தியில் அம்பலபடுத்தியதிலும் இளம்செழியனுக்கும் இளம் சோஷலிச முன்னணிக்கும் முக்கிய பங்குண்டு. இக்கூட்டத்தின் பின் இவ்வியக்கத்தினர் பொலிஸாரின் தேடுதலுக்குட்பட்டனர். இளஞ்செழியன், இரா. ஜெயராமன் முதலானோர் தலைமறைவாகியிருந்த சந்தர்ப்பத்தில் கருப்பையா, ஜெகதீஸ்வரன், பி.எம். லிங்கம் முதலானோர்கள் பொலிசாரின் விசாரனைக்கும் சித்திரவதைக்கும் உள்ளானார்கள் என்பதும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டத்தக்கது.

இவ்வடத்தில் முக்கியமாக கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில் இளஞ் செழியன் பெரியாரினதும் ட்ரொட்ஸிய தத்தவார்த்தத்தின் தாக்கத்திற்கும் உட்பட்டிருந்தாலும் அத்ததுவங்களினூடாக பெற்ற தமிழ் தேசியம் பகுத்தறிவு வாதம் ஆகியவற்றின் குறுகிய எல்லைகளை கடந்து அவற்றை பிரயோகிப்பதில் வெற்றிப்பெற்றுள்ளார் என்றே கூறதம் தோன்றுகின்றது. பண்பாட்டுத் தளத்தில் அவர் முன்னெடுத்த எத்தனிப்புகள், அரசியல் தளத்தில் நின்றுக் கொண்டு சமூக மாற்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதாக அமைந்திருக்கவில்லை. மாறாக பண்பாட்டுத் தளத்தில் தமது இயக்கம் சார்ந்த செயற்பாடுகளின் ஊடாக சமூகமாற்றத்தை கொண்டு வர முயற்சிப்பதாகவே அமைந்துள்ளது. அவரது செயற்பாடுகள் யாவும் மக்களை யொட்டியதாக பிரவாகம் கொண்டிருக்கின்றது. அந்தவகையில் இளஞ்செழியன் நடேசயயர் மீனாட்சியம்மாளின் தொடர்ச்சியாக காணப்படுகின்றார்.

மலையக மக்களின் நல்வாழ்வுக்கான போரட்டத்தை மலையகத்தில்– பண்பாட்டுத்தளத்தில் முன்னெடுத்த இ.தி.மு.க வரலாறு பற்றிய பதிவுகளும் மதீப்பீடுகளும் வெளி வந்த போதினும் அவை போதியதாக இல்லை. அவ்வவ் காலக்கட்டங்களில் வெளிவருகின்ற எழுத்துகளும் பதிவுகளுமே அறிவுஜீகளின் கவனத்தைப்பெற்றுள்ளன். நேரடியாக தொழிலாளர்கள் விவசாயிகளிடத்தில் செயற்பட்ட ஆளுமைகள் குறித்து எழுதுவதற்கு உழைக்கும் மக்களுக்கு எழுத்தறிவு இல்லாதிருந்திருந்தது இன்னொரு துரதிஸ்டவசமான நிகழ்வாகும். இளஞ்செழியனின் குறித்த ஆய்வுகளிலும் இந்நிலையை காணலாம். இருப்பினும் மலையகத்தின் இருப்பு தொடர்பில் தன்னலமற்ற காத்திரமான பங்களிப்பை நல்கிய இவ்வகையான ஆளுமைகள் பற்றிய தேடலும், ஆய்வும் சமூமாற்றத்திற்திற்காக செயற்□படுகின்ற சக்திகளால் வெளிக் கொணரப்பட வேண்டியது காலத்தின் தேவையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் - மா.பாலசிங்கம் (மா.பா.சி.)



**மா.பா.சி.என அறியப்படும் ஐயம்பிள்ளை – செல்லம்மா தம்பதியினரின் மகன் பாலசிங்கம் அவர்கள், யாழ்ப்பாணம் – கொட்டடியில் 26.11.1939 இல் பிறந்தவர். தினகரன் வாரமஞ்சரியில் இவரது முதல் சிறுகதை "ஏமாற்றம்" வெளிவந்தது. "இப்படியும் ஒருவன்" என்ற தலைப்பிலான முதல் சிறுகதைத் தொகுதி மல்லிகைப் பந்தல் வெளியீடாக 2002 இலும், "எதிர்க்காற்று" எனும் சிறுகதைத் தொகுப்பு 2008 இலும் வெளிவந்தன. இன்னொரு தளத்தில் தனது எழுத்து – சமூகப் பணியை முன்னெடுப்பதன் காரணமாய் ஆக்க இலக்கியத்தில் தொடர்ந்தும் பங்கெடுக்காத போதிலும், அதன் அறுவடையான தலைநகரின் கலை – இலக்கிய – சமூக நிகழ்வோட்ட பதிவுத் தொகுப்பு விரைவில் வெளிவருவதன் வாயிலாக அவரது இயங்காற்றலின் முழுப் பரிமாணம் விரைவில் எல்லோர் கவனத்துக்கும் வரும்.திரை மறைவில் இருந்து இலக்கிய வெளிச்சம் கொடுக்கும் அவரின் கனதியான பங்களிப்பை வெளிக்கொணரும் சிறு முயற்சியாக, அவரது 74ஆம் அகவை செவ்வி இது:–**


**"உங்களுடைய சமூக நோக்கை, இப்போதைய தளத்துக்கு ஏவிய சம்பவங்கள், ஆளுமைகள் குறித்து, புதிய இளம் வாசகருக்கு அறியத்தருவீர்களாா....?**

வட இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் தற்போது இடப்பெயர்வைப் பற்றி அடிக்கடி பேசி வருகின்றனர். அது எமது குடும்பத்துக்கு 1940ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே ஏற்பட்டு விட்டது. வில்லூன்றி மயானப் படுகொலை குறித்து இன்றைய இளந் தலைமுறைக்குத் தெரியாதிருந்தாலும் நம்மோடு இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கும் மூத்ததலைமுறை யாழ்ப்பாண மண்ணில் நடந்த சகோதரத் தமிழருக்கெதிரான படுகொலைச் சம்பவத்தை மறந்திருக்காது. யாழ், பலாலி வீதியிலிருந்து வில்லூன்றி மயானத்துக்கு, வள்ளியம்மை என்ற தாழ்த்தப்பட்ட பெண்ணொருத்தியின் சடலத்தை, தாழ்த்தப்பட்ட சமூகத்தவர்கள் கொண்டு வந்து தகனஞ் செய்ய முயன்ற போது, யாழ்ப்பாணத்து நாவலர் பரம்பரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தமிழர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, சின்னத்தம்பியென்ற பஞ்சமனைச் சடலமாக வீழ்த்தினர். இப்படுபாதகச் செயலை – சிறு பான்மைத் தமிழர் மகாசபையின் முன்னாள் தலைவர் எம்.சி. சுப்பிரமணியம் போன்ற, தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் விழிப்புணர்வைப் பெற்றிருந்த புத்திஜீவிகள், கொழும்பு உயர்நீதி மன்றம்வரை கொண்டு சென்று கொலைஞனுக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்தனர். இவ்வழக்கில் கொலைஞன் தண்டனை பெறப் பெரிதும் உதவியது, எனது தந்தையார் ஐ.மாரிமுத்துவின் வாக்கு மூலந்தான். இத் தருணத்தில் மற்றொன்றையும் நினைவு படுத்த வேண்டியுள்ளது. ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபதுகளின் முற்பகுதியில், மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் பிரவேசத்துக்காக, கே.டானியல், எஸ்.ரி.என்.நாகரத்தினம் ஆகியோர் முற்போக்குச் சிந்தனையுடைய, கணிசமான யாழ்ப்பாணத்தாரினதும் உற்சாகமான ஒத்துழைப்போடு, தீண்டாமை ஒழிப்புக்கான புரட்சிகர வெகுஜன இயக்கம் நடத்திய போராட்டத்தில் வெற்றிகண்டதுக்கும் இந்த வில்லூன்றி மயானக் கொலை வழக்கே அடியெடுத்துக் கொடுத்ததென்பதை எவருமே மறுக்க முடியாது! இந்த இரண்டு வழக்குகளிலும், ஆறறிவு படைத்த மனிதர் செய்யாததை, சட்டம் செய்து, பஞ்சப்பட்ட – அடிமட்டத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கியது. இந்த வகையில் இயக்கங்களில் சட்டம் இருட்டறையாக இருக்கவில்லை தந்தையார் சுயமரியாதைக்காரர். எமது சூழலில் வாழ்ந்த ஏனையோர் உயர் சாதிக்குக் கொடுத்தமரியாதையை அவர் என்றுமே கொடுக்க வில்லை. இத்தகைய – அவரது சாதி வெறியர்களுக்கு எதிரான போக்குகளாலும், வழக்கில் பஞ்சமர்கள் பக்கத்தில் நின்றதாலும் எமது குடும்பம் பழிவாங்கப்பட்டது. கொட்டடியில் மிகவும் பிரபலமாக இருந்த காணிச் சுவாந்தரொருவரின் காணிக்குள் வசித்த எம் குடும்பத்தைக் குறுங்கால அறிவித்தலில் காணிக்காரர் வெளியேற்றினார். குடி பெயர்ந்தோம். சொந்தத் தொழிலைத் தந்தையார் இழந்தார். குந்தியிருக்கக் குடி நில மற்றிருந்த எமக்குக் குடியமரத் தனது காணித்துண்டைத் தந்தவர் ஒரு தாழ்த்தப்பட்டவர் தான்! குடும்ப சீவியத்தை ஓட்டத் தந்தையார் எமது கிராமத்துக்கு, அயல் கிராமமாகவிருந்த முஸ்லிம் பகுதிக்குள் சென்று மாற்றுத் தொழிலொன்றைச் செய்தார். தாயாரும் குடும்பத்துக்காகத் தொழில் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டார். இந்



நிகழ்வு என்மனதில் விதையாகி விளைந்தது....

எனது சமூக நோக்கு விசாலிப்பில் எனது குடும்பத்தின் பங்களிப்புக் காத்திரமானது. தமையனார் மா.கந்தசாமிதீவிரவாசகர். பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாங்கி வீட்டுக்குக்கொண்டு வருவார். சோஷலிச நாடுகளின் பிரசுரங்களும் இதில் அடங்கும். அப்துர்ரஹீமின் “மனிதப்புனிதன் ஆப்பிரலிங்கன்! என்ற நூலும் இவ் வழியில் கிடைத்தது. மலிவுப் பதிப்பு நூல்களும் கொண்டு வரப்பட்டன. விளங்கியதோ இல்லையோ எனது பாட நூல்களோடு அந்த இளம் பராயத்தில் இவற்றையும் வாசிப்பேன். இந்த அத்திவாரந் தான், பின் நாட்களில் நான் நூல்களைத் தேடிவாசித்து எனக்கான தொரு செல் நெறியை வகுத்துக்கொள்ள ஆதாரமாக விருந்தது....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின் தங்கிய, ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் எமது பகுதிக்கு அடிக்கடி வருகை தரும் பிரமுகராக, அன்று தோழர்மு. கார்த்திகேசன் தான், இருந்ததை நான் உணர்நதேன். எவ்விதமான பாகுபாடும் காட்டாது, எமது வீடுகளுக்குள் வந்து, எம் மோடிருந்து, தான் வரித்துக் கொண்ட பொதுவுடைமைக் கொள்கைகள் பற்றி, அவர் காலத்தைக் கணக்கிடாது பேசுவது எனக்கு அதிசயமாக இருந்தது. ஏனைய தனிப் பெருந் தலைவர்கள் இதற்குப் பெரிதும் விதிவிலக்காக இருந்தனர். தோழர் மு.கார்த்திகேசனின் போக்கு என்னோடு ஒட்டிக் கொண்டு, எனக்குள்ளுமொரு பகுத்தறிவாளன், முற்போக்குவாதியை உருவாக்கிய தென்றால் மிகையாகாது. பஞ்சமர் இலக்கிய முன்னோடி அமரர் கே.டானியல், மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, வி.பொன்னம்பலம், இளங்கீரன் ஆகியோரது அன்றைய மேடைப் பேச்சுகளும் சாதியத்தின் விஷப்பற்களை எனக்குத் தெரியப்படுத்தி, அதற்கெதிரானதொரு போராளியாக நான் உருவாக உதவியிருக்கின்றன வென்பதை நான் இத்தருணத்தில் வெளிப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**"சமூக மாற்ற உலைக்களமாக இருந்த, ஐம்பது எழுபதுகளில், அவற்றுடனான உங்களது ஊடாட்டங்கள் எத்தகையவையாக இருந்தன?"**

ஐம்பதுகளில் நான் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன். அறுபதுகளில் உத்தியோகத்துக்காகக் கொழும்பு வந்தேன். எழுபதுகளிலும் வாழ்க்கை கொழும்பில் தான் தொடர்ந்தது. சமூக மாற்ற நடவடிக்கைகளில், எனது ஊடாட்டம் எழுத்து, வாசிப்பு மட்டங்களில் தான் இருந்த தென்பதை மறைக்க முடியாது. எனது "தழும்பு!" நாவல் முக்கியமானது. சாதியம் இன அழிப்புக்கு இட்டுச்செல்லுமென்பதை, சாதியவெறியர்களுக்குப் புகட்டியுள்ளேன். பேரினவாதிகள் தமிழினத்தை அழிப்பதாகக் கூச்சலிடுகின்றோம். ஆனால் நாமேஅதற்குத் தூண்டுதலாக இருப்பதை உணர்வதில்லை. "தழும்பு!" இதைத் தான் உள்ளீடாக கொண்டுள்ளது.


தனதெழுத்தூழியத்தில் அதி உச்சமாக சாதியத்தை கையாண்டவர் அமரர்கே.டானியல். யாழ்ப்பாணத்துச் சாதியவாதத்தை மிகவும் மூர்க்கமாகத் தாக்கினார். ஆனால் இப் போக்கிலிருந்து விலகி, சற்றுச்சமரசமாக, முற்போக்கு உயர்சாதித் தோழரையும் அனுசரித்து" "நமக்கும் விடியுமா?" என்ற நாவலைப் படைத்தேன். இதில் முக்கிய பாத்திரமான சாதிவேளாளன் கோபாலன், தனது சமூகத்தையும் பொருட்படுத்தாது சீவல் தொழிலைச் செய்கிறான். இந் நாவல் போட்டிக்கு விடப்பட்ட போது பரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்றையும் பெற்றது. சாதியப் போராட்டத்துக் அநுசரணையான சிறுகதைகளை எழுதியுள்ளேன். அதை முன்னெடுத்தவர்கள் பக்கம் சார்ந்து நின்றுள்ளேன். சமூக மாற்றத்தை வற்புறுத்திய தேசாபிமானி, மல்லிகை, செம்பதாகை, சரஸ்வதி போன்ற ஏடுகளின் தொடர்வாசகனாக இருந்துள்ளேன். கே.டானியலின் நாவல்கள், செ.கணேசலிங்கனின் "நீண்டபயணம்" என்பவற்றை வாசித்து நண்பர்களோடு பகிர்ந்துள்ளேன். எனது கொழும்பு வருகை நிகழாதிருந்தால், யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து, தீண்டாமை எதிர்ப்பு வெகுஜன இயக்கத்தின் ஊடாகச் சமூக மாற்றத்துக் குக்காத்திர மான பங்களிப்புச் செய்திருக்க முடியும்.

**" ஐம்பதுகள், எழுபதுகளில் வரலாறு படைத்த சமூக மாற்றச் செல்நெறி மீது தற்போது கவனம் கொள்ள வேண்டிய விமர்சனங்களாக, நீங்கள் எவற்றைக் காண்கிறீர்கள்?"**



இக்கால கட்டத்தில் சமூக மாற்ற உலைக்களமாக இருந்தது வடஇலங்கை தான். யாழ் மக்கள் கண்டறியாத வினைப்பாடுகள் சாதிவெறியர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டன. ஆண்டான், அடிமை முறைமை கட்டுடைப் படுத்தது. நாயிலும் கடையரென மிதிபெட்டு வாழ்ந்த மக்கள் கொதித்தெழுந்தனர். இம் மக்கள் குடும்பத்துக்குள்ளிருந்தே உன்னதமான இலக்கிய வாதிகள் சிலிர்த்தனர். சாதியத்துக்கு எதிரான இலக்கியங்கள் பொலிந்தன. இதில் சுபைர்இளங்கீரனின் பங்களிப்பும் மிகவும் தாக்கமாக இருந்தது. இப் பேரெழுச்சிக்குக் கணிசமான இடதுசாரி உயர்சாதியினரும் தமது உழைப்பைத் தந்தனரென்பதை மறந்து விடக்கூடாது.

இன்றைய நிலையில் இந்த எழுச்சியை எடை போடும் போது, இதே போராளிகள் இன, மொழி சார்ந்த கரிசனையையும் காட்டியிருந்திருக்க வேண்டுமென்பதே அனுபவத்தில் நான் கண்ட உண்மை. ஒரே தேசியம் என்ற ஒருத்துவம் தமிழன் சிந்தனையில் இருந்ததே தவிர, இன்றும் ஆதிக்க சித்தியைப் பெற்ற பெரும்பான்மை இனத்திடம் இல்லை! அன்றிதைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை ஒழிப்புக்கான வெகுஜன இயக்கம் போன்ற பஞ்சமசாதியினரின், அமைப்புகள் உணர்ந்திருக்க வேண்டும்! இருந்தும் தமிழீழப் போராட்டத்தில், உயிரிழந்த போராளிகளில் சரிக்குச் சரிதாழ்த்தப்பட்ட தமிழர்கள் இருந்துள்ளதை மறைக்க முடியாது! இதைப் சில இடது சாரிய அமைப்புகளும் உணர்ந்துள்ளதை அவைகளது தற்போதைய வினைப்பாடுகள் அத்தாட்சிப் படுத்துகின்றன. ஆடுவதுக்கு ஒரு ஆடுகளம் தேவை! பாகு பாடுகளற்ற ஒரு ஆடுகளத்தை அமைத்துத் தம்முள்ளிருக்கும் பேதங்களைத் துறந்து அனைத்து ஈழத்தமிழரும் செந்தமிழராவது எதிர்காலத் தமிழ் இன சுபீட்சத்துக்கு வழிகோலும். தாம் பிறந்த குடும்பத்தையிட்டும் ஒரு பக்க பெருமிதமும் கொள்ளலாம் எனப்பொது மேடைகளில் பிரமுகர்கள் பிரவாகிப்பதை நிறுத்த வேண்டும். இதற்குத் தாழ்த்தப்பட்ட தமிழரும் விதிவிலக்காக முடியாது! இது எனக்கு இலங்கை மண்கற்றுத் தந்த பாடமே தவிர, எந்தவொரு நிர்ப்பந்தத்தாலும் இதைச் சொல்ல வில்லை.

**"இன முரண்பாடு முனைப் புற்று, யுத்த கட்டத்தில் மூழ்கடிகப்பட்டிருந்த காலமும், பின் யுத்தச்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூழலும் குறித்து நீங்கள் என்ன கூறுவீர்கள்?"**
இன முரண்பாடு முனைப் புற்றிருந்த காலத்தில், ஜனநாயக பாரம்பரியத்தைச் சங்கை செய்து, ஈழத்தமிழனைத் தட்டிக் கொடுத்த பிறநாடுகள் யுத்தக் கட்டத்தில் தமது சுய இலாபங்களுக்காகக் கைவிட்டன. யுத்த சூழலில் தம்மையொத்த ஆதிக்க சக்திகளின் வழி நின்று அதாவது வர்க்கச்சார்பு நிலையெடுத்து ஈழத்தமிழனை அழிப்பதற்கு உதவின. இதன் மூலமாக ஜனநாயகத்தை, மனித நேயத்தை, நியாயத்தைக் கைகழுவின. இச் சூழலில் தன்கையே தனக்குதவி என்ற பாடத்தை ஈழத்தமிழன் கற்றுக் கொண்டான்!

**"எமது சமூக இருப்பும் இயங்காற்றலும் ஆரோக்கியமாக முன் செல்வதாகக் கருதுகிறீர்களா?"**
சமூக இருப்பும் இயங்காற்றலும் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படுவதாக எப்படிச் சொல்ல முடியும்? யுத்தப் புயல்கடந்த பூமியில் எம்மக்கள் அவலவாழ்வு வாழ்கின்றனர். சொந்தங்களை இழந்த அவர்களது துயர் துடைக்க வேண்டிய அரசு எமது வெப்பிசாரத்தைக் கூட்டிக்கொண்டே செல்கிறது. எமது தமிழ்ச் சமூகம் இன்னமும், இந்த அவலங்களைக் கண்ட பின்னும் அதன் தீண்டாமை, விதவைகள் மறுமணம் என்பவற்றில் மறுவாசிப்புச் செய்வதாக இல்லை. அந்த வகையில் எமது சமூக இருப்பும் இயங்காற்றலும் துயர் பகிர்தலுமே கழிகின்றது.

**"எமது சமூக ஊடாட்டம் சமகாலப் படைப்புகளோடு எவ்வாறு இணைவு பெற்றிருக்கிறது?"**
ஈழத்தில் முற்போக்கு இலக்கிய இயக்கம் வீறு கொண்டெழுந்த பின் படைப்புகள் சமூக ஊடாட்டங்களின் கொள்கலனாகின. வாழ்வின் கண்ணாடியாகின. அதன் பின்யுத்த காலத்திலும் அதன் நீட்சி காணப்பட்டது. ஆனால் இவைகளோடு எமது சமூகத்தின் ஊடாட்டத்தைக் கணித்துச் சொல்வதாகில், மக்கள் பெரிதாக இவைகளைக் கண்டு கொள்வதில்லையென்றே சொல்ல வேண்டும்! ஏனெனில், இன்றைய ஈழத்துத்தமிழ் இலக்கிய நூல்வெளியீடுகளில் 200பிரதிகள் விற்கப்பட்டால் அது பெருஞ்சாதனையெனப் பிரபல இலக்கிய வாதிகள் கூறுவதைக் கேட்டக முடிகிறது!

**"கடந்து வந்த எமது வரலாற்று ஓட்டத்தை ஒரு படைப்பாளியாகவும், ஊடகவியலாளராகவும் எவ்வாறு பார்க்கிறீர்கள்?"**
எமது! என்ற விழித்தலுக்கு நான் இலங்கைத் தமிழனென்றே அர்த்தங் கொள்கிறேன். எம் சகோதர சிங்கள அரசியலாளர்கள் போல், தமிழ் அரசியல் தத்துவாச்சார முன்னோடிகள், ஈழத்தமிழ்ப் பேசும் மக்களது எதிர்கால இருப்பைத் தீர்க்க தரிசனத்தோடு பார்க்கத் தவறிவிட்டனர். வெறும் அரசியல் செய்தார்களே தவிர இராஜ தந்திரிகளாக இருக்கவில்லை! மலையகத் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அரவணைக்காத இமாலயத் தவறை இப்போ உணர்கிறோம். எனவே பொல்லுக் கொடுத்துத் தான் இப்போ அடிவாங்குகிறோம்! மக்கள் இலக்கிய படைப்பாளியென்ற வகையில் கடந்து வந்த எமது வரலாற்று ஓட்டம் ஒரு கண்ணா மூச்சி விளையாட்டாகவே படுகிறது. மாற்றம் என்றதைத் தவிர மற்றதெல்லாம் மாறுமென்பதே கோட்பாடு. அது இன்னமும்ஈழத்தமிழரின் அரசியல் சிந்தனையில் தலை காட்ட வில்லை!

**"புலம் பெயர்ந்த ஈழத்தமிழரின் தாயகக் கரிசனை, எதிர்காலத்தில் அதன் இருப்பு என்பவை பற்றி?"**
ஈழத்திலிருந்து பெயர்ந்த, அந்த மூத்த பரம்பரை இன்னமும் அதன் தேகத்தில் ஒட்டிக் கொண்டிருக்கும் தாயகத் துகள்களைக்கழுவி விடாதது கண்டு மகிழ்கிறேன்.... ஆனால், இவர்களது வாரிசுகள் அத்தகைய சந்தோஷத்தை ஏற்படுத்துவதாகத் தெரியவில்லை. தாங்கள் பிறந்த மண்ணிலேயே இந்த வாரிசுகள் செற்றி லாகஎத்தனிக்கின்றனர்! இவ் வினைப்பாடு எமது சிங்களத்தோழர்களும் தங்களோடு கலப்பு மணஞ் செய்து இலங்கையில் வாழ முடியாதா? என்ற கேள்வியை எழுப்பாதா?

**"இரு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளீர்கள். உங்களது படைப்பாக்க**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அநுபவம் குறித்து அறியலாமா?"**

1962இல் இருந்து எனது சிறுகதைகள், நாவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. முதல் சிறுகதை" ஏமாற்றம்!. மக்களிடமிருந்து பெற்றதை மக்களுக்குக் கொடுப்பதையே படைப்பாக்குகிறேன். எனது மேற்படி முதல் சிறுகதை, யாழ்ப்பாணத்தார் அன்றுகள்ளத் தோணிகளென முத்திரை குத்திய ஒரு இந் தியத்தமிழ்த்தொழிலாளி பற்றியது. அக்காலத்தில் நான் தினசரி உணவருந்தும் கொழும்பு உணவகமொன்றில் சிப்பந்தியாகக் கடமை புரியும் ஒரு இளைஞன், துரை எங்கள் பிரச்சினையை நீங்கள் என்னமா எழுதியிருக்கிறீங்க....! என வாழை இலையில் வைத்த இடியப்பத்தின் மேல்சாம்பாரை ஊற்றியபடி சொன்னான். பாராட்டினான். இதை எனது முதல் சிறுகதைக்குக் கிடைத்த நற்சான்றிதழாக வரவேற்றுப் பேருவகை கொண்டேன். யாருக்காக எழுதினேனோ அவர்களிடமது சென்றிருந்ததை உணர்ந்தேன். அந்தப் பலத்தோடு தான் இன்றும் புனைவிலக்கியத்தைத் தொடர்கிறேன். இப்படியும் ஒருவன்!, எதிர்காற்று! என இது வரை இரு சிறுகதைத்தொகுதிகள் வந்துள்ளன. இதற்காக புனை விலக்கியவிடயத்தில் நிபுணத்துவம் கொண்ட அறிஞர்கள், மூத்த படைப்பாளிகளை நிராகரிக்கிறேனென்ற முடிவுக்கு வந்து விடக்கூடாது! அவர்களது சிந்தனைப் பரவல்களை புனை விலக்கியத்தின் செல் நெறியைச் செம்மைப்படுத்துகிறேன். ஆனால் எவரிடமும் பிரிதியைக் காட்டிச் செம்மைப்படுத்த வில்லை.

**"படைப்பாளி சமூகம் என்ற இடைத் தொடர்பில், விமர்சகர்களின் பாத்திரம், பங்களிப்பு என்பன எவ் வகையில் அமைய வேண்டுமெனக் கருதுகிறீர்கள்?"**

படைப்பாளி சமூகம் என்பவைக்கு மிகவும் நெருக்கமானவனாக விமர்சகன் இருக்க வேண்டும். சொல்லப் போனால் அவனுமொரு படைப்பாளிதான்! வாசிப்பில் மட்டுமே தங்கி படைப்பொன்றின் தாரதர்மியத்தைச் சொன்னால் போதாது. படைப்பாளி ஆராதிக்கும் கருத்தியலை அறிந்திருக்க வேண்டும். படைப்பு நிகழ்களத்தின் வாழ்வியலின் அசைவியக்கத்தைப் புரிந்தவனாகவும் இருக்க வேண்டும். தெரியாததொன்றைப் புனைவிலக்கியமாக்குவது மட்டுமன்றி திறனாய்வு செய்தலும் யதார்த்தத்தைப் பிரதிபலிக்காது. விமர்சனங்கள் செம்மையான ஓர் இளந்தலை முறையை உருவாக்குவதாக இருக்க வேண்டும். தளிர்களுக்கு தண்ணீர் ஊற்றிவளர்ப்பவன் விமர்சகன் என்பார்கள். ஒரு சிப்பிகொள்ளும் கணியத்திலானது தளிர்களுக்குப் பாராட்டுப் பன்னீரைத் தெளிக்க வேண்டும். அதே நேரம் மூத்த படைப்பாளிகள் படைப்பிலக்கியத்துறைக்கு ஆற்றியசெம்மையான பணிகளுக்காக அவர்களது படைப்புகளில் காணப்படும் தவறுகளைக் கண்டு கொள்ளாது விடவும் கூடாது. ஆனைக்கும் அடிசறுக்கு மென்பது அநுபவவாக்கல்லவா!

**"அவையில் குறைவான தலைகளே தெரிகின்றன..... பரவாயில்லை. மா.பா.சி. வந்திருக்கிறார். நிகழ்வின் நடப்புகள் பரவலான சனச முத்திரத்தைச் சென்றடையும்! எனக் கூறப்படுவதைக் கேட்டிருக்கிறோம். இவ்வகைப் பாராட்டைப் பெறும் படியாக நிகழ்ச்சித் தொகுப்புகள் எழுதுவதில் புதியபரிமாணத்தை ஏற்படுத்தியுள்ள உங்களுக்கு, இவ்வகையான எழுத்துப் பணிக்கு உங்களை அர்ப்பணிக்கக் காரணிகளாக இருந்தவைகளைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?"**

இலக்கியம், சமூகம் சம்பந்தமான கூட்டநிகழ்வுகளில் கலந்து கொள்வதில் எனக்கு அன்றும் இன்றும் பெருவிருப்புண்டு. அறிவுத் தளத்தை விரிவு படுத்தத்தக்கவைகளாகவும் இவைகள் இருப்பதை அநுபவங்கள் கற்றுத்தந்தன. ஆனால் ஊடகங்கள் இவைக்குத்தக்க முறையில் பிரசித்தம் கொடுப்பதில்லை. அரசியல், குழுச்சார்ந்த கண்ணோட்டங்களோடு இவைகளைத் தள்ளிவைப்பதை உணர்ந்தேன்.... மாறாகச் சில வேளைகளில் முன்னணியில் இருக்கும் பிரமுகர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, இலை மறைகாயாக இருக்கும் கல்விமான்கள், கலைஞர்களுக்கு இருட்டடிப்புச் செய்வது முண்டு. இதெனக்குத் தப்பாகவே பட்டது... தமிழிலக்கியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையோடு சம்பந்தப்பட்டிருப்பதால் பொலிந்து கொண்டிருக்கும் ஈழத்துத் தமிழிலக்கிய நூல்களுக்குக் கிடைக்கும் வரவேற்பை நன்கறிவேன். அழைப்பிதழில் பெயர் அச்சிட்டு, மேடைக்கு அழைத்து, பிரதம அதிதி மூலமாக நூலை வழங்கினாலும் வெளியீட்டுவிழாச் செலவே சேராத துர்ப்பாக்கிய நிலையில் எமது நூல் வெளியீட்டாளர்கள், நூலைவெளியிட்ட பின் அந்தரப் படுகின்றனர். இராம அணில் செய்த பணிக்கணியத்திலாவது இப்புது நூல்களுக்கு எனது பங்குப்பணியைச் செய்யவிழைந்தேன்.... மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, நூல் வெளியீட்டு நிகழ்வொன்றை மல்லிகைக்காக தொகுத்துத் தரும்படிகேட்டார். அதற்கிணங்க கொழும்புத் தமிழ்சங்க மண்டபத்தில் நிகழ்வுகளின் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த போது, "தினக்குரல்!" பிரதம ஆசிரியர் வீ.தனபாலசிங்கம், "இதைத் தொகுத்து எழுதிய கொப்பியொன்றை எனக்குந் தாரும் பாலா! எனக்கேட்டார். கொடுத்தேன். மாற்றங்களேதுமின்றி அது "தினக்குரல்" தினசரியொன்றில் பக்கத்துக்கும் மேலாக வெளியிடப்பட்டது. கூட்ட மொன்றின் குத்துவிளக்கேற்றலிலிருந்து நன்றியுரைவரைக்கான சகல நிகழ்வுகளையும் அனைத்துத் தமிழ்பேசும் வாசகரும் இவ்வகையில் விலாவாரியாக அறியவைக்கும்" தினக்குரல்" பத்திரிகைக்கும் அதன் பிரதம ஆசிரியருக்கும் அனைத்துத் தமிழ்பேசும் மக்களும் நன்றி கூற வேண்டும். "ஒரு நல்ல படைப்பாளி நாசமாகின்றான்" என்ற குற்றச்சாட்டுகளைக் கண்டு கொள்ளாது நான் இப் பணியைத் தொடருவதுக்கு மேற் கூறியவைகளே ஊக்கமாத்திரையாக உதவுகின்றன.

**"இச் செயற்பாடு தொடர்பில் கசப்பான அநுபவங்கள் ஏற்பட்டிருக்கலாம்! அப்படியேதாவது?"**

சீய்! இது வரை இல்லை.... நானெல்லாருக்கும் தோழனல்லவா....!

**"இப் பணிவிரிவாக்கம் பெற என்ன செய்ய வேண்டும்?"**

இவைகளைஆவணப்படுத்தினால், எதிர்காலக்கலை இலக்கியத் தேடல்களுக்கு உதவக்கூடும். காப்பியக்கோ ஜின்னாஹ்ஷரிபுத்தீன் சொன்னார், தனது நூலொன்றின் வெளியீட்டு விழா பற்றி நானெழுதித் "தினக்குரல்" இல் வெளியான பத்தியின் ஒரு பகுதியைத் தனது நூலொன்றில் பிரசுரித்திருப்பதாக. இவை "நிகழ்ச்சிகளில் கேட்டவைப் பத்தியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறதல்லவா" வெள்வேறு அமைப்புகளின் கூட்ட நிகழ்வுகள் கணிசமாகப் பதிவாக உள்ளன. இவ்வமைப்புகள் கரிசனையெடுத்து நூலாக்கி ஆவணப்படுத்தினால் அவைகளது செயற்பாடுகள் இனிவரும் சந்ததிகளையும் சென்றடையும்.

**"இயந்திரமய வாழ்க்கை, அதி நவீனமயப்பட்ட தொடர்பாடல் வசதியால் சுயமான உறவுகளிலிருந்து அந்நியப்படல் என்பவையால், உயிர்ப்பான வாழ்வைத் தொலைத்துவரும், இன்றைய தலைமுறைக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?"**

புத்திமதி சொல்லி வாழ்வை நெறிப்படுத்துவதுக்கு எனக்கு உரிய தகுதி உண்டா என்பதில் எனக்கு சமிசியமுள்ளது! இன்றைய தலைமுறையின் தலையில் பெரியசுமை ஏற்பட்டுள்ளது. புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல்ல என்பது பாரம் பரியமான செல்நெறி. மாற்ற மென்ற சொல்லைத் தவிர மற்றவை யெல்லாம் மாறத்தக்கவை என்பதும் மனித அறிவின் முதிர்ச்சி தந்த சிந்தனை வெளிப்பாடு. எனவே எந்தவொரு இன்றைய மனிதனும் உலகத்தோடு ஒத்தோடத் தான் வேண்டும்! ஆனால் உயிர்ப்பான வாழ்வைத் தொலைத்தல், உறவுகளிலிருந்து அந்நியப்படல் சமுதாயப்பாட்டுக்கு உதவாது. இன்று ஈழத்தமிழ் மண்ணில் இன அடையாளங்கள் தேடி அழிக்கப்படுகின்றன. இந்த அனர்த்தத்திலிருந்து தன்மண்ணை மீட்டெடுக்க இன்றைய தலைமுறை அதற்கான நேரத்தை ஒதுக்கிச் செயலாற்ற வேண்டும். அனைத்துத் தமிழனும் ஒன்று பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கத்தக்க புதிய பண்பாட்டுத் தளத்தை ஏற்படுத்துவதில் ஊக்கங்காட்ட வேண்டும். அந்நிய நாடு சென்று அங்கும் அந்நியராக வாழும் மனப்போக்கை மறு வாசிப்புச் செய்து, எம் மண்ணில் நாம் வாழ வேண்டும். அதை ஆளவும் வேண்டுமென்பதில் ஊக்கம் கொள்ள வேண்டும்.

**"புதிய பண்பாட்டுத் தளம் அதன் வெளியீடான புதியதளம் சஞ்சிகை என்பன குறித்து?"**

புதிய தலை முறைக்கு நான் சொன்னவைகளை அடியொற்றியதாகப் புதிய பண்பாட்டுத்தளம் அமைய வேண்டு மென விரும்புகிறேன். எந்த வொரு வெளிநாட்டின் அரசியல், கலாசார, பண்பாட்டு நகலாக அது அமையக்கூடாது. இதுவரை கற்றுக்கொண்ட பாடங்களிலிருந்து, தமிழ் அரசியல், வாழ்க்கை, இலக்கியம் என்பவற்றுக்கான செம்மையானதொரு தளத்தை அமைப்பதில் மக்களுக்குத் தெளிநிலையை ஏற்படுத்த வேண்டும். பழைய தவறுகளை மீட்டிப்பார்த்துத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதில் காலத்தை வீணடிக்கக் கூடாது.


புதியதளம்! சஞ்சிகையின் முதல் இதழில் எனது நேர்காணலை வெளியிட முன் வந்த கலாநிதிந. ரவீந்திரன் உட்பட்ட ஆசிரியர் குழுவுக்கு என் நன்றி.


தமிழக எழுத்தாளர் பிரபஞ்சன், இன்றைய இலக்கியச் சிற்றிதழ்கள், அவைகளது முன்னோடிச் சிற்றிதழ்கள் போலல்லாது பத்திரிகை எழுத்தாளர்களையே தயார்ப்படுத்துகின்றனவென அண்மையில் கருத்தொன்றை முன்வைத்திருந்தார். எனவே, "புதியதளம்" சஞ்சிகை மக்கள் இலக்கியப்படைப்பாளிகளை உருவாக்க வேண்டும். இன்றைய தமிழனின் அவலவாழ்வை யதார்த்தமாக வெளிப்படுத்தும் ஆக்கங்களைப் பிரசுரிக்க வேண்டும். ஒடுக்கப்படும் ஏழை, தொழிலாள மக்களின் மறைக்கப்படும். பிரச்சினைகளை வாசகருக்குக் கொடுக்க வேண்டும். விமர்சனம், திறனாய்வு என்பவற்றுக்குப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்த வேண்டும். இச்சஞ்சிகையை நகர எல்லைக்குள் மட்டுப்படுத்தாது கிராமங்களுக்குள் வாசகர்வட்டத்தைப் பெருக்க வேண்டும். இணையத்திலும் "புதியதளம்" வாசிக்கும் வசதியைச் செய்து கொடுக்க வேண்டும்.

---

# கல்வெட்டுக்கள்

அல் பிருனி .(அபு ரேஹான் முஅம்மாத் இப்ன் அகமது அல் பிருனி) தற்கால-உஸ்பெகிஸ்தான் என்று அழைக்கப்படும் Khwarezm, Samanid இல் பிறந்தார். september 4/5, 973 – இறப்பு –December 13 - 1048 (வயசு 75). ஆல்பிருனி என்பவர் இஸ்லாமியர்களில் மாமேதை. லியார்னோ டா டாவின்சி போல அவர் பல் துறை வித்தகர். பன் மொழிப் புலவர். இயற்பியல், மானுடவியல், ஒப்பீட்டு சமூகவியல், வானியல், ஜோதிடம், வேதியியல், வரலாறு, புவியியல், கணிதம், மருத்துவம், உளவியல், தத்துவம், இறையியல் என்று எல்லா துறைகளிலும் புலமை பெற்றவர். ஒரு பாரசீக மன்னர், அவரை இந்தியாவுக்கு அனுப்பி இந்து மத சாத்திர ரகசியங்களை அறிந்துவர உத்தரவிட்டார். அவர் கி.பி.1017 முதல் இந்தியாவில் 13 ஆண்டுகள் தங்கி இந்திய அறிவியல் ரகசியங்களை அராபியர் மூலம் உலகத்துக்கு அறிவித்தார். இந்தியவியல் (Father of Indology) படிப்பின் தந்தை என்று இன்று அவரை உலகம் பாராட்டுகிறது. அவர் இந்தியாவின் சரித்திரம் என்ற புத்தகம் எழுதியுள்ளர். கஜினி முகமது படை எடுப்பு பற்றியும் எழுதியுள்ளார். அவர் நெல்லிக்காய் மகிமையை இந்தியர்களிடமிருந்து அறிந்து தனது மருத்துவப் புத்தகத்தில் எழுதியுள்ளார். திரிபலா சூர்ணத்தில் பயன்படும் கடுக்காய் மகிமையையும் எழுதியுள்ளார். நெல்லிக்காய், புளி ஆகியவற்றுடன் தயாரிக்கும் சில பொருட்களை அவர் குறிப்பிடுகிறார்.






முன்மொழியப்பட்டது மற்றும் பூமியின் ஆரம் மற்றும் சுற்றளவு மதிப்பிட அல் பிருனி பயன்படுத்தப்படும் ஒரு முறை விளக்கும் விளக்கப்படம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதராஸ் க∴பே - Madras Cafe

- மணி புத்திரி -




விரக்தியுற்ற ஓர் மனிதன் (John Abraham) தொலைக்காட்சி செய்திகளைக் (முள்ளிவாய்க்கால்) கேட்டதன் பின்னர் ஒரு சர்ச்சுக்குச் சென்று பாதிரியாரிடம் பாவ மன்னிப்பு / பேசுவதே படத்தின் கதைத் தொகுப்பு. புழுதியும் கற்களும் மிதக்கும் ஒழுங்கைகளோ, பனை ஓலை வேலிகளோ, வலிநிறைந்த எம் மக்களோ அந்தப் படத்தின் ஒரு மூலையில் கூட வரவில்லை. சறுக்கியோடும் தார்ச்சாலைகளும், பிறமாநில வலிமிகுந்த மனிதர்களுமே பிரதியீடாக காட்டப்பட்டுள்ளது. அடர்ந்த காடுகளும், இறுக்கமான பாதுகாப்புமற்று , புலிகளின் தலைமையை சந்திக்க முடிவதும் தேடலின் ஆழமின்மையை காட்டிநிற்கிறது. குறைந்த அளவு நேரத்தில் காட்டப்படும், ராஜீவ் இனுடைய கொலை, அதற்கான சதித் திட்டம், நகர்வு, சுற்றிவளைப்பு என்பன விறுவிறுப்பை ஏற்படுத்த கமெராவும், re-recording உம் உதவியிருக்கிறது. பல ஓட்டைகளினூடும், தொய்வின்றி கதை நகர்ந்தது ஆச்சரியமே!,

வட இலங்கையில், யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்தில் தொடங்கும் கதை, ராஜீவ் காந்தி கொலையுடன் முடிவடைகின்றது. இலங்கை – இந்திய ஒப்பந்தம் (ராஜீவ் + ஜே ஆர்) கைச்சாத்திடப் பட்ட பின்னர், புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பதாகச் சொல்லி , சிலவற்றை கையளித்து விட்டு, இந்திய இராணுவத்துடன் யுத்தம் ஒன்றை ஆரம்பித்தனர். அச்சமயம் இரகசிய நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள RAW வினால் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப் படும் அதிகாரி விக்ரம் (John Abraham) தான் படத்தின் கதாநாயகன். கருத்தரித்த மனைவியைப் பிரிந்து செல்லும் விக்ரம் (John Abraham) போன வேலையை சரியாக நிறைவேற்றி இருந்தால்(?) ராஜீவை காப்பாற்றி இருக்கலாமோ என்கிற உணர்வும், தேசப் பற்றும், கட்சிப் பற்றும் மேலிட இப்படத்தை எடுத்திருக்கிறார்கள். இனிக் கதைக்கு வருவோம்,

LTTE அமைப்பை –LTF என்கிற குறியீட்டுடனும் தலைவர் பிரபாகரனை பாஸ்கரன் என்றும், அவரை கட்டுக்குள் கொண்டுவர முடியாத பட்சத்தில் , புலிகளால் அழிக்கப்பட்ட மாற்று இயக்கத்தினரை – ஶ்ரீ குழு வளர்த்து (EPRLF), ஆயுதங்கள் வழங்குதல், அதே வேளை புலிகள் இயக்கதினுள்ளும், இந்திய சார்புநிலையும் உட்கட்சி முரண்பாட்டினையும் வள்ர்த்தல் .அதற்காக வன்னிக் காட்டினுள் மல்லையா என்கிற மாத்தையா. இதற்கிடையில் அமெரிக்க ஆங்கிலம் பேசும், இங்கிலாந்து பத்திரிகையாளர். சுயுறு வினைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் – பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கேரளா) மேலதிகாரி, அவர் பணத்திற்காகவும், பெண்ணாசைக்காகவும், இலங்கையில் உள்நாட்டுப் போர் தொடர வேண்டும் என்று விரும்பும் வெளிநாட்டு ஆயுத வியாபாரக் கும்பலால் ராஜீவை கொலை செய்யும் சதித் திட்டத்திற்காக, பெருமளவு பணம் அவருக்கு கொடுக்கப்படுகிறது. மேலைத்தேய உளவு நிறுவனம் ஒன்று, அந்த அதிகாரியை பெண் தொடர்பு ஒன்றின் மூலம் சிக்க வைத்து, தனது காரியங்களை சாதித்துக் கொள்கின்றது. அவர் புலிகளின் நெருக்கமான நண்பராக காட்டப் படுகின்றார். ஸ்ரீ குழுவிற்கு ஆயுத விநியோகம் செய்யப் படும் தகவலை கசிய விடுகின்றார். கடற்கரையில் வந்திறங்கும் வெளிநாட்டு ஆயுதங்கள், புலிகள் கையில் போய்ச் சேர்வதற்கு உதவுகிறார். தனக்கு இடைஞ்சலாக உள்ள விக்ரமை கடத்திச் செல்லுமாறு புலிகளுக்கு காட்டிக் கொடுக்கிறார். பொது ஜனங்களைத் தானே கொலை செய்கிறீர்கள் எனக் கேட்ட விக்ரமின் மனைவி கொலை செய்யப்படுவதற்கும் காரணமாகின்றார். சித்திரிக்கப்பட்ட வை.கோவும், காசி ஆனந்தனும் கூட இடையில் முகம் காட்டி மறைகின்றனர். கோலாலம்பூரில் உள்ள மெட்ராஸ் கபே ஓட்டலில் ராஜீவ் காந்தியை கொல்ல சதித்திட்டம் தீட்டுவதாகவும், காட்சிகள் அமைந்துள்ளது. இறுதியில் ராஜீவ் காந்தியை கொலை செய்யும் சதித் திட்டம் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்புகளை அழிக்கிறார். பலவற்றை கதாநாயகன் கண்டுகொள்ள பத்திரிக்கை அழகி உதவுகிறார். சுயுறு அதிகாரி தற்கொலை செய்துகொள்கிறார். இந்திரா காந்தியின் அரசியல் சாணக்கியம், ராஜீவ் காந்தியிடம் இருக்கவில்லை என்பதோடு, இந்தியாவில் பாரிய மாற்றங்களை, அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மாற்றி அமைக்க ராஜீவ் முயன்றார் என்பதில் பிற வல்லரசு நாடுகள் கடுப்பாகி இருந்தன என்பதும் உண்மையே.

மதராஸ் கஃபே (Madras Cafe) என்பது ஒரு அரசியல் கலந்த பாலிவுட் இந்தி மொழி அதிரடித் திரைப்படம் ஆகும். சூஜித் சிர்க்கார் இதனை இயக்கியுள்ளார். ஜான் ஆபிரகாம் இந்தியப் புலனாய்வுத்துறை முகவராகவும், நர்கிசு /பாக்ரி பன்னாட்டு ஊடகவியலாளராகவும், பிரபாகரனாக அஜய் இரத்தினமும் இத்திரைப்படத்தில் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். இசையமைப்பு – சந்தனு மொய்த்ரா, ஒளிப்பதிவு கமல்ஜித் நேகி, படத்தொகுப்பு சேகர் பிரசபதி. ஈழப்போரை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் இந்தியா, இலங்கை, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் படமாக்கப்பட்டுள்ளது. இதன் தலைப்பு ஆரம்பத்தில் ஜாஃப்னா (Jaffna) எனப் பெயர் வைக்கப்பட்டது. 2013 ஆகஸ்ட் 23 இல் இது வெளிவந்திருக்கிறது

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் மரணத்துக்கு விடுதலைப் புலிகள் + சில சர்வதேச திரைமறை காரணம் என்று சொல்லும் மெட்ராஸ் கஃபே திரைப்படம், கற்பனையுடன் நிஜத்தையும் கலந்து குழப்பமாகத் தந்துள்ளது. இது பற்றி இந்திய அரசியல் பார்வையாளர் "தவ்லீன்சிங் http://www.niticentral.com/ இணையதளத்தில் எழுதியுள்ளதன் சுருக்கம்: (Madras Cafe brings back memories) மெட்ராஸ் கஃபே திரைப்படம் தொடங்கிய உடனேயே ராஜிவ் காந்தி கொலைக்குக் காரணமான நிகழ்வுகளை விவரிக்கும் திரைப்படம் இது என்பதை வெளிப்படுத்திவிடுகிறது. இலங்கையில் தனிநாட்டுக்கான தமிழர்களின் போராட்டம், காடுகளில் தமிழ் புலிகளின் தலைமையகத்தின் செயல்பாடுகள் பற்றியெல்லாம் சொல்லுகிறது இத்திரைப்படம். வேலுப்பிள்ளை பிரபாகரனாக நடித்திருப்பவர் (நன்றாகவே நடித்திருக்கிறார். ஆனால் இந்தப் படம் என்னை வருத்தப்படவும் வைத்தது. மிக முக்கியத்துவமான வரலாற்று நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட படம் என்று சொன்னாலும் உண்மையான வரலாற்றை சொல்லத் தவறிவிட்டது. இலங்கை தொடர்பான தங்களது நிலைப்பாட்டை ராஜீவ் காந்தி பின்பற்றினால் அது அவரது உயிருக்கு மிகவும் ஆபத்து என்று தெரிந்தே இருந்த இந்திய அதிகாரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படியெல்லாம் ராஜீவுக்கு துரோகம் இழைத்தனர் என்பதை லேசாக தொட்டுச் செல்கிறது படம். இன்னும் சற்று கூடுதலாக ஆராய்ந்திருந்தால் எப்படியெல்லாம் இலங்கை விவகாரத்தில் தலையிட்ட இந்திய அதிகாரிகள், விடுதலைப் புலிகள் போன்ற குழுக்களை அரவணைத்துக் கொண்டே ராஜீவுக்கு துரோகம் இழைத்தனர் என்பதை சொல்லியிருக்க முடியும். ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது டெல்லி அசோகா ஹோட்டலில் தங்கியிருந்த பிரபாகரன் மற்றும் தமிழ் தீவிரவாதிகளை தனிப்பட்ட முறையில் சந்தித்த தருணங்கள் நினைவுக்கு வருகின்றன. ராஜீவ் காந்தியைப் பொறுத்தவரையில் சர்வதேச அரசியலை அவ்வளவாக அறிந்தவர் அல்ல. இதனால் அவர் நம்பிக்கைக்குரிய அதிகாரிகளின் ஆலோசனைகளை எதிர்பார்த்திருந்தார். இந்த ஆலோசனைகளால்தான் தமிழ் தீவிரவாதிகளின் ஆதரவாளர் என்ற நிலையில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க இராணுவத்தை அனுப்பும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டார். அப்படி ராஜீவ்காந்தி அனுப்பிய வீரர்கள், அமைதிப் படை என்ற பெயரில் கைகளை பின்புறமாக கட்டி அனுப்பி வைக்கப்பட்டவர்கள்.. இதனாலேயே 1500 இந்திய வீரர்கள் உயிரிழக்க நேரிட்டது. ஏனெனில் அந்த யுத்தமானது படு குழப்பமானது..நிச்சயம் வெற்றிபெற முடியாதது.. அதுதான் ராஜீவ் காந்தியின் வாழ்க்கை முடிந்துபோனதற்கு உண்மையான காரணமும் கூட. ஆனால் மெட்ராஸ் கஃபே திரைப்படம் அதைப் பற்றியெல்லாம் சொல்லவே இல்லை.. இதற்கு மாறாக மேற்கத்திய நாடுகள் தங்களது சொந்த இராணுவ – வணிக நலன்களுக்காக இலங்கையை தங்கள் வசமாக்கிக் கொள்ள முயல்வதாகவும், தங்களது நலன்களுக்காக இந்தியாவை பலவீனப்படுத்தவே தலையிட்டதாகவும் சொல்கிறது மெட்ராஸ் கஃபே. உண்மை என்னவெனில் இந்திரா காந்தி காலத்தில் இருந்தே இலங்கையின் விவகாரங்களில் இந்தியா தலையிடத் தொடங்கிவிட்டது. இலங்கையை தெற்காசியாவின் சிங்கப்பூராக மாற்றுவதற்காக தாராளமய பொருளாதார கொள்கைகளை ஜெயவர்த்தனா அறிமுகப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை இந்திரா காந்தி ஏற்கவில்லை. இந்திய மண்ணில் எப்படி பாகிஸ்தானின் ஜிஹாதி அமைப்புகள் தற்போது எப்படி இயங்குகின்றனவோ அதுபோலத்தான் அன்று இலங்கையின் உள்விவகாரங்களில் இந்தியாவும் தலையிட்டது. இதனது தொடர்ச்சிதான் ராஜீவ்காந்தி உயிரிழக்க நேரிட்டது. மேலும் டெல்லி செங்கோட்டை சுவர்களுக்குள் புதைக்கப்பட்ட பல கோரமான துரோகங்களும் உண்மை கதைகளும் பாலிவுட் திரைப்படங்களால் சொல்வதற்கான நேரம் இன்னமும் வரவில்லை என்று கூறியுள்ளார்.

சென்னை:மெட்ராஸ் கஃபே படத்தில் தமிழர்களுக்கு எதிரான எந்தக் காட்சியும் இல்லை. தமிழர்களை அதில் இழிவுபடுத்தவும் இல்லை. படம் நன்றாகத்தான் உள்ளது. அத்தனை தமிழர்களும் பார்க்க வேண்டிய படம் இது என்று பேசியுள்ளனர் காங்கிரஸார். மெட்ராஸ் கஃபே படத்துக்கு எதிராக தமிழகத்தில் போர் வெடித்தது ,பல்வேறு கட்சிகளும், அமைப்புக்களும் மாணவர்களும் போராடி வந்தனர். பிரபாகரனாக நடித்த அஜய் இரத்தினத்தின் படங்களை புறக்கணிக்க வேண்டும் எனவும் ஈழ அபிமானிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். படம் முழுக்க வரும் இந்திய இராணுவமும், சிலகாட்சிகளில் மாத்திரம் வந்து போகும் ஸ்ரீலங்கா படையினரும், சாதாரண பொது மக்களுக்கு எந்த வொரு தீங்கும் இளைக்காதவர்கள் போன்று காட்டுவதே முழுப்பூசணியை சோற்றில் மறைத்தது போல், மெட்ராஸ்கஃபேயின்பக்கச் சார்புத்தன்மையை வெளிப்படுத்துகின்றது. வியாபார ரீதியில் தோல்வியடைந்திருக்கும் இப்படம், பலதை எமக்கு சொல்லாமல் சொல்லி சென்றிருக்கிறது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைபேசி

ஒரு ஆட்டோமொபைல் நிறுவனத்தினால் நிறுவப்பட்ட ஒரு தொலைபேசி தொகுப்பில் இருந்து ஜூன் 17, St. Louis, Missouri இல் , 1946 இந்த முதல் மொபைல் தொலைபேசி அழைப்பு Bell Labs scientists Alton Dickieson, D. Mitchell and H.I. Romnes விஞ்ஞானிகள் ALTON Dickieson, பலரினால் மேற்கொள்ளப்பட்டு 10 ஆண்டுகள் முடிவு பெற்றது, தொலை நெட் இனால் இணைக்கப்பட்ட முதல் கைபேசி ஸ்வீடன் நாட்டு காவல் துறையினரால் 1946ம் ஆண்டு செய்யப்பட்டது என்றும், காவல் துறையினர் உபயோகப்படுத்தி வந்த தகவல் தொடர்பு ரேடியோவே இதன் முன்னோடி என்றும், சொல்வர். 1960 களில் சிறிது வளர்ச்சியடைந்த தொழில் நுட்பம் 1967 "நெட் வொர்க்" உட்பட்ட அழைப்புக்களை மட்டும் ஏற்றுக்கொண்டது. பெல் ஆய்வுக்கூட பொறியாளர் ஆமோஸ் எட்வர்ட் என்பவர் 1970ல் தானியங்கியாக ஒரு அழைப்பு கோபுர எல்லையிலிருந்து இன்னொரு எல்லைக்கு அழைப்பு துண்டிக்காமலேயே செல்லும் "அழைப்பு கைமாற்ற" தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அது கைபேசி வளர்ச்சிக்கு பேருதவியாயிற்று. 1971ல் "ஏ.டி.ரூடி" நிறுவனம் கைபேசி சேவை ஒப்புதலுக்காக பெடரல் தொலை தொடர்பு குழுவிடம் விண்ணப்பித்தது. அது சுமார் பதினோரு ஆண்டுகளுக்குப் பின் 1982ல் அங்கீகரிக்கப்பட்டு தனியாக அலைவரிசை ஒதுக்கப்பட்டது.

இதே வேளை ஐரோப்பாவில், மொபைல் வானொலி சேவைகள் உருவாக்கப்பட்டன. மேற்கு ஜேர்மனியில் ஒரு நெட்வொர்க் ஒரு – நேவணநாட்டின் முதல் பொது வர்த்தக மொபைல் போன் நெட்வொர்க் 1952 இல் தொடங்கப்பட்டது 1972 ஆம் ஆண்டில் இந்த தானாகவே அழைப்புகள் இணைக்கப்பட்ட இது பி Netzமூலம் இடம்பெயர்ந்து, 1966 ஆம் ஆண்டு நோர்வே கைமுறையாக கட்டுப்பாட்டில் ஓல்ட் என்ற அமைப்பை கொண்டிருந்தது.

1958 ஆம் ஆண்டு சோவியத்தில் வளர்ச்சி தொடங்கியது. "Altay" தேசிய உள்நாட்டு மொபைல் போன் சேவையை சோவியத் MRT-1327 தரத்தை அடிப்படையாக கொண்டிருந்தது. Altay அமைப்பின் முக்கிய உருவாக்குநர்கள் கம்யூனிகேஷன்ஸ் Voronezh அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் (VNIIS) மற்றும் மாநில சிறப்புத்திட்ட நிறுவனம் (GSPI) இருந்தன.1963 ல் சேவை மாஸ்கோவில் தொடங்கியது, மற்றும் 1970 ல் சோவியத் ஒன்றியம் முழுவதும் 30 நகரங்களில் வைக்கப்பட்டிருந்த Altay அமைப்பின் பதிப்புகள் ரஷ்யா சில பகுதிகளில் ஒரு ட்ரங்கிங் கணினி பயன்பாட்டில் உள்ளது.

1966 ஆம் ஆண்டு, பல்கேரியா பாக்கெட் மொபைல், கம்பி இணைப்பு, ஆறு வாடிக்கையாளர்கள் வரை சேவை செய்ய முடியும் என்று சொன்னார்.

ஜான் எப் மிட்செல் சிறிய தொடர்பு தயாரிப்புகள் மற்றும் கையடக்க மொபைல் தொலைபேசி கருவிகள் வளர்ச்சி முன்னேற்றம் ஒரு முக்கிய பங்கை 1973 ல் சூப்பர் முதலாளி, ஒரு மோட்டோரோலா தலைமை. மிட்செல் வெற்றிகரமாக மோட்டோரோலா எங்கும் பயன்படுத்த போதுமான அளவு சிறிய என்று கம்பியில்லா தொடர்பு தயாரிப்புகள் அபிவிருத்தி தள்ளப்படுகிறது மற்றும் செல்லுலார் தொலைபேசி வடிவமைப்பு பங்கேற்றனர் 1978 இல் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது, Analog cellular networks - 1G அமெரிக்காவில் 1978, இஸ்ற்றேளில் 1986, ஆஸ்திரேலியாவில் 1987..AMPS செல்லுலார் தொழில்நுட்பம் இருந்தது. ஒட்டுக் கேட்கும் குறைபாடு இருந்தமையால் "குளோனிங்" மற்றும் அதை ஆதரிக்கும் ஒரு Frequency-division FDMA திட்டம் மற்றும் wireless spectrum தேவையான குறிப்பிடத்தக்க அளவு பயன்படுத்தப்படும். அத்தகைய Motorola DynaTAC



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Analog AMPS ? சின்னமானஆரம்பவணிககை தொலைபேசிகள் பல இறுதியாக 1990 இல் டிஜிட்டல் Analog AMPS மூலம் அகற்றி , மற்றும் AMPS சேவை 2008 பெரும்பாலான வட அமெரிக்க carriers களால் 2008 இல் – Digital cellular networks - 2G ஐரோப்பிய சந்தையில் GSM, அமெரிக்காவில் CDMA வகையறாக்களும் வந்தன. இச் சந்தர்ப்பத்தில் தான் Pre paidமுறை அறிமுகமானது. 1991 இல் பின்லாந்தில் GSM network (Radiolinja). அவை 900 ஆர்ண frequency இல் வேலை செய்தது. 1993, IBM Simon இல் பல அதிசயங்கள் கொண்டு வரப் பட்டன. calendar, address book, clock, calculator, notepad, email, என்பன.

பெரிய size குறைவடைந்து, நீண்ட நேரம் பாவனைக்குரிய Battery கொண்டுவரப்பட்டது. அதன் Processor இன் செயல் திறனும் அதிகரிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக SMS வருகை. UK இல் 3 December 1992 தொடர்ந்து பின்லாந்தில் 1993. 90 கலீல் ஆரம்பித்த SMS தொழில் நுட்பம் அதிக ஆதிக்கம் செலுத்தும் சக்தியாக மாறியுள்ளது. .

கைபேசிகள் மூலம் விளம்பரங்களையும், கட்டணம் வசூலிக்கும் முறையையும் பின்லாந்து, சுவீடன், நோர்வே ஆரம்பித்தது. கைபேசியில் இணைய சேவையை NTT DoCoMo 1999 இல் Japan இல் ஆரம்பித்தது . Mobile broadband data – 3G 2002 இல் 3G networks CDMA2000 1xEV-DO என்கிற தொழில் நுட்பம் SK Telecom, KTF ck South Korea இல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பரவல் அடைந்த வானொலி, தொலைக்காட்சி பதிவிறக்கங்கள் HSDPA (அதிவேக தொகுப்பு அணுகல்) செய்ய இலகுவாகி அது கைபேசிக்குள் வந்தது. 2010 இன் ஆரம்பத்தில், E-readers, களுக்கான Amazon Kindle இணைப்பை wireless internet, மூலம் செலுத்தியது. அத்துடன் Apple நிறுவனம் wireless internet I iPad tabletஇல் கொண்டுவந்தது. இன்று, மினி ipad , ipad air உம் வந்துவிட்டது.

Native IP networks - 4G

3G ஐ விடவும் 10 மடங்கு திறன் வாய்ந்ததாகக் கருதப் படுகிறது. 4G தற்சமயம் WiMAX என்று அமெரிக்காவிலும் Scandinavia லும் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. நொடிக்கு 21 மெகாபிட்ஸ் போன்ற வேகத்தில் தரவுகளை அளிக்க வல்லதாகும்

சேட்டிலைட் போன்

இணைந்து பூமியை சுற்றிவரும் செயற்கைக்கோள்களின் கம்பி நெட்வேர்க்குகள். 1979 இல் உருவாக்கப்பட்டது. 1998இல் Iridium satellite பண முடக்கத்தால் பின்தள்ளப்பட்டாலும், இன்றும் தொடர்புகள் பெற்றுக்கொள்ளப்பட முடிகிறது

ஐந்து உலகளாவிய மொத்த மொபைல் போன் விற்பனையாளர்கள்,

1. சாம்சங் 22.7% - 23.0%
2. நோக்கியா 18.0% - 17.9%
3. ஆப்பிள் 9.2% - 9.9%
4. ZTE 3.4% - 3.6%
5. எல்ஜி 3.2% - 3.3%

மற்றவை 43.5% - 42.3%

1907 முதலாவது Wireless Telephone System உருவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1930 முதல் Motrola Brand car Radio தயாரிக்கப்பட்டது
1931 கனேடியரால் Walkie -Talkie கண்டுபிடிக்கப்பட்டது
1936 பொலீசாருக்கான Police Crusier Radio Receiver உருவானது
1940 எடுத்து செல்லப்படக்கூடிய ஙயனெை –Talkie NubNah
1943 முதலாவது எடுத்து செல்லக்கூடிய FM Two -Way Radio
1947 Citezen 's Band Radio , Car Radiotelephone
1947 Transistor (கொள்ளளவி) கண்டுபிடிக்கப்பட்டது
1949 Pager (beeper )உருவாக்கப்பட்டது
1954 முதலாவது எடுத்து செல்லக்கூடிய ரேடியோ
1956 கார் மொபைல் போன் சிஸ்டம்
1958 கம்ப்யூட்டர் சிப் (IC )உருவானது
1966 Cordless தொலைபேசி உருவானது
1972 இன்டெல் இன் முதலாவது மைக்ரோ Processor
1973 முதலாவது தொலைபேசி பாவனைக்கு வந்தது
1979 satelliteபோன் உருவாக்கப்பட்டது
1983 முதலாவது எடுத்துசெல்லக்கூடிய கமெர்சியல் செல்போன்
1991 உலகின் முதலாவது GSM செலூலர் போன்
1993 SMS பயன்படுத்தப்பட்ட்டது (தற்செயல் நிகழ்வு)
1994 Bluetooth டெக்னாலஜி உருவாக்கப்படாது
1995 முதலாவது இரு வழி பேஜர் உருவானது
1998 Nokia 2110: முதலாவது Color Palm –Size PC
2000 முதலாவது GPRS செலூலர் சிஸ்டம்
2002 Blackberry5810 சந்தைக்கு வந்தது
2003 Motrollaஇன் A600 செல்லுலர் போன்
2004 மைக்ரோசொப்ட் இன் முதலாவது மியூசிக் போன்
2005 Maicrosoft 3G போன்
2006 Microft Windows 5 .0 SmartphoneMotrolaவின் Ming Smartphoneபோன்றன பாவனைக்கு வந்தது
2007 iPod ,TouchAppleஇன் iPhoneAndroidOS,Wi –MaxAmzon Kindle (Wirless Reading De vice )போன்றன இவ்வாண்டு அறிமுகமாகின
2008 முதலாவது Androd Phone HTC DreamiPhone 3GiPhone இக்கான SKDஎன்பன இவ்வாண்டில் அறிமுகமாகின
2009 Nokia 900
2010 iPad ,IPhone 4 , BlackBerry Play Book பயன்பாட்டுக்கு வந்தது.
2012 (Huawei Ascend G330 ,HTC 8s , Samsung Ativ S, iPhone 5
2013 BlackBerry Z30, ZTE Blade V, Nokia Lumia 625,HTC One Max, Google Nexus Iphone - 5, 5s ,5C

எதிர் காலத்தில் இப்படியும் வசதிகளுடன் வரவிருக்குதாம்.

ஹாலோகிராம் / குறுகிய திட்ட திரைகளில் (Hologram / short projection screens)

முன்னேறிய “மிகை உண்மையில்”(augmented reality’)

ஆற்றல்மிகு ப்ரொஜக்டர்( projectors)

நெகிழ்வான திரை –(Flexible screen)

விழித்திரை அல்லது கைரேகை அங்கீகாரம் –(Retina or fingerprint authentication)

இப்படியாக பல தொழில்நுட்ப புரட்சியுடன் கைக்குள் வரப்போகிறதுஉலகம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிறுகதை**

# ஈக்கி

**வி.கௌரிபாலன்.**



தன் காதுகள் ஓயாத இரைச்சலுடன் இடைவிடாது வலித்துக் கொண்டிருப்பதால், எதையும் சரியாக கிரகிக்க முடியாது போனதால் கவலையானாள். ஏதோ ஒரு மார்கழி மாத மழை இரைச்சலையோ...., கோடை இடியையோ..., அதிகாலை புள்ளினங்களின் சிலம்பலையோ..., வாகன உறுமலையோ...., கோர்ன் சத்தத்தையோ..., கோவில் மணி ஓசையையோ...., குழந்தையின் அழுகையையோ...., சிரிப்பொலியையோ.... ஒரு நாள் கேட்க முடியாது போய்விடும் என, மரக்கிளையின் அசைவுடன் அசைந்தபடி மனம் நொந்து சொல்லிக் கொண்டாள். இருளில் தான் நிலையெடுத்திருக்கும் மரத்தின் கிளை பற்றி அவளுக்குத் திருப்தியான எண்ணம் எதுவும் எழவில்லை. இருளில் அடி மரத்தின் பட்டைகளை கைகளால் பற்றி அசைத்துணர்ந்து, மரம் வலிமையானது என அனுமானித்திருந்தாள். கிளையின் அதிகமான அசைவும், அதிகமாக வளையும் தன்மையும் அவளுக்கு வருத்தமளித்தது. கிளையின் அடிப்பகுதியை கால்களால் கவ்வி கிளைக் கெந்தின் பகுதிகளில் கைகளை அகல விரித்து, ஒரு மரப் பல்லியைப் போல் அவள் அந்தக் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தாள். அவளது பாரத்தை தாங்காது கிளை அதிகமாக கீழே கவிழ்ந்தது. மரத்தின் உச்சாணிக் கெந்தில் இருந்த போதும் கிளையின் அதிக வளைவால், தலை குப்புற கவிழ்ந்த நிலையில் அவளது பார்வைத் தூரம் அதிகமாக இல்லாது, மிகக் குறுகிய தூரமாக மட்டுப்படுவது அவளுக்கு தன் ஆற்றல் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியது. சாமத்தில் பெய்த மழையால் நனைந்து போயிருந்த மரக் கெந்தின் ஈரமும்,இலைகளில் தேங்கிக் கிடந்த ஈரமும், அவள் உடைகளை நனைத்து உடலுடன் ஒட்டிப் போகச் செய்திருந்தது. மெல்லிய காற்றுக்கு உடல் வெடவெடப்பதையும், இலைகளில் இருந்து உதிரும் சிலுநீர் உடலை இன்னமும் குளிரில் உறையவைப்பதையும் உணர்ந்தாள். அவள் தான் நிலை எடுத்திருந்த கிளையில் இருந்து வேறு கிளைக்கு தன் நிலையெடுப்பை மாற்ற விரும்பவில்லை. அது அவளை எதிரிகளிடம் காட்டிக் கொடுத்துவிடும் என்பதில் திடமாக இருந்தாள். அதிக பார்வைத் தூரத்தை கண்காணிக்க முடியாத காரணத்தினால், தன் செவிப்புலனை கூர்மையாக்கி தொலைவு நோக்கி ஏவி, காற்றில் மரங்களின் அசைவுகளின் இரைச்சலைத் தவிர்த்து, இயந்திரங்களின் உறுமல் ஓசையை பிரித்தரிய முனைந்து கொண்டிருந்தாள். நிலையெடுத்திருந்த மரத்தில் இருந்து ஒரு மைல் தொலைவிற்குள் பிரதான வீதி இருப்பதை உணர்வாள். ஆனால் எதுவித கோர்ன், உறுமல் ஒலியுமற்று வீதி அமைதியாக இருப்பதை ஊகித்தாள். தூரத்தில் மிக மெல்லிய நீண்ட ஓசையில் சேவல் ஒன்றின் கூவல் ஒலி கேட்டது. அவள்இந்த மரத்தில் நிலையெடுப்புச் செய்து சில மணி நேரம் ஆகி இருக்கும் எனக் கணிக்க முற்பட்டாள். திடீர் என்று அயலில் இருந்த மரங்களில் இருந்தும், அவள் நிலையெடுப்புச் செய்திருந்த மரங்களில் இருந்தும் நெருக்கமாக... மெதுவாக ஆரம்பித்துப் பின் உரத்து இடைவிடாது பறவைகளின் அதிகாலைச் சிலம்பல் ஒலி நாலாபுறமும் எழுந்தது. அவள் அந்த மரத்தில் நிலையெடுக்கும் போது சில பறவைகள் மரத்தில் இருந்து சட... சடத்து வெளியேறிய போதும் அந்த மரத்திலும் பறவைகள் தங்கி இருப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. தன் நிலையெடுப்பின் சலனமின்மையின் நுட்பத்தை வியந்து கொண்டாள். அவள் தன் நிலையெடுப்பில் இருந்து பின்வாங்குவது என்று முடிவெடுத்த கணத்தில் அந்த கூர்மையான வாகன இரைச்சலைச் செவிமடுத்தாள். அவளது இயல்பான புலனாய்வுப் புத்தி விழித்துக் கொண்டது. வாகனத்தின் இரைச்சல், இஞ்சின் இயக்கத்தின் தன்மை என்பவற்றைப் பிரித்து வரும் வாகனங்களின் வகைகளைப் பிரித்தறிய முற்பட்டாள். வரும் வாகனங்கள் தம் இருப்பிடத்தை இன்னும் சில நிமிடங்களில் நெருங்கிவிடும் என்பதை ஊகித்தவளாக தன் நிலையெடுப்பில் இருந்து வேகமாக நழுவி பின்வாங்கினாள். தன் கால் விரல்களையும், கை விரல்களையும், ஒரு விலங்கின் கூரிய நகங்களாகப் பாவித்து, ஒரு மரப் பல்லியின் அங்க அசைவுடன் மரத்தில் இருந்து ஈரலிப்பான தரையில் இறங்கினாள். நிலம் அதிகம் சேறும் சகதியுமாக இருந்ததால்,கால்களை அகலமாக இடம் வலம் மாறிவைத்து பக்கவாட்டில், அரைச் சுவருக்கு மேல் நெற் அடித்த விசேட கவனிப்பு முகாமின் நிர்வாக உத்தியோகத்தர் தூங்கிக் கொண்டிருந்த கட்டிடத்தை நெருங்கினாள்.

நிர்வாக உத்தியோகத்தர் தூங்கும் கட்டிலின் பக்கச் சுவரை நெருங்கிய அவள், அரைச் சுவருக்கு மேல் அடித்திருந்த நெற்றை இரைச்சல் எழ இடக்கையால் தட்டினாள். திடுக்கிட்டு விழித்த அவர், தலைமாட்டில் கண்ணாடியை தடவி எடுத்து அணிந்து கொண்டு ..., கட்டிலில் எழுந்தமர்ந்து அதட்ட முற்படுவதை..., இருளுக்குப் பழக்கப்பட்ட கண்களுக்குள் கண்டாள்.

“இரண்டு வாகனம் முகாம் நோக்கி வருது......, ஒன்று பிக்கப்...., மற்றது எல்ப்”.

லோட்டோட வருது...”

அதட்டலுக்கான முனைப்புத் தகர்ந்து போனதால்.., அவர் தன் இடுப்பில் சாரத்தை அவசர...., அவசரமாகக் கட்டிக் கொண்டு எழுவதைக் கண்டாள். வாகனம் வரும் ஒழுங்கையை கவனித்தபடி சற்றுக் குனிந்து இடப்பக்கமாக கால்களை இடம் வலம் மாறி வைத்து கால்கள் சேற்றில் சறுக்கிவிடாமல் தன் அறையை நோக்கி நகர்ந்தாள். சேறும் சகதியும் குழியுமான அந்த ஒழுங்கையில் வாகன ‘கெட்’ லைட்டுகளின் ஒளிப் பொட்டுகள், உயர்ந்தும்...., பதிந்தும்...., இடம் வலமாக அசைந்தும் வருவதை..., அவள் நகர்ந்து கொண்டே கவனித்தாள். அவள் தன் அறையை நெருங்கிய போது...., நிர்வாக உத்தியோகத்தரின் அறையில் ‘பல்ப்’ எரிந்தது.அவளது அறையின் பின் சுவரில் எரியும் லைட்டின் வெளிச்சம் நெற்றின் சதுரம்... சதுரமான... நிழலுடன் விழுவதைக் கண்டாள்.அவள் அவசர... அவசரமாக ஈர உடுப்பை மாற்றிக் கொண்டு கட்டிலில் விழுந்த போது..., முகாம் கதவு திறக்கப்பட்டு வாகனங்கள் உள்ளே வந்து ஓய்வுக்கு வருவதையும்..., நிர்வாக உத்தியோகத்தர் வணக்கம் சொல்வதும்..., வந்தவர்கள் பதில் வணக்கம் சொல்வதையும் தன் இரையும் காதுகளுக்குள் உள்வாங்க முனைந்தாள். அவர்களது உரையாடல்களைச் செவிமடுக்க முனைந்த போது, காதுக்குள் நெருப்புப் பத்துவது போன்ற தாங்கமுடியாத கொதிப்பை உணர்ந்தாள். நெற்றிப் புருவத்தில் மிக மெல்லிய வலியாக ஆரம்பித்து தலை முழுவதும் பரவி தன் கால் கைகளை செயலிழக்க வைப்பதையும், தன்னை அரை மயக்க நிலைக்குக் கொண்டு போவதையும் உணர்ந்தாள். வயிறு குமட்டிக் கொண்டு சத்தி வரும் போல் இருந்த போது..., சட்டென்று எழுந்து தலைமாட்டில் இருந்த வெள்ளைப் பெயின்ற் அடித்த இரண்டடி உயரமான சிறிய மேசையின் இழுப்பறையை, இழுத்து அதற்குள் இருந்து வலி மாத்திரைகளை அவசர... அவசரமாக... வாய்க்குள் போட்டு. பிளாஸ்ரிக் போத்தலைத் திறந்து தண்ணியை தொண்டைக்குள் அண்ணாக்காக ஊற்றி விழுங்கினாள். மல்லாக்காய் கட்டிலில் விழுந்த போது, வெளிச் சூழலின் தெளிவற்ற உரையாடல்கள் முற்றாக உணர்விழக்காத அவளது நினைவுகளில் அலை மோதிக் கொண்டிருந்தது. மீண்டும் சுயநிலையை அடைய எத்தனை மணித்தியாலம் பிடிக்குமோ என்ற அவளின் மன உளைச்சலை,வலிமை மிக்க மாத்திரைகளின் வேகம் துண்டம்... துண்டமாக ஆக்குவதை உணர்ந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கே... தெளிவற்ற புகை மூட்டத்துடன் அவள் பள்ளித் தோழி பவானி இரட்டைப் பின்னலும்...., பூப் போட்ட வெள்ளைச் சட்டையுமாக சிரித்துக் கொண்டு வந்தாள். அவள் முகம் தெளிவாக வந்த போது... பூவரச மரத்தின் பிரவுண் தண்டுகளும், பசிய இதய வடிவ இலைகளும், மஞ்சல் பூக்களும் பவானியின் பின்னணியில் அசைந்தாடின. காட்டு மரங்கள் நெருக்கமாகப் போட்டு, வருச்சை குறுக்காக வைத்துக் காட்டுக் கொடிகளால் பிணைத்துக் கட்டிய வளவிற்குள் தந்தையுடன் மரவள்ளித் தடி வெட்டிச் சீவி நட்டுக் கொண்டிருக்கும் போதுதான்,பள்ளித் தோழி பவானி கடப்பின் குறுக்குத் தடிகளுக்குள்ளால் புகுந்து வந்து,அவள் காதுக்குள் குசு...குசுத்தாள்.

"பள்ளிக்க...இயக்கம் வீடியோப் படம்...போடுதாம்......" பவானி கடப்பின் குறுக்குத் தடிகளுக்குள்ளால் புகுந்து வெளியேறுவதைப் பார்த்துக் கொண்டே.... பின்னால் தானும் புகுந்து வெளியேறினாள் "எங்க....." திரும்பிய போது, செம்பாட்டுப் புழுதி படிந்து...., படிந்து காவி ஏறிப் போன வேட்டியை மடித்துக்கட்டி, ஒரு கையில் கத்தியும்... மறு கையில் மரவள்ளித் தடியுமாக கறுத்து வரண்ட சேட்டுப் போடாத தேகத்துடன் அவள் தந்தை இவர்களை காட்டு மரங்களிலான வேலியைப் பின்புலமாகக் கொண்ட வளவுக்குள் இருந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். "பள்ளிக்க...." நடுவிலும் இரு கரைகளிலும் புல்திட்டு வரம்பு போல் நீண்டிருக்க,நடுவில் வாகனம் போய்ப்...., போய்... பள்ளமும் திட்டியுமாக நீளும் செம்மண் புழுதிப் பாதையில் தன்னை விட்டு விட்டு ஓடும் பவானியை ஓடவிட்டுப் பார்த்திருந்த அவள்... வேகமாக ஓடி... அவள் முதுகைத்தட்டி... பவானியைத் தாண்டி ஓடி...., பிரதான வீதியை நெருங்கும் வரை முன்னே மூச்சிரைப்புடன் ஓடிக் கொண்டே...., பின்னால் வரும் பவானியை திரும்பிப் பார்த்துப் பார்த்து ஓடினாள்.

பனையும் ஆலமரமும் பிணைந்து விழுதுகள் தொங்கிக் கொண்டிருந்த மரத்தின் கீழே, புகை பட்டுப்..., பட்டு..., கறுத்துப் போன கிடுகுமட்டை வேய்ந்த தேத்தண்ணிக் கடையும், சைக்கிள் கடையும் சேர்ந்தாற் போல் இருக்கும் கடைகளை நெருங்கிய போது..., தார் வீதியில், பள்ளிப் பக்கமிருந்து, அவர்கள் வகுப்புக்கார குமரன், தமக்கையின் கூடை பூட்டிய லேடிஸ் சைக்கிள்சீற்றில் இடமும் வலமுமாக அரைந்து சைக்கிளை ஓட்டி வருவதைக் கண்டாள். "இண்டைக்கு எவ்வளவு கொச்சிக்காடா அரைச்சாய்..."

பவானியின் நக்கலைப் பொருட்படுத்தாது, தன் முகத்தை சீரியஸாகப் பார்த்துக் கொண்டு அவன் சொல்லப் போவதைக் கவனித்தாள். "படம் போட லேட்டாகுமாம்டி..., இன்டைக்கு கட்டுநாயக்கா அடிபாடு போடுரதாண்டி..."

குமரன் சைக்கிள் சீற்றில் கொச்சிக்காய் அரைத்துப் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு உற்சாகம் வடிந்து போனது. வீட்டுக்குப் போகும் எண்ணம் இல்லாததால், பவானியை இழுத்துக் கொண்டு றோட்டைக் குரஸ் பண்ணி தேக்கு மரத்துக்குக் கீழ் பனங்குற்றியால் அமைக்கப்பட்டிருந்த பஸ் தரிப்பிடத்தில் வந்தமர்ந்தாள். "பழைய விளையாட்டு விளையாடுவமாடி..." நீண்டு கொண்டிருந்த மௌனத்தை பவானிதான் கலைத்தாள். "ரைட்" அவள் கண்களை மூடிக் கொண்டு செவிப்புலனைத் தீட்டினாள். காற்றின் இரைச்சலை...இ மனிதக் குரல்களை...இ பறவைகளின் கீச்சிடல்களை..., வாகன இயந்திரங்களின் இயக்கத்தின் ஓசையை..., இரும்பு உரசுவதால் எழும் ஒலிகளை..., மிருகங்களின் கத்தலை என அவள் தன் நினைவடுக்குகளில் ஒழுங்குபடுத்தத் தொடங்கினாள். பவானியின் மூச்சுக் காற்றைத் தவிர அப்பிரதேசம் அமைதியாக இருந்தது. தூரத்தே யாருடையதோ ஒரு பெண் குரல், யாரையோ அழைப்பது கேட்டது.அவளுக்கு அம்மாவின் நினைவு வந்தது. எதிரே இருந்த பூவரசு மரத்தில் இருந்து புணில் குருவியின் சல சலப்பு ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. சிறிது நேரம் வீதி சலனமற்று இருந்தது... இப்போது பள்ளிப் பக்கம் இருந்து.... ரெக்டர் ஒன்றின்... அமத்திப்பிடித்த அக்சலேட்டரின் உறுமலுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய தட... தடப்புச் சத்தத்தைக் கேட்டாள். “மணியத்தார் டூ போட்டி டிரக்டர்...” “கரக்ட்...” டிரக்டர் அவளைத் தாண்டிய போது டீசல் மணம் அவள் நாசியை தாக்கியது. தொடர்ந்து பெரிய சைக்கிள் ஒன்று ஒழுங்கையில் இருந்து மெயின் றோட்டுக்கு மாறி பள்ளத்தில் விழுந்து கல... கலத்துப் போவதை கேட்டாள்.

“பின் கெரியர் பூட்டின பெரிய சைக்கிள்... ஆர் என்டு தெரியாது.....” “ஓகே.....” தூரத்தில் வரும் போதே இரும்பின் தட... தடப்புச் சத்தம்... இயந்திரத்தின் இயக்க ஓசையை கேட்க முடியாது தடுப்பதை உணர்ந்தாள். அவளைத் தாண்டிப் போகும் போது பற்றிய டீசல் புகை மணம் தாங்க முடியாது அவளுக்கு வயித்தைக் குமட்டியது.

“C.T.B... தகர பஸ்...” “கரக்ட்...” கூடையின் தடதடப்புச் சத்தத்துடன் ஒரு சின்னச் சைக்கிள் அவளைத் தாண்டிப் போவதை ஊகித்தாள். “குமரன் திரும்ப லேடிஸ் பைக்கில பள்ளிக்க போறான்....” “கரக்ட்.....” திரும்பவும் டயரின் வேகமான உராய்வு ஓசையுடனும் இயந்திரத்தின் அமத்தலான ஓசையுடனும் வாகனம் ஒன்று அவளைத் தாண்டி வேகமாகப் போவதை கிரகித்தாள். இயக்கத்திட மிட்சுபிசி பஜிரோ...”

“கரக்ட்...” அடியே... பஜிரோ பள்ளிக்க போகுது....வாடி போவம்...” அவள் கண் விழித்த போது தூரத்தே வீதி இருள் படியத் தொடங்கி இருந்தது..., பவானி பள்ளி நோக்கி ஓடத் தொடங்கி இருப்பதைக் கண்டாள். பவானியை முதுகுப் புறமாக துரத்தி ஓடி நெருங்கி அவளை முந்தி பள்ளிக் கம்பிக் கதவைத் தாண்டி உள்ளே வந்த போது அவளுக்கு மூச்சிரைத்தது. பம்பர் அடித்து பாதி சிதைந்த அரங்கின் ஓரத்தில் திரை கட்டி படம் போடுவதற்கு தயார் படுத்திக் கொண்டிருப்பதைக் கண்டாள். உடைந்த அரங்கிற்கு முன்னே குமரனும்..., பள்ளித் தோழிகளும்..., பையன்கள் சிலரும்...., அண்ணாச்சி மாரும்...., அக்காச்சிமாரும் அமர்ந்திருந்தார்கள். அவளும் அரங்கிற்கு முன்னே அமர்ந்த போது , மூச்சிரைப்புடன் வந்த பவானி அவளை இடித்துக் கொண்டு அமர்ந்த போது..., அவள் தோள்பட்டை கடுக்குவதை உணர்ந்தாள்.

வோட்டப் பம்பில் செய்த ஜெனரேட்டர் சத்தம் பள்ளிக் கட்டடத்திற்கு பின்னே இருந்து வந்து கொண்டிருப்பதையும்... மாலைப் பொழுது இருட்டிக் கொண்டு வருவதையும் கவனித்தாள். இரைச்சலும்... கூ... என்ற சத்தமுமாகப் போராடிய பின் திரையில் படம் ஓடத் தொடங்கியதை பார்த்துக் கொண்டிருந்தாள். வேட்டோசைகளும்....., புகைமண்டலமும்.., கட்டளைகளும்..., அலறல்களுமாக படம் நீண்ட நேரம் ஓடிக் கொண்டிருந்த போது அவளுக்கு வீட்டு நினைவு வந்தது. அவள் எழுந்து போக முடியாதபடிக்கு துவக்குகளுடன் அக்காச்சிமாரும்..., அண்ணாச்சிமாரும் வளைத்து நிற்பதைக் கண்டாள்.

திடீர் என்று அண்ணாச்சிமாரும், அக்காச்சிமாரும் கோசமிட்டுக் கொண்டு அரங்கை நோக்கி நெருக்கி அடித்துக் கொண்டு முன்னேறி வருவதைக் கண்டாள். முன்னே இருந்தவர்களுடன் குமரனும் அரங்கில் ஏறுவதைக் கண்டாள். தாமும் முன்னே தள்ளப்படுவதை உணர்ந்தாள். பவானி தடுமாறி உயரமான அரங்கில் ஏறிக் கொண்டு தன் கையைப் பற்றி மேலே இழுத்த போது அவளும் அரங்கில் ஏறினாள். தாங்கள் ஒழுங்காக நிறுத்தி வைக்கப்பட்டு பஸ் நோக்கி வழி நடத்தப்படுவதைக் கண்டாள். பஸ்சும்... பஜீரோவும்... வேகமெடுத்து பள்ளிக் கதவைத் தாண்டும் போது தான் அருகே பவானி முன் சீற்றின் கம்பியைப் பிடித்தபடி பயத்துடன் வெளியே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். பஸ் அவள் ஒழுங்கையைத் தாண்டும் போது.., ஒழுங்கை முற்றாக இருண்டு போய் அவளால் அடையாளம் காணமுடியாதிருந்தது.இருளில் அவளுடைய திறந்த தட்டிக் குடிலுக்குள் குப்பி விளக்கு எரிவது நினைவுகளில் படிய..., கவலையானாள். பஸ் நீண்ட நேரம் ஓடியதில் அலுப்பும்..., பயமும்.., வீட்டு நினைவும்..., கவ்வ தோழியின் தோளில் சாய்ந்து தூங்கிப் போனாள். ஆரோ தன்னை அதட்டி எழுப்புவதை உணர்ந்து கண் விழித்துப் பார்த்தாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பிள்ள.... குளுச ஏதாச்சும் போட்டனியே ஆச்சி....” தன்னைக் கவனித்தபடி பெரிய பிரேம் கண்ணாடி போட்ட..., தலை பஞ்சாக நரைத்த நிர்வாக உத்தியோகத்தரின் முகத்தைக் கண்டாள். “ஓம்...”

வெளியே பகல் வெளிச்சம் கண்ணைக் கூசி, மீண்டும் அவளுக்கு தலைவலியை உண்டுபண்ணியது. தான் நீண்ட நேரம் நினைவிழந்திருப்பதை ஊகித்தாள். துப்பாக்கியுடன் நிற்கும் தலைவரின் முழு உயரப்படம் கொழுவிய பதிவான பயிற்சி முகாமில் இருக்கும் போதுதான், பவானி அவளைக் காட்டிக் கொடுத்தாள். இவள் நல்லா வாகனச் சத்தத்தை மதிப்பாள் என்ற..., பிறகுதான் அவளை அக்காச்சிமார் வாய்காலில் நீர் ஓடிக் கொண்டிருக்கும் இடத்துக்கு பக்கத்தில், அடர்ந்த காட்டுக்குள் இருந்த வேறு முகாமுக்கு மாற்றினார்கள். அங்குதான் அவளுக்கு விரல்களை நகங்களாக மாற்றி மரத்தில் ஏறப் பழக்கினார்கள். நரம்புகள் புடைக்க சரணவாயுவால் அவதிப்பட்டதும்..,பின் அது பழக்கமாகிப் போனதும்... அவளுக்கு நினைவில் வந்தது. தனக்கு பயிற்சி முடிந்ததா? அல்லது பயிற்சியா? என ஊகிக்க முடியாத பல இரவுகள், அவள் இராணுவ முகாம்களுக்கு அருகில் இருந்த மரங்களில் மறைந்திருந்து ‘றக்கி’ எடுத்திருக்கின்றாள். அன்று இரவுச் சாப்பாட்டுக்குப்பின் தங்கள் பயிற்சி முகாம் பதட்டமாக இருப்பதை உணர்ந்தாள். அன்றிரவு வழமையான இடங்களை விட தூரமான இடம் ஒன்றிற்கு, அக்காச்சி ஒருவர் அவளை மோட்டார் சைக்கிளில் ஏற்றிப் போனார். ஒற்றையடிப் பாதையா? அல்லது வயல் வெட்டையா? என உணரமுடியாத பாதையில் டப்பு..., டப்பு என்ற ஓசையுடன் பயணப்பட்ட ஊபு 125 பைக் பனங் கூடலை வந்தடைந்த போது..., அவள் கையில் வோக்கியைக் குடுத்து அக்காச்சி சொன்னா...

“ இங்க இருந்து எட்டு கிலோ மீற்றருக்கு அங்காலதான் ஆமி நிக்குது...., உனக்கு முன்னால இரண்டு பொயின்ட் இருக்கு... உன்ன சும்மாதான் விடுறம்..., அலேட்டா இரு...”

அவள்அதிக உயரமான பனையொன்றை தெரிவு செய்து நிலையெடுப்புச் செய்தாள்.நட்சத்திரங்களும்..., தானும் தனித்திருப்பதாக அவளுக்குப் பட்டது. காவோலைகளின் இரைச்சலும்..., அப்பு...அம்மா... பவானி... பள்ளி... தங்கை... வீடு... என்ற நினைவுகளுமாக அவள் நீண்ட நேரம் இருளில் விழித்திருந்தாள். திடீர் என்று தூரத்தே நில அதிர்வுடன் பெரு வெடிப்போசை ஒன்றைக் கேட்டாள். எங்கோ சக்கை வாகனம் முழங்கி இருக்க வேண்டும் என்பதை அவள் ஊகித்தாள். சிறிது நேரம் பனையின் இரைச்சலைத் தவிர வேறு ஓசைகள் ஏதுமற்று அமைதியாக இருப்பதை கவனித்தாள்.. திரும்ப டப்..., டப்..., எனும் ஓசை தூரத்தே கேட்டது..., சிறிது நேரத்தில் மெல்லிய கூவல் ஓசையையும்...தொடர்ச்சியான டப்..., டப்..,என்ற ஓசைகளையும் ஒரே சமயத்தில் செவிமடுத்தாள். தூரத்து முகாமில் இருந்து செல் அடிக்கப்படுவதையும் இலக்கு எதுவென அவள் ஊகிக்க முற்பட்ட கணத்தில் அருகே பெரு வெடிப்போசையுடன் ‘செல்’ வீழ்ந்து வெடிப்பதையும்..., தொடர்ந்து பனங்கூடலில் செல் விழுந்து வெடிப்பதையும்..., பனைகள் முறிவதையும்..., சில இடங்களில் பனை பெரும் சுவாலையுடன் தீப்பிடித்து எரிவதையும் கண்டாள். அவள் வேகமாக தன் நிலையெடுப்பில் இருந்து பின் வாங்கத் தொடங்கினாள். பாதிப் பனைக்கும் கூடுதலாக இறங்கிக் கொண்டிருந்த கணத்தில், தான் காற்றழுத்தத்தில் தூக்கி வீசப்படுவதை உணர்ந்தாள். அவள் விழித்த போது பனியில் நனைந்த உடுப்பு ஈரமாக இருப்பதையும்..., ஒரு பக்கத் தோள்ப்பட்டை கடுமையாக வலிப்பதையும்..., ஒரு காதால் இரத்தம் வழிந்து கொண்டிருப்பதையும்..., காது நெருப்பால் சுட்டது போல் எரிவும்..., கொதிப்புமாக இருப்பதையும் உணர்ந்தாள். அவள் எழுந்து நின்ற போது அந்த ஒற்றையடிப் பாதை அதிகாலைப் புலர்வில் வெளிச்சமாகிக் கொண்டிருப்பதைக் கண்டாள். நடக்க முற்பட்ட போது தலை சுற்றத் தொடங்குவதை உணர்ந்தாள். வயிற்றைக் குமட்டிக் கொண்டு வாந்தி எடுத்தாள். தொடர்ந்தும் ஒற்றையடிப் பாதையில் வாந்தி எடுத்த படி முன்னேறிக் கொண்டிருந்தாள். தூரத்தே.... ஊபு 125 மோட்டார் சைக்கிளின் சத்தத்தை..., இரத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிந்து..., கொதிக்கும் தன் காதுகள் இனம் கண்டு கொண்ட மகிழ்ச்சியில் மீண்டும் மயங்கி நிலத்தில் வீழ்ந்தாள்.

"நான் குருவிட்ட முறையா தியானம் படிச்சவன்.... நீங்க விலத்துங்க நான் கவனிக்கிறன்...."

அந்தக் குரலைக் கேட்டதும் அவள் திடுக்கிட்டு விழித்தாள்..., எழுந்து கட்டிலில் அமர்ந்தாள். மழை மப்பாக இருந்த போதும் அறைக்குள் வரும் வெளிச்சத்தில் இருந்து நேரம் பகல் பொழுதைத் தாண்டி விட்டதை உணர்ந்தாள். நிர்வாக உத்தியோகத்தருக்கு முன்னே நெசனல் சேட்டும்...., வேட்டியுமாக தியானக்காரன் பல்லைக் காட்டி நின்றிருந்தான். "எனக்கு ஒருத்தரும் ஒன்டும் புடுங்க வேண்டாம்....."

அவள் எழுந்து தடுமாறி சாப்பாட்டுக் கோலை நோக்கி நடக்கத் தொடங்கிய போது பசி அகோரமாக மாறி இருப்பதை உணர்ந்தாள். அந்தப் பதிவான தகரக் கூரை அடித்த சாப்பாட்டுக் கோல் ஆள் நடமாட்டம் இன்றி ஓய்ந்து வெறிச்சோடிப் போய்க் கிடந்தது. அவள் அந்த தியானக்காரனை வெறுத்தாள். அவள் இயக்கமற்றுக் கிடக்கும் போது.... சாந்தப்படுத்துவதாக கூறிக் கொண்டு அவன் தன்னைத் தொடுவதை வெறுத்தாள். அந்தத் தொடுகை மிக மோசமான வக்கிரத்தனமானது என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அதனாலேயே நிர்வாக உத்தியோகத்தர் இல்லாத நேரங்களில் தன் அறையில் இருப்பதை தவிர்க்க விரும்பினாள். அவள் சாப்பாட்டு மேசையில் அமர்ந்து ஊத்தை படிந்து மங்கி வெளுத்துப் போன கூடையை திறந்து பார்த்தாள். அவளது சாப்பாடு சூடு ஆறிப் போய்க் கிடந்தது. வேகமாக ஆறிக் குளிர்ந்து போய்க் கிடந்த மதிய உணவை உண்ணத் தொடங்கினாள். சில தினங்களுக்கு முன்,அவளை சட்டென்று கீழே விழுத்தி பின் நிமிர்த்தி..., பின் தன் விரலை தன் முகத்துக்கு முன்னே ஆட்டி பரிசோதித்த முகாம் வைத்தியர்... தனக்கு செவிப்பறை வெடித்திருப்பதால் விரைவிலேயே காது கேட்க முடியாமல் போய்விடும் எனக் கூறியதை நினைத்த போது தொண்டையை அடைத்துக் கொண்ட சோறு புரையேரி..., சோற்றுப் பருக்கை அவள் நாசியில் ஏறி எரிவை ஏற்படுத்தியது.அடிக்கடி ஏற்படும் இந்த மயக்கம் தன்னை நிரந்தர நோயாளியாக்கிவிடுமோ என்ற பயமும், மற்றவர்கள் 'செவிப்புலனற்றவள்' என்று புறக்கணிக்கப்படுவோமோ என்ற மனவேதனையும், தன் எதிர்காலம் பற்றிய ஏக்கமும் கண்ணீரை வரவழைக்க,அவள் வேகமாக உண்டு வெளியே வந்தாள். நிர்வாக உத்தியோகத்தர் மங்கிப் போன பிரவுண் கலரில் சேட்டும் ஜீன்சும் போட்டு அவரது துணியாலான பயணப் பையுடன் வெளிக்கிட்டு தன்னைத் தேடி, இரவு பெய்த மழை நீர் செஞ்சகதியாக்கி இருந்த சேற்றைத் தாண்டி வருவதைக் கண்டாள்.

"பிள்ள... நான் ஊருக்குப் போட்டு வாரன்..., உங்கின மரத்தில ஏறாம..., அறைக்கேயே கிடவன ஆச்சி..." "ஓம்" அவர் மீன் ஒன்று துள்ளிப்பாயும் மஞ்சள் நிற விளம்பரம் ஒட்டிய குடி நீர்த்தாங்கிக்குப் பின்னே இருந்த, ஒரு பக்கச் சாய்வாக தகரக் கூரை அடித்து, அறுத்த சீமெந்து புளக் கல்லால் சுவர் கட்டிப்...., பூசாமல் கிடந்த களஞ்சியப் பகுதி நோக்கிப் போவதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். அவர் திரும்பி வந்து தன் அறையை நோட்டம் விடுவதையும்...., தன் கண்ணாடியை சரி செய்து கொண்டு தலையை நிமிர்த்தி மரங்களில் தன்னை அவர் தேடுவதையும்...., வீதிக்கு வெளியே இருந்த மரத்தின் உச்சாணிக் கெந்தில் ஒரு மரப் பல்லியைப் போல் ஒட்டிக் கொண்டு பார்த்திருந்தாள். அவர் வெளிக் கதவைத் திறந்து வெளியே வந்து..., மரங்களை அண்ணாந்து பார்த்தபடி நடந்து..., கால்கள் கல்லிலோ வேரிலோ...,இடறித் தடுமாறி அவர் பிரதான வீதி நோக்கிப் போவதை அவள் பார்த்திருந்தாள். அவர் திரும்பி வரும் வரையோ..., அல்லது தனக்கு வலிப்போ..., பசியோ வரும் வரை அந்த மரத்தில் நிலையெடுப்புச் செய்வதென அவள் முடிவெடுத்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பண்பாட்டுத் தளம்

புதிய சிந்தனை புதிய தேடல்கள்
புதிய அறிமுகம் புதிய அறைகூவல்
புதிய அரவணைப்பு புதிய ஆக்கங்கள்
புதிய தீர்மானம் புதிய அனுபவம்
புதிய வேலைகள் புதிய வெற்றிகள்
புதிய பரிமாற்றம் புதிய தோல்விகள்
புதிய விடியல்கள் புதிய செயல்முறை
புதிய நிறைவுகள்! புதிய திருப்திகள்!!

**– மணி –**

# வாக்குகளால் ஆனவாழ்க்கை

தேயிலைக்குக் கீழ
தெரவியம் கெடைக்குமுனு
வாக்குகொடுத்ததால
வந்துசேர்ந்தோமய்யாநாங்க..
வந்தவழியிலேயே
மந்த கூட்டம்போல
மடிஞ்சிசெத்துப்போன
மக்கள் கூட்டமய்யாநாங்க...


காடுகரைதோட்டம் வெட்டி
காணிநெலமாக்கிகோப்பியும் தேயிலையும்
கொண்டுவந்துநெலநாட்டி
வளர்த்துநிமித்திப்புட்டோம் நாங்க...
மாடுகட்டும் பட்டிப்போல – லய
வீடுகட்டித் தந்தாங்களே
அந்தலயத்துலதான்
எங்கசீவன் போங்க...

அம்மாமாரிவந்து
அருள் வாக்குச் சொன்னாத்தான்
சக்திக் கரகமௌங்கள்
தலையேறும் சாமி...
நேராகவாக்கெடுத்து
நேற்றியிலபொட்டுவச்சி
அம்மாமாரிவந்துஅருள் தந்துபோகுமுன்னு
ஏங்கிதவிக்கிறோமேசாமி...

தேர் ஓடும் திருவிழாபோல் ஓன்னாகஓடிப்போயி
ஓர் ஒட்டும் சிதறிடாம
பேர் கேட்டஒடன
பெட்டியிலபோடுறமேசாமி...
செல்வாக்குப் பெற்றோரெல்லாம்
சொல் வாக்குத் தாறதால
எம் வாக்கைப் போடுறமேசாமி...

நாங்கபோட்டவாக்குகெடச்சிருச்சிஒங்களுக்கு...
நீங்ககொடுத்தவாக்குகெடைக்குமாய்யாஎங்களுக்கு..?

**– – மல்லியப்புசந்திதிலகர் – –**
**2013**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி...

பண்பாளன்...
என்றார்கள்...
அவர்கள் சுரண்டலை அறியாத போது...

ஏழையின் காசில்
இவர்களின் சுகபோகம்...
வெடித்தது மனம்
கேள்வி கேட்டேன்
பைத்தியம் என்றார்கள்...


என்னைச் சுற்றி
வாலாட்டினார்கள்
நாய்கள் என்றுணர்ந்தேன்...
பிறகுதான் தெரிந்தது
இவர்கள் நரிகள் என்று...

அறிந்து கொண்டேன்
இவர்களின் மனிதத்தை...
தொலைத்தேன்
என் புனிதத்தை....

கால் மறுக்கிறது
அவர்களோடு பயணிக்க...
நெஞ்சு வெடிக்கிறது
அவர்கள் நிலைமை எண்ணி...

இனி
என் பாதை வேறு
என் பயணம் புனிதமானது!

**-பொத்துவில் ஐ.எல்.சம்சூன்**



## வழி தொடருதல்

நிரப்பப்படாத வெற்றுக் குவளை
உன் வார்த்தை 'கண்ணீரா' அமுதமா ?
நிரப்பித் தர என்கிறாய் எனதன்பே
உறக்கம் மீள்தல்
சாவே நிரந்தரம் 'கண்ணீர் தெறித்து
விழுந்தது -கடல் பின்
வெறியா ? முத்தமா ?
கன்னத்தைக் கடந்தது .2அன்பே
எனது எல்லையோடு தொடங்குகிறது
உனது காடு தொடக்கமும் முடிவுமற்ற
ஆயிரம் பாதைகளில்
வழிதவறி எங்கும் வழிகிறது நிலா வழியெங்கும்
ஆறுகள்உறங்குவதில்லை
உனது காட்டின் பறவைகளோ
வழிகாட்டுவதுமில்லை
பின்எப்படி உன்னிடம் திரும்பி வருவது
எப்பொழுதும் திரும்பி வராத
பாதைகள் மூலம் .

**-கிரிஷாந்ஶ்ரீ-**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசற்கதவு....

எச்சரிக்கையோடு
வீதியைக் கடக்கத் திரும்பிப் பார்த்தபோது
அவள் வருவதைப் பார்த்தான் –அப்படி
ஓர் பேரழகை அவன் இனிக் காணப்போவதில்லை –என
அவன் எவரிடம் போய்ச் சொல்வான்
சொன்னால்
அவனிடமிருந்தேஅந்த உணர்வு
காணாமற் போய்விடாதா
அவள் பின்தொடர்ந்து வரும் பாதை
முடிவிலிவரை நீண்டதாக
இந்தக் கணம் மட்டும் ஏன் இருந்திருக்கக்கூடாது?
தனது வீட்டுவாசல் வரைதிரும்பித் திரும்பி
அவள் தன் வழியேபின் தொடர்கிறாளா –என
அனுமானிக்க விரும்பினான்
சில அடிகள் தூரத்தில்
அவள் அவனை அண்மித்துவிட்டிருந்தாள்
தன் வீட்டுவாசலை துரதிஸ்டவசமாக –அவன்
இப்போது திறக்க வேண்டியிருந்தது
அவள் அவனை நெருங்கிவீட்டிற்குள்
அவனுடன் வந்து இருக்கப் போவதான –தீர்மானத்தில்
கதவைத்திறப்பதற்காகக் காத்திருந்தாள்
காலம் –கதவைத் திறந்து மூடுவதான கணத்தில்
அவன் – கதவைத் திறந்து
அவள் வெளியேறும்வரை காத்திருந்தான்
பெருமூச்சுடன் அவள் வெளியேறியபின்
கதவைச் சாத்தியபின்
உன்ரை பிள்ளையளாணை
நீ வீட்டைவிட்டுப் போகாதை
என்று சொல்லிக்கொண்டான் !

**-சுகனி -**

## நீதி

மானிடத்தில் ஏற்றத் தாழ்வு இல்லையே
மனிதராய் மானத்துடன் வாழ்வது நல்லதே
மனத்துள்ளே மாசுமறு நுழைந்திடல் தீயதே
மனிதனையும் மனிதனாக மதித்திடல் சிறந்ததே.
சட்ட திட்டப் பக்குவங்கள் அரணாகச்
சார்ந்திருக்கும் தோழமையைக் காத்திடு
குட்டக் குட்டக் குனியாதே நிமிர்ந்து நின்று
குவலயத்து அநீதி தன்னை எதிர்த்திடு.
பள்ளம் மேடு இருப்பதனைப் பார்த்து வா
பாய்ந்தோடும் வெள்ளத்திலே நீந்தி வா.
கதிர் வீச்சாய் நுண்ணறிவைக் கற்றுக் கொள்
கதியற்று வந்தோரை வரவேற்றுக்கொள்.
கப்பல் போகும் திறந்த மனம் வைத்திரு
கப்பத்தையும் லஞ்சத்தையும் ஒழித்திடு
குப்பத்தில் வாழ்கின்ற மக்களைக் கல்வித்
தெப்பத்தில் ஏற்றிக் கரையில் சேர்த்திடு!!


**- அபி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய தளத்தின் தேடல் :-

## நெடுந்தீவு.




யாழ்ப்பாண குடா நாட்டிலிருந்து நெடுந்தூரமான 45 கிலோமீட்டரின், தென்மேற்கில் அமைந்துள்ள 13 தீவுகளில் மிகப் பெரியது நெடுந்தீவு. ஒல்லாந்தர் இத்தீவை டெல்வ்ற் (deft) என்று பெயரிட்டு அழைத்தார்கள்.. போர்த்துக்கேயர் காலம் தொட்டு ஆங்கிலேயர் காலம் வரையான அந்நியர் ஆதிக்கத்திற்கு முன்னர் நெடுந்தீவு ஒரு சுதந்திர தனி இராசதானி நாடாகவே விளங்கியது. வெடியரசன் நெடுந்தீவின் மேற்குப் பகுதியில் கோட்டைக்காடு என்னுமிடத்தில் கோட்டை கட்டி ஆண்டு வந்தான்என அங்குள்ள மக்களில் ஒரு பிரிவினர் வெடியரசன் கோட்டை எனவும் இன்னொரு சாரார் ஒல்லாந்த கோட்டை எனவும் அழைத்து வருகின்றனர். ஆனால் ஒல்லாந்தர் கால ஆவணங்களில் நெடுந்தீவில் ஒரு கோட்டை கட்டப்பட்டதற்கான எந்தக் குறிப்பும் இருப்பதாகத் தெரியவில்லை. இக்கோட்டை சோழர் காலக் கட்டிட முறைப்படியே கட்டப்பட்டிருந்தது. அதன் வடிவமைப்பு பல சித்திர வேலைப்பாடுகளைக் கொண்டு புதை பொருள் ஆராட்சியாளர்கள் கருதுகிறார்கள். இன்று இக் கோட்டை அழிந்த நிலையிலுள்ளது. நெடுந்தீவின் தென்கிழக்கே காணப்படும். முக்கோண வடிவில் கட்டப்பட்ட வெளிச்சவீட்டுக் கோபுரமாகும். உயரமானது 23 அடி அல்லது 5 மீற்றர். கடலில் வரும் கலங்களுக்கு புகை மூலம் இக்கோபுரம் வழி காட்டுகின்றது. இதைப்போன்ற ஒரு குயிண்டாக் கோபுரம் அனலை தீவுக் கரையிலுமுள்ளது. இதனையும் ஒல்லாந்தர்களே கட்டினார்கள். இவர்களால் கட்டப்பட்ட இக்கோபுரத்திற்கு இராணியின் கோபுரம் எனப் பெயரிட்டார்கள். இதுவே நாளடைவில் மக்களால் குவிந்தா என அழைக்கப்பட்டது.

நெடுந்தீவு இறங்கு துறையிலிருந்து கிழக்காக சுமார் 2.5 கிலோ மீற்றர் தூரத்தில் பெருக்கு மரம் காணப்படும். குருதிப்பெருக்கம், நரம்புத் தளர்ச்சி, அம்மை, இரத்த அழுத்தம், தொற்றுநோய், ஆகியவற்றுக்கு பெருக்கு மரத்தின் இலைகள், பட்டைகள், வேர்கள் போன்றவை பயன்படுகின்றன. 300 வருடகாலம் பழைமையான இந்தப் பெருக்கு மரத்தைப் பாதுகாக்க வேண்டியது மக்களின் கடமையாகும். 40 அடி மனிதனின் பாதச் சுவட்டினை ஒத்த பாதச்சுவட்டைப் பார்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் உட்பட பெருமளவானோர் அப்பகுதிக்கு படையெடுத்து வருகின்றனர்.

இலங்கை பாராளுமன்றத்தின் முதல் சபாநாயகர் நெடுந்தீவை சேர்ந்த சேர் வைத்திலிங்கம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரைசுவாமி அவர்கள் என்பது சிறப்பு. ஊரின் பெயர்கள் ஆலங்கேணி ,பெரியான்துறை, மாவலித்துறை, பூமுனை, சாமித்தோட்டமுனை, வெல்லை, குந்துவாடி, தீர்த்தக்கரை

நோக்கம்: –
நெடுந்தீவில் வாழும் மக்களின் தேவைகளையும் இப்பிரதேசத்தில் விருத்தி செய்யக்கூடிய துறைகளையும் அடையாளங் காணுதல்.

| | | | |
|---|---|---|---|
| மாகாணம் | – | வடக்கு | எல்லைகள் |
| மாவட்டம் | – | யாழ்ப்பாணம் | வடக்கு – கடல் |
| உள்ளூராட்சி மன்றம் | – | நெடுந்தீவு பிரதேச சபை | தெற்கு – பாக்கு நீரிணை |
| பரப்பளவு | – | 47.5 சதுர கிலோ மீற்றர் | கிழக்கு – கடல் |
| | | | மேற்கு – பாக்கு நீரிணை |

கிராம அலுவலர் பிரிவின் சனத்தொகை – மொத்தம் 4873



| | | |
|---|---|---|
| நெடுந்தீவு மேற்கு | – | 870 |
| நெடுந்தீவு தெற்கு | – | 607 |
| நெடுந்தீவு மத்தி மேற்கு | – | 1145 |
| நெடுந்தீவு மத்தி | – | 803 |
| நெடுந்தீவு மத்தி கிழக்கு | – | 696 |
| நெடுந்தீவு கிழக்கு | – | 752 |

**பாடசாலைகள் விபரம்.**

| கிராம அலுவலர் பிரிவின் பெயர் | | பாடசாலைப் பெயர். |
|---|---|---|
| நெடுந்தீவு மேற்கு | – | மங்கையற்கரசி வித்தியாசாலை |
| நெடுந்தீவு தெற்கு | – | சிறீஸ்காந்தா வித்தியாலயம். |
| | | சைவப்பிரகாசா வித்தியாலயம் |
| நெடுந்தீவு மத்தி மேற்கு | – | சீகிரியாம்பள்ளம் வித்தியாசாலை |
| நெடுந்தீவு மத்தி | – | நெடுந்தீவு றோ.க.மகளிர் பாடசாலை |
| | | நெடுந்தீவு மகா வித்தியாலயம் |
| நெடுந்தீவு கிழக்கு | – | மாவலித்துறை றோ.க.பெண்கள் பாடசாலை |
| | | சுப்பிரமணியம் வித்தியாலயம் |

நெடுந்தீவு J/01

தொழில் – இப் பிரிவின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. மேலும், கூலி வேலை, மீன் பிடித் தொழில்களும் இப் பிரிவில் மேற் கொள்ளப் படுகின்றது.

பின்வரும் துறைகளில் :

- பனை, தென்னை உற்பத்திப் பொருட்களை விருத்தி செய்தல்.
- கால் நடை, விவசாயம்.

புதிய தொழில் வய்ப்புக்களை விருத்தி செய்யக் கூடியதாக உள்ளது.

நிறுவனங்களும், அமைப்புக்களும் :- இப் பிரிவில் ஐக்கியதீபம் சன சமூக நிலையம், ஐக்கிய தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டுக் கழகம் மங்கையற்கரசி வித்தியாசாலை ஆகிய அமைப்புக்கள், நிறுவனங்கள் காணப்படுகின்றன.

முக்கியமான இடங்கள் :- வெடியரசன் கோட்டை

இப் பிரிவு மக்களால் எதிர்நோக்கப் படுகின்ற பிரச்சினைகள் :-




- காணிகள் ஊடாகவே அவர்களின் போக்குவரத்துப்பாதை அமைக்கப்படுவதுடன் போக்குவரத்துக்கேற்ற வகையில் வீதியைச் செப்பனிடவேண்டிய தேவையுள்ளது.
- சுடலை மண்டப அமைப்பு புனரமைக்கப் படவேண்டும்.
- 1கி.மீ நீளமான பனங்காணி சுடலை வீதி தார் இட்டுச் செப்பனிடப்படவேண்டும்.(பாலம் புதிதாகச் செப்பனிடப் படவேண்டும்.
- 2. 1/2 கி.மீ தூரத்திற்கு மின்சாரவசதி நிர்மாணிக்கப் படவேண்டும்.
- ஐயனார் கோவில் கோட்டைகாடு சந்தியில் இருந்து செல்லும் கரவணன் தெரவைவீதி தார் இட்டுச் செப்பனிட வேண்டும்.
- கோட்டைக்காடு மங்கையற்கரசி வித்தியாசாலைக்குச் செல்லும் வீதி தாரிட்டுச் செப்பனிடப்படவேண்டும்.
- ஐக்கியதீபம் சனசமூக நிலையம் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு வாசிகசாலையாகவும், முன்பள்ளியாகவும் பிற்பகலில் மாணவர்கள் கல்விபயிலும் இடமாகவும் மாற்றப்படவேண்டும்.
- ஐக்கியதீப அரங்கு புனரமைக்கப் படுவதுடன் விளையாட்டு அரங்கும் புனரமைக்கப் படவேண்டும்.
- ஐக்கியதீபம் வெடியரசன் கோட்டை வீதி புனரமைக்கப் படவேண்டும்.
- வெடியரசன் கோட்டைக்குச் செல்லும் வீதி சுற்றுலாத்துறைப் போக்குவரத்துக்கு உரியதாகவுள்ளதால் அவ்வீதிபுனரமைக்கப் படவேண்டும்.
- சுற்றுலாத் துறைக்குரிய இடமாக வெடியரசன் கோட்டையும் அதன் சுற்றுச்சூழலும் அமைவதால், அது பராமரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு செயற்பாடு அமையவேண்டும்.,
- கற்றாளை போன்ற பயன்பாட்டிற்குரிய மூலிகைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.
- விதானையார் கிணற்றுப் பகுதியில் குடிதண்ணீருக்கும், குளிப்பதற்கும் தனித்தனி ஒவ்வொரு கிணறு அமைக்கப் படுதல் வேண்டும்
- பெரியான் துறைக் கோட்டைவீதி புனரமைக்கப் படுதல் வேண்டும்.
- மலைக் குளத்துவீதி புனரமைக்கப் படுதல் வேண்டும்.
- குருக்கள் மடச் சந்தி – கோட்டைகாடு வீதி புனரமைக்கப் படுதல் வேண்டும்.
- மாடு, குதிரை தண்ணீர் குடிப்பதற்கான துறவுகள் புனரமைக்கப் படுவதுடன் குடிநீருக்கான ஏற்பாடும் செய்யப்பட வேண்டும்.
- தூண்காலை கிராமத்து 1.1/2 கி.மீ.வீதி புனரமைப்புச் செய்யப்படவேண்டும்.
- தூண்காலை கிராமத்துக்குக் குடி நீர் விநியோகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு J/2

தொழில் :- இப் பிரிவின் பிரதான தொழிலாக விவசாயம் காணப்படுகின்றது. மேலும், கூலிவேலை, மீன்பிடித் தொழில்களும் இப் பிரிவில் மேற்கொள்ளப் படுகின்றது.



பின்வரும் துறைகளில் :-

- ♦ பனை, தென்னை சார் உற்பத்திகள்
- ♦ சுற்றுலாத்துறை


புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஏனைய நிறுவனங்கள்
அமைப்புக்கள் :- இப் பிரிவில் வளர்மதி, நெடுந்தீவுமேற்கு, சனசமூக நிலையம், ஆவூர் சனசமூக நிலையம், மலைமகள் சனசமூக நிலையம், பனை அபிவிருத்திச்சபை போன்ற அமைப்புக்கள், நிறுவனங்கள் காணப்படுகின்றன.

முக்கியமான இடங்கள் :- இப் பிரிவின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- ♦ 42 அடி மனிதனின் பாதச்சுவடு
- ♦ குதிரை லாயம்.
- ♦ லோறஞ்சியார் கோவில்.
- ♦ வெல்லைக் கிணறு.

இப்பிரிவு மக்களால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகள்



- ♦ கொறுவாண்டு கிராமத்தில் மின்சார வசதிகளின்மை.
- ♦ சனசமூக நிலையங்கள் இயங்காமை.
- ♦ நூலக வசதிகளின்மை.
- ♦ நீண்ட காலமாகத் திருத்தப்படாத வீதிகள்.
- ♦ காணிகளிற்குச் செல்வதற்கு வீதிகள் ஒதுக்கப்படாமை.
- ♦ மீன்வாடிகள் அமைக்கப்படாமை.
- ♦ படகுகள் கட்டுவதற்கு ஏற்ப கடல் ஆழமாக்கப்பட வேண்டும்.
- ♦ புராதன சின்னங்கள் பாதுகாக்கப்படாமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு J/3

தொழில் :- இப் பிரிவின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது.
பின்வரும் துறைகளில் :-

- ♦ பனை சார் உற்பத்திகள், தும்பு உற்பத்தி, ஈர்க்கு உற்பத்தி.
- ♦ படகுகள் ஓட்டுதல், வெளியிணைப்பு இயந்திரத் திருத்தம்.

புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஏனைய நிறுவனங்கள் அமைப்புகள் :- இப் பிரிவில் தபால் கந்தோர், பொலீஸ் நிலையம், சமுர்த்தி வங்கி, செஞ்சிலுவைச் சங்கம், அலையோசை கடற் தொழிலாளர் சங்கம், அமைப்புக்கள், நிறுவனங்கள் காணப்படுகின்றன.

முக்கியமான இடங்கள் :- இப் பிரிவின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாகப் பின்வருவன காணப்படுகின்றன.

- ♦ மீகாமன் கோட்டை
- ♦ வெட்டுக் களிக்குளம்.
- ♦ காள முனை.
- ♦ புராதன தேவாலயங்கள் ( சென் – ஜேம்ஸ், சென் – தோமஸ் )
- ♦ மணற் பாங்கான கடற்கரை.

இப் பிரிவு மக்களால் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் :-

- ♦ கோடைகாலத்தில் குடிநீர்ப்பிரச்சினை.
- ♦ அனைத்து உள்வீதிகளும் பராமரிப்பு இன்றிக் காணப்படுகின்றது.
- ♦ மின்சார வசதிகள் வழங்கப்பட வேண்டும்.
- ♦ பஸ் போக்குவரத்துச் சீரின்மை.
- ♦ மதுபான நிலையம் இல்லை.
- ♦ எரிபொருள் நிரப்பு நிலையம் இல்லை.
- ♦ மணல், சல்லி தூரமாகப் பெற்றுக் கொள்ள முடியாமை. ( அதிக விலை )
- ♦ படித்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பு குறைவாகக் காணப்படுகின்றமை.
- ♦ மீன்பிடி நவீன மயப்படுத்தப்படாமை.

நெடுந்தீவு J/4

தொழில் :- இப் பிரிவின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. மேலும், கூலி, அரசாங்க உத்தியோகம், தொழில்களும் இப் பிரிவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பின்வரும் துறைகளில் :-

- ♦ கால்நடை வளர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மீன் பிடித்தொழிலுடன் தொடர்புடைய வலை பின்னல்,பதப்படுத்தல், இயந்திரங்கள் திருத்தல்.
◆ பனை சார் உற்பத்திகள்.
புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஏனைய நிறுவனங்கள்,
அமைப்புக்கள் :- இப் பிரிவில் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவுப் பிரதேச சபை கூட்டுறவு நகர், நூலகம், பொதுச்சந்தை, உடற்பயிற்சி நிலையம், வியாபார நிறுவனங்கள் போன்ற அமைப்புக்கள், நிறுவனங்கள் காணப்படுகின்றன.

முக்கியமான இடங்கள் இப்பிரிவில் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பின்வருவன காணப்படுகின்றது.

- ஒல்லாந்தர் காலப் புறாக்கூடு.
- மணல் பாங்கான கடற்கரை
- குதிரைகள்

இப்பிரிவு மக்களால் எதிர் நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் :-

- வெல்லை வீதி நீண்டகாலமாக பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளமை.
- அநேக இடங்களிற்கு மின்சார வசதிகளின்மை.
- வரட்சிக் காலங்களில் குடிநீர்ப் பிரச்சினை.
- குளங்கள் புனரமைக்கப்படாமை.
- கடற்கரைகளில் சுகாதாரமற்ற – நெருக்கமான குடியிருப்புக்கள்.
- வீடுகளில் மதுபானம் விற்றல்.

நெடுந்தீவு J/5

தொழில் :– இப் பிரிவின் பிரதான தொழிலாகக் கூலித்தொழில் காணப்படுகின்றது. மேலும், கடற் தொழில், மீன்பிடித் தொழில்களும் இப்பிரிவில் மேற்கொள்ளப் படுகின்றது. பின்வரும் துறைகளில் :-

- பன்ன வேலை.
- தும்புத் தொழிற்சாலை

புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்யக்கூடியதாக உள்ளது.

ஏனைய நிறுவனங்கள், அமைப்புக்கள் :- இப் பிரிவில் அன்ரனி சனசமூக நிலையம், சென்– அன்ரனி முன் பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இலங்கை வங்கி, கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், தனியார் கல்வி நிறுவனம் ஆகிய அமைப்புக்கள் காணப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியமான இடங்கள் :- இப் பிரிவின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பின்வருவன காணப்படுகின்றன.

- தாமழாப்புக் குளம்.
- அனிலன் குளம்.
- சன்னாங்குளம்.
- சென் – பற்றிமா தேவாலயம்.
- ஸ்ரீ பிடாரி அம்பாள் ஆலயம்.

இப் பிரிவு மக்களால் எதிர்நோக்கப் படுகின்ற பிரச்சினைகள் :-

- குடி நீர் பற்றாக்குறை.
- மின்சாரம் இன்மை.
- மாரி காலத்தில் வெள்ளப் பெருக்கு.
- உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பின்மை.
- வீதிகள் செப்பனிடப் படாமை.
- குளங்கள் ஆழமாக்கப் படாமை.

நெடுந்தீவு J/6

தொழில் :– இப் பிரிவின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. மேலும், விவசாயம், கூலித் தொழில்களும்

இப் பிரிவில் மேற்கொள்ளப் படுகின்றது. பின்வரும் துறைகளில் :–

- கடற்றொழில்.
- விவசாயம்.

புதிய தொழில் வாய்ப்புக்களை விருத்தி செய்யக் கூடியதாக உள்ளது.

ஏனைய நிறுவனங்களும், அமைப்புக்களும் :- இப் பிரிவில் யா.சுப்பிரமணியம் வித்தியாலயம், ஐங்கரன் சனசமூக நிலையம், உப தபாற்கந்தோர், குழந்தை யேசு முன் பள்ளி ஆகிய நிறுவனங்கள் காணப்படுகின்றன.

முக்கியமான இடங்கள் :- இப் பிரிவின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களாக பின்வருவன கானப்படுகின்றன.

- மாவலித் துறைமுகம்.
- பெருக்கு மரம்.
- குயிந்தா கோபுரம்.
- வளரும் அம்மன் கல்.
- குதிரை மருந்துக் கேணி.
- கேணிகள்.
- ஆடைத் தொழிற்சாலை.
- அந்தோனியார் தேவாலயம்.
- ஆழமான பிள்ளையார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரிவு மக்களால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகள் :-

- மின்சாரம்.
- குடிநீர்
- கடல் அணை.
- வீதி.
- போக்குவரத்து.
- உற்பத்திப் பொருட்களைச் சந்தைப் படுத்தல்.

இத் தேடலின் மூலம் இவ்வூரை அடுத்த கட்டத்திற்கான நகர்வை நோக்கி கொண்டு செல்ல இத் தகவல்கள் உதவும் என்பதே புதிய தளத்தின் நோக்கமாகும். உள்ளூர், வெளியூர், கிராம ஆர்வலர்கள் இதனைக் கருத்தில் கொள்வார்கள் என நம்புகிறோம் . அடுத்த தேடல் நெடுங்கேணி / வவுனியா பிரதேச சபை .







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிப்பிலியாட்டம் - மாற்றான்

இன்றைக்கு இருக்கும் பெரிசுகளும்(நயின்ரிகளும்) மறந்துவிட்டிருக்கக்கூடிய ஒரு விளையாட்டு சிப்பிலியாட்டம். அந்த மறதியின் அரசியலைப் பேசுவதல்ல இந்த அரசியல் பக்கத்துக்கான கட்டுரை.அதுவும் பேசப்பட வேண்டிய விவகாரம் என்றாலும் இப்போது நாம் சிப்பிலியாடப்படுவதை இங்கு பேசுவதோடு இந்தச் சந்திப்பை நிறுத்திக்கொள்வோம்.மணலுக்குள் புதைத்துவைத்த குச்சியைக் கையில் ஏந்தியிருக்க,கண்ணைப் பொத்தியவர் எம்மைத் தள்ளியபடி 'எவடம், என்று கேட்டுக்கொண்டே சிறிய இடமொன்றுக்குள் முன்னும் – பின்னும்,இடமும் – வலமுமாய்ச் சிப்பிலியாட்டிவிட்டு ஒருஇடத்தில் போட்டு,கை மணலாலேயே மூட வைத்து,மீண்டும் சிப்பிலியாட்டி தொடங்கிய இடத்தில் கொண்டுவந்து விட்டு விடுவார். இப்போது வைத்த இடத்தைக் கண்டுபிடித்து,குச்சியை எடுத்துக் காட்ட வேண்டும். அவர் 'எவடம்' கேட்கும்போது நாங்கள் 'புளியடி, புளியடி' என்று சொல்லி வருவோம்.ஆயினும் எந்தப் புளியடியில் போய்த் தேடினாலும் நாம் போட்ட குச்சி இருக்காது.

இன்று எம்மைச் சிப்பிலியாட்டுகிற அரசியல் சக்திகள் நாம் தொலைத்த தீர்வை கண்டடைய இடம் தராத வகையில் மிக மோசமாக சுற்ற வைக்கிறார்கள்.அரசு – தமிழ்த்தலைமை – மேலாதிக்க வல்லரசு என்ற முத்தரப்பு எம்மை திக்குத் திசை அறியாத வகையில் சிப்பிலியாட்டுகிறார்கள். தமிழ்த் தலைமை எம்மால் தெரிவுசெய்யப்பட்ட,எமக்கான,எம்மைப் பிரதித்துவம் செய்யும் அமைப்பு எம்மை அடக்கியாளும் அரசையும்,ஆதிக்க அரசியலை மேற்கொள்ளும் மேலாதிக்க வல்லரசையும் அதனோடு சம இடத்தில் வைத்து எப்படிச் சொல்லலாம் என்ற கேள்வி நியாயமானதுதான். ஆயினும், ஜனநாயகத்தின் பேரால் எம்முன் நிறுத்தப்படுகிற அவர்கள் அப்படியே எமது அபிலாசைகளை நிறைவு செய்ய அவசியமில்லை.எம்முள் ஒரு பகுதியே அவர்கள் என்றாலும் எம்மில் வேறான தனி விருப்பங்களை உடைய பகுதியொன்றின் தேவைகளை நிறைவு செய்வதிலேயே அவர்களது கவனம் குவிய வாய்ப்புள்ளது அல்லவா?

இந்த மூன்று தரப்பும் பண்ணுகிற அரசியல் சதுராட்டத்தில் எமக்கான விடுதலை தொலைந்து போய்விடாமல்,எமக்கான பாதையைக் கண்டடைய நாம் கொள்ளவேண்டிய விழிப்புணர்வு குறித்து எச்சரிக்கையாய் இருப்பது அவசியம்.போகிற போக்கில் அவ்வப்போது ஒவ்வொன்றுக்கும் ஆத்திரம் கொண்டு,எதையாவது அவசரகோலமாய் சொல்லிப் போயிருப்போம்.அப்படியே ஓடிக்கொண்டிருந்தால் தலையில் சம்பல் அரைக்கிறவர்கள் அரைத்து எல்லாவற்றையும் வழித்தெடுத்துவிடுவார்கள். எமது அடிமைத்தனம் நீடிக்கவே செய்யும்.கடந்து போகிறவை பற்றி பார்க்கும்போது எமக்கான பாதை பற்றித் தெளிவு பெறவும் இயலும்.

– 1 –

பொதுநலவாய உச்சி மாநாடு என்ற சிறப்புத் திருவிழா முடிந்து,வரவு – செலவுத்திட்டம் என்ற அடுத்த திருவிழாவும் அரங்கேறிக்கொண்டிருக்கிறது.சம்பள ஏற்றம் எப்படி – எவ்வளவு என்று நாம் புலம்பிக்கொண்டிருக்க,வலது கையால் தருவதை இடது கையால் பிடுங்கும் கைங்கரியத்தில் அரசு கில்லாடித்தனமாய் வெற்றிபெற்றுவருகிறது.அபிவிருத்தி என்ற பெயரால் பண முதலைகளுக்கு வாய்ப்பு வசதிகளைப் பெருக்கி,வற்றும் வயிற்று வெறுமையை வெளிப்படுத்த வீதிக்கு வரும் மக்களை கொன்றொழித்து அடக்கிவைக்க விரையும் இராணுவத்துக்கான வீதி அபிவிருத்தியும் அமோகமாய் நடந்தேறுகிறது.விலையேற்றம் மோசமாவது தவறான அரசியல் போக்கோடும் தொடர்பானது என்பதை மறைத்து,அரசு விரும்பாமலே அவரவர் விலையேற்றம் செய்துவிடுகிறார்கள் என்பதுபோல மக்கள் நம்பவைக்கப்படுகிறார்கள்.இதற்கான அண்மைக்கால உதாரணம் பஸ் கட்டண உயர்வு பஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமையாளர்கள் நீதிமன்றத்தையும் நாடித்தான் கட்டண உயர்வைச் செய்ய இயலுமாம்! அப்படியும் அவர்கள் விரும்பிய உயர்வை விடவே இல்லையாம்.

இந்த ஏமாற்றுகள் ஏதோ ஒரு சில அரசியல்வாதிகளது கைங்கரியம் என்பதற்கில்லை.பெரும் வலைப்பின்னலோடு பணமுதலைகள் தமது ஆடம்பர வாழ்வைப் பாதுகாக்கும் அரண்களைப் பல்வேறு தளங்களின் வாயிலாக மேற்கொள்வதின் ஒரு பகுதியே அரசியல்வாதிகளது இந்தத் திருகுதாளங்கள்.இந்த ஏமாற்றும் கலையில் இவர்கள் வல்லவர்களில்லை என்று கண்டால் பணமுதலைகள் இன்னொரு கபடதாரியை ஜனநாயக வழியில் நாமே தெரிவுசெய்ய வாய்ப்பும் தந்து, மாற்ற ஏற்றதாகத்தான் எமது அரசியல் முறை உள்ளது. அவர்களும் போதிய காலம் ஏமாற்றி அம்பலமானபின்னர் மீண்டும் பழையவர் அல்லது இன்னொரு 'கறைபடியாத கை'. 'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே' என்று வானொலியும் பாடிக்கொண்டே இருக்கிறது. ஏமாற நாம் உடன்பட இவ்வளவு என்ற கால வரையறை எதுவும் இல்லை என்பதால் ஆள்மாற்றி ஆள் ஏமாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

இந்த ஏமாற்றும் தளத்தில் பிரதானமான ஒன்று ஊடகம்.எம்மைச் சிந்திக்கவும் இடம் தராமல், நீங்களே தீர்மானிக்கிறீர்கள் என்ற பழியையும் எம்மீதே போட்டு,எதைத்தந்து எந்த முடிவை எப்படி எடுப்பது என்பதற்கேற்ப வடிவமைத்துத் தருகிற அவர்களின் தகவல்களில் இருந்து நாம் வந்தடைகிற இடம் பண முதலைகளைப் பாதுகாக்கும் அரண். அந்த இடத்தில் சரியாகவே வந்து சேர்ந்திருக்கிறோம் என்று கணிசமான காலம் இருந்து உழன்ற பின்னர்,மாற்றம் வேண்டுமா? இவரைக் கவனியுங்கள் என்று ஊடகம் விளம்பரப்படுத்தி எம்தலைமேல் ஏற்றும் இன்னொரு கபடதாரி மற்றொரு அரணுக்குள் மேலும் கணிசமான காலத்துக்கு எம்மை இட்டுவைப்பார். கூட்டு முன்னணி அரசு ஒன்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு 1970 இல் அதிகாரத்துக்கு வந்து, புதிய குடியரசு அமைப்பொன்றைக் கொண்டுவந்து இன முரண்பாட்டை கூர்மைப்பட வைத்தது. அவர்களது தவறுகள் ஆறில் ஐந்து பெரும்பான்மையோடு ஐ.தே.க.அரசு அதிகாரம்பெற வகைசெய்தது. 'யுத்தமென்றால் யுத்தம்' என்று அதிகாரத்துக்கு வந்த 1977 இலிருந்து முன்னெடுத்த போரின் வாயிலாகவே காலத்தை ஓட்ட முனைந்தது அந்த ஐ.தே.க.அரசு. 'பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட முடியாது, அதனோடு எப்படி வாழ்வது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று அந்த வேதாளம் வேதாந்தம் வேறு ஓதியது. அவர்கள் சிங்கள மக்கள் மத்தியிலான(ஜே.வி.பி.) ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்தபோதிலும், இன மோதலை வைத்துக் காலம்தள்ள விரும்பினர்.

முள்ளிவாய்க்கால் முடிவு அவர்கள் இருந்திருந்தால் நடந்தேறியிராது என்ற கருத்து எம்மில் பலரிடம் உண்டு.அதில் ஒரு பகுதி உண்மை உண்டு.புலிகளை அழித்த இவர்களுக்கும் புலம்பெயர்ந்த புலிப் பூச்சாண்டியைக் காட்டித்தான் சிங்கள மக்களை ஏமாற்ற வேண்டியுள்ளது.என்றாலும் உள்ளூரில் முழுதாக யுத்தம் இல்லாத சூழல் இவர்களுக்கு அவசியப்படுவதுபோல ஐ.தே.க.யிற்கு இருந்திருக்காது.மற்றொருபகுதி உண்மை,முள்ளிவாய்க்காலையும் விட அதிகமாகவே நீண்ட காலத்துக்கு அலங்கோலப்படும்படி யுத்தத்தை தொடர்ந்திருப்பார்கள். ஐ.தே.க.யினர்எங்களுடைய தலைமையும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சண்டைபோட்டுக் கொண்டு இருந்திருப்பார்கள்.அது இல்லாமல் சீவிக்க முடியாத யுத்தப்பிரியர்களுக்கு இது சிரமதசைதான்.

இந்தச் சண்டையின் சிப்பிலியாட்டத்திலிருந்து கட்டுரையின் போக்கை இப்போதைக்கு காக்க அவசியமுள்ளது.

ஐ.தே.க. அவ்வாறு யுத்தத்தை நீடிக்க விரும்பியபோதிலும்,சிங்கள மக்கள் சமாதானத்தையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டி நின்றார்கள்.சமாதானத்தை முன்னிறுத்திய ஐக்கிய முன்னணி(சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில்) அரசாங்கம் ஒன்று 1994 இல் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.இருதரப்பினரது தவறுகளினால் மீண்டும் தொடங்கிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதாலேயே இந்த அரசு எவ்வளவுதான் வயிற்றில் அடித்தாலும் நீடிக்க முடிகிறது.மீண்டும் ஐ.தே.க. அதிகாரத்தைப் பெற எவ்வளவு முயன்றும் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைத்தமை காவாந்து பண்ணி நிற்கிறது.ஆயினும் எவ்வளவு அடிச்சாலும் தாங்குகிற அடிமடையர்களாக மக்கள் இருக்கப்போவதில்லை.அதேவேளை, சிறு தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வழங்குவதோடு தமது அடிப்படைப் பிரச்சனைகளின் தீர்வுக்கான முயற்சியை முன்னெடுக்கும் சரியான மார்க்கத்தைக் கண்டடையும் முயற்சிக்கான நாட்டம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படாத இடைவெளி இருந்துகொண்டே உள்ளது.யுத்த வடு ஆறும் கால அவகாசம் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?

-2-

முழு நாடும் சார்ந்த ஆரோக்கியமான அந்த மாற்றத்தின் வாயிலாகவே ஏமாற்றுகிறவர் சுழலில் இருந்து விடுபட்டு, மக்களுக்கான வாழ்க்கை ஆதாரங்களை வென்றெடுக்க இயலும்.பணமுதலைகளது அபிலாசையைவிட்டு மக்களுக்கான தேவைகளைத் தீர்ப்பது முதல்நிலை அடைந்தால்,இனவாதத்தை முன்வைத்து சண்டை சச்சரவுகளை நீடிப்பதால் தமது அரசை நீடிக்கும் அவசியம் எழாது.இன்றைய அரசும் மக்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதைவிடவும்,அதிகாரத்தில் உள்ள சுரண்டல் கும்பலைக் கொழுக்க வைக்கவே நாட்டம் கொண்டது.அதன் வெளிப்பாடாக வெளிப்படைத்தன்மை இல்லாமல் தனக்கு அளவான இனவாதத்தை கக்கிவருகிறது.

யுத்தக் குற்றத்தை விசாரிக்க வேண்டுமென்று பிரித்தானியா சொன்னால்,உன்னுடைய விசாரணை முப்பது வருடம் என்றால், என்னுடையது அறுபது வருடம் என்று சொல்லிக் காலம் கடத்த முயல்கின்றனர்.அயர்லாந்துக் குற்றவாளி அனுராதபுரத்தை ஒருக்கால் கடக்க முடியாவிட்டால்,மறுகால் யாழ்ப்பாணம் போக இயலாதென்று இல்லையே?போனார்கள்,என்ன பெரிதாக ஆகிவிட்டது?பிரித்தானியாவைப் புண்ணிய பூமியாக நினைக்கிறவர்களல்ல,இந்த நாட்டின் உழைக்கும் மக்களே முக்கியம்.அவர்களது நீண்டகால நலங்களுக்கு விரோதமாக தமிழ் – சிங்கள – முஸ்லிம் மக்களைப் பிளவுபடுத்துவதாகவே அரசின் செயற்பாடுகள் உள்ளன.

பிரித்தானியப் பிரதமரோடு மொட்டைமாடியிலிருந்து மக்களைப் பார்த்த நம்ம தலைவர்கள் நீங்கள் சிங்களத்தில் செய்வதைத் தமிழில் செய்கிறார்கள்அவ்வளவுதானே வித்தியாசம்!நீங்கள் பொது உணர்வோடு உங்களுக்கு அவசியமான இனவாதத்தைப் பகிர்ந்துகொள்வீர்கள் பிரச்சினைத் தீர்வின் பொருட்டு மக்கள் இனபேதங்கடந்து ஐக்கியப்பட்டுவிடக் கூடாது என்பதில் மட்டும் கவனமாக இருப்பீர்கள்.

மக்கள் அவ்வாறு ஐக்கியப்பட்டுவிடக்கூடாது என்பது இவர்களது கருத்தென்றால், முழுமையாக இனவாதத்தையே அடிப்படையாகக்கொண்டு இயங்கும் தீவிரவாதிகள் இன்னும் மோசமான மோதல்களை மக்கள் மத்தியில் விதைப்பவர்களாக இருக்கிறார்கள்.இவர்களது கபடத்தை அம்பலப்படுத்துகிறோம் அல்லது எதிர்க்கிறோம் என்று அந்த மோசமான இனவாதிகளின் சதிக்குள் சிக்கக்கூடாது.பிரித்தானியாவையோ அமெரிக்காவையோ எமது விமோசனத்துக்குரியவர்களாகக் காட்டும் இனவாதிகள் இத்தகையவர்கள். அந்த 'சர்வதேச சமூகம்' அழுத்தம் கொடுத்துப் பொன்முட்டை எதுவும் கிடைப்பதில்லை. எந்தப் பொன்முட்டையிடும் வாத்தையும் கசாப்புக்கடைக்கு அனுப்பி ஏப்பம்விடுவதே அந்த மேலாதிக்க சக்திகளின் வாடிக்கை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டுக்கோட்டையில் தூக்கிய காவடி முள்ளிவாய்க்காலுக்கு போவான் ஏன், பல்லாயிரம் மக்களைப் பலிகொடுத்தும் கழித்தல் பெறுமானத்தில் நிலைமை முடிந்தது ஏன் என மறுமதிப்பீடும்,எமது தவறுகள் குறித்த சுய விமர்சனமும் செய்யாமல்,துன்பியலுக்கு பிறரையே குற்றம்சாட்டி,ஓடிய திசையில் தொடரோட்டம் நிகழ்த்த விரும்புகிறவர்களாக இந்த இனவாதிகள் இருக்கிறார்கள்.இவர்கள் தமிழபிமானத்தின் பேரால் இந்த மண்ணில் உழைக்கும் தமிழ் மக்களை அவல வாழ்வு வாழவிட்டு தாங்கள் உப்பரிகைகளில் நீச்சலடிக்க நினைக்கின்றனர்.

இவர்களையும் சமாளித்தபடி,இவர்களளவு சண்டப்பிரசண்ட இனவாதமாக இல்லாத – ஏனைய இனங்களின் உழைக்கும் மக்களோடு ஐக்கியப்பட அனுமதிக்காத அளவிலான இனவாதத்தை முன்னெடுக்கும் தலைமை கூட்டமைப்பு என்பதாக வாய்த்துள்ளது.யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸ் முற்போக்கான தேசிய உணர்வைத் தமிழ் மக்கள் மத்தியில் முன்னெடுத்தபோது,ஜி.ஜி.பொன்னம்பலம் இனவாத அரசியலை முன்னிறுத்தினார்.அதன் தொடர் வளர்ச்சியே முள்ளிவாய்க்கால் வரை நீண்டது.இது குறித்த மறு மதிப்பீடும்,யாழ்ப்பாண வாலிபர் கொங்கிரஸின் இன்றைய பரிணமிப்பும் பற்றிய தேடல் இன்றைய தமிழ்த் தலைமையிடமும் இல்லை.

நேற்று வரை முன்னெடுத்த பிரிவினைவாதத்தை இவர்கள் கைவிடும்போது,இவர்களைக் காட்டிக் கொடுப்பவர்களாக இன்றைய அதிதீவிரவாத ஈழ வாதிகள் குற்றம்சாட்டுவர்.இவர்களை இயக்கும் மேலாதிக்க சக்தியின் அபிலாசையை நிறைவேற்ற முனையும்போது,இவர்கள் மிதமான இனவாதத்துக்கு இறங்கி அரசோடு இணங்கிவருகின்றனர்.யுத்தக் குற்றவாளியாக ஈழவாதிகள் குற்றம் சாட்டும் ஜனாதிபதி முன்னிலையில் வடமாகாண முதலமைச்சர் பதவிப்பிரமாணம் மேற்கொள்வது இந்த மாற்றத்தின் பிரதிபலிப்பே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம்

றிஸ்வான்



பொருளாதார சிக்கலில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்கள் ஒருபுறம், கண்துடைப்பு பொருளாதார அறிக்கைகள் புறம். இலங்கை பலமான பொருளாதார வேகத்தை அடைந்துள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது. ஆசிய பிராந்தியத்தில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை பொருளாதார வளர்ச்சி வேகம் 6.8 ஆக உயர்ந்த பட்ச வெற்றியை பெற்றுள்ளதாக ஆசிய அபிவிருத்தி வங்கி பாராட்டியுள்ளது. முதல் 3 மாதங்களில் பொருளாதார செயற்பாடுகளுக்கமைய இது தெளிவாகின்றது. இதற்கமைய அடுத்த வருடம் இலங்கை 7.2 என்ற பொருளாதார வளர்ச்சி வேகத்தை எட்டுமென ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

உள்நாட்டு கைத்தொழிற்துறை மேம்படுத்தப்பட்டமை உட்பட பல்வேறு காரணங்கள் இலங்கை பலமான பொருளாதார வளர்ச்சி வேகத்தை எட்டுவதற்கு காரணமெனவும் ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பிட்டுள்ளது.

| Selected Economic Indicators (%) - Sri Lanka தேர்வு பொருளாதார குறிகாட்டிகள்) | 2013 | | 2014 | |
|---|---|---|---|---|
| | ADO 2013 | Update | ADO 2013 | Update |
| GDP Growth (மொத்த உள்நாட்டு உற்பத்தியில்) | 6.8 | 6.8 | 7.2 | 7.2 |
| Inflation (பணவீக்கம்) | 7.5 | 7.0 | 6.5 | 6.5 |
| Current Account Balance (share of GDP) நடப்பு கணக்கு இருப்பு ( மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்கு ) | –5.0 | –5.0 | –4.5 | –4.5 |

மூலம் : ADB . 2013 .ஆசிய அபிவிருத்தி அவுட்லுக் 2013 புதுப்பிக்கப்பட்டது . மணிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரம் இயற்கை மீள்மம், தேயிலை, இரப்பர் தேங்காய், புகையிலை, மரக்கறிவகை தொலைத் தொடர்பு, காப்பீடு, வங்கி, சுற்றுலா, கப்பல் போக்குவரத்து, பரிமாற்றம் உடை, துணி, சிமெந்து, பாறைநெய், தகவல் தொழில்நுட்பம் சேவைகள், கட்டுமானம் போன்றன வற்றில் தங்கியுள்ளது. பெருந் தோட்டப் பயிர்செய்கைகளான தேயிலை, இறப்பர், கொக்கோ, கராம்பு போன்றவையே பிரதானவருவாயாக விளங்கியது. அண்மைக்காலங்களில் பெருந் தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு குடியேற்ற கிராமங்களாக பிரித்துக் கொடுக்கப்பட்டதனால், அவ் வருமானம் வீழ்ச்சியடைந்ததுடன், தற்போது இலங்கையின் பிரதான வருமானமாக வெளிநாட்டு பணியாளர்கள் ஊடாகவே கிட்டப்படுகின்றது. குறிப்பாக மத்திய கிழக்காசிய நாடுகளில் வீட்டுப்பணிப் பெண்களாக பணிப்புரிவோரின் ஊடாகவே பெறப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. தற் போது இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் தமது குடும்பத்தாருக்கு உதவிவரும் நிதி போன்றனவும் இலங்கைக்கான ஒரு வருவாய் மார்க்கமாகவே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி ( GDP ) , 1990களில் சராசரியாக5.5 மூ ஆண்டு வளர்ச்சியைப் பெற்றது . வறட்சியும், சீர்கெட்டு வந்த பாதுகாப்பு நிலையும், 1996 இல்வளர்ச்சியை 3.8 மூ க்குத் தாழ்த்தும் வரை இது நீடித்தது . 1997 – 2000 காலப் பகுதியில், சராசரி 5.3 மூ வளர்ச்சியோடு கூடிய பொருளாதார மீட்சி காணப்பட்டதெனினும், மின்சாரப் பற்றாக்குறை, வரவுசெலவுப் பிரச்சினைகள், உலகப் பொருளாதார மந்தநிலை, மற்றும் தொடர்ந்து வந்த உள்நாட்டுக் குழப்பங்கள் என்பவற்றால், 2001ல் வரலாற்றில் முதல் முறையாக இலங்கை ஒரு பொருளாதார ஒடுக்கத்தைக் காணநேர்ந்தது . எனினும் 2001ல், கையெழுத்து இடப்பட்ட, இலங்கை அரசாங்கத்துக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் காரணமாகப் பொருளாதாரம் தேறிவருவதற்கான அறிகுறிகள் காணப்படுவதாக தெரிவிக்கின்றன. அண்மையில் பைனான்சியல் டைம்ஸ் குறிப்பிட்டதாவது, ஐரோப்பா மற்றும் ஜப்பானின் ‘ஏமாற்ற மளிக்கும் வளர்ச்சி அளவுகள்’ என்று. ‘இந்தாண்டின் இரண்டாம் அரைபகுதியில் உலகளாவிய பொருளாதார மீட்சி வேகம் கூடும் என்ற நம்பிக்கைகளைக் கெடுத்துவிட்டன. ‘என்று யூரோ மண்டலத்தின் பிரதான பொருளாதாரமான ஜேர்மனியின் வளர்ச்சி செப்டம்பரில் முடிந்த மூன்றுமாதங்களில் வெறும் 0.3 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. முந்தைய காலாண்டில் 0.5 சதவீதம் உயர்ந்தபின்னர் பிரெஞ்ச் பொருளாதாரம் 0.1 சதவீதம் சுருங்கியது. பெடரல் ரிசர்வ் மற்றும் ஏனைய மத்திய வங்கிகளின் கொள்கைகளால் தூண்டப்படக்கூடிய ஒரு புதியநிதியியல் நெருக்கடியின் அச்சங்களோடு சேர்ந்து, அதிகரித்துவரும் பொருளாதார பதட்டங்கள்,பணச்சுருக்கம், செலாவணி யுத்தங்கள், பொருளாதார வளர்ச்சியில் சுணக்கம் ,சுருங்கிவரும்சந்தைகள் ஆகிய அனைத்தும், பார்வைக்கு எட்டிய வரையில் அங்கே ‘பொருளாதார மீட்சி’ இல்லை, மற்றும் 2008இல் தொடங்கிய உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் உடைவு தீவிரமடைந்து வருகிறது என்ற உண்மையையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து காட்டுகின்றன. அண்மையில் வெளியிடப்பட்ட பஜெட்டில் 1200 "ரூபா சம்பள உயர்வும், 500 "ரூபா ஓய்வூதிய அதிகரிப்பும், சில பல விவசாய உதவிகளும் – அதிகரிக்கப் போகும் நேரடி வரி அதிகரிப்புக்கும், விலையேற்றப்படப் போகும் அத்தியாவசியப் பொருட்களுக்கு ஈடாகுமா? வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளமக்கள் – 7.6 மூ ( 2010மதிப்பீடு) பின்னர் இன்னும் சரியான கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை) மெ?த்த வெளிக்கடன் – கூ 19,45 பில்லியன் அமெரிக்கடாலர்கள் . ( 31டிசம்பர் 2010 – ( ஒருபில்லியன் – 100 கோடி ரூபா.

அமெரிக்காவிற்கு அதிககடன் கொடுத்த நாடு என்ற வகையில் சீனா அமெரிக்காவில் ஏற்படவிருந்த கடன் நெருக்கடியை இட்டுகடும் அச்சத்தில் இருந்தது . பல உலகவர்த்தக நடவடிக்கைகள் அமெரிக்க டொலர்களிலேயே நடைபெறுகின்றன. இதனால் அமெரிக்க டொலர் ஒரு உலக நாணயமாகப் பார்க்கப்படுகிறது. சீனா இந்த நிலைமாற வேண்டும் எனச் சொல்கிறது.

பெடரல் ரிசர்வ் மற்றும் ஏனைய மத்திய வங்கிகளின் கொள்கைகளால் தூண்டப்படக்கூடிய ஒரு புதியநிதியியல் நெருக்கடியின் அச்சங்களோடு சேர்ந்து, அதிகரித்துவரும் பொருளாதார பதட்டங்கள்,பணச்சுருக்கம், செலாவணி யுத்தங்கள், பொருளாதார வளர்ச்சியில் சுணக்கம், சுருங்கி வரும் சந்தைகள் ஆகிய அனைத்தும் பார்வைக்கு எட்டிய வரையில் அங்கே 'பொருளாதார மீட்சி' இல்லை, மற்றும் 2008இல் தொடங்கிய உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் உடைவு தீவிரமடைந்துவருகிறது என்ற உண்மையையே குறித்து காட்டுகின்றன.அண்மையில் வெளியிடப்பட்ட பஜெட்டில் 1200 "ரூபா சம்பள உயர்வும்,500 "ரூபா ஓய்வூதிய அதிகரிப்பும், சில பல விவசாய உதவிகளும் – அதிகரிக்கப் போகும் நேரடி வரி அதிகரிப்புக்கு, விலையேற்றப்படப் போகும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் ஈடாகுமா?


பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சிப்பாதையில் செல்ல வாய்ப்புண்டு . அதற்கு ஒரு நல்ல ஆட்சி அவசியம். இலங்கை ஏற்றுமதிகள் அதிகரிக்கும், சுற்றுலாதுறை வளர்ச்சி பெற, உள்ளூர் உற்பத்தியைப் பெருக்க, கடல் மீன்பிடியில் பாதுகாப்பும், உபகரண உதவிக் கடன்கள், தொழிலாளர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியம், அவர்கள் உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும். இனப்பாகுபாடு, சமூக ஏற்றத்தாழ்வு நீங்கி வளர்ச்சியின் அடுத்த கட்டத்துக்கு நகருமா?

இலங்கை இளையதலை முறையாவது விழித்து எழுமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளக் கணிப்பு



சி.வி. விக்னேஸ்வரன் :- எங்களுக்கு யாரும் இல்லை என்கிற எண்ணம் மேலோங்க எங்களைத் துன்புறுத்துவதில் இன்பம் காண்கிறார்கள் சிங்களவர்கள்.



சஜித் பிரேமதாச :- அரசாங்கத்தினால் சமாதானத்தை வென்றெடுக்க முடியவில்லை .




மனோகணேசன் :- சிங்களமக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் உயிரிழப்பும், அவலமும் ஏற்பட்டது . அனால் ஜே.வி.பி. யினரை மாத்திரம் நினைவு நாள் அனுஸ்டிக்க அனுமதிக்கிறார்கள் . ஏனெனில் அவர்கள் ‘சிங்களவராக இருப்பதால் (தமிழ்சங்கத்தில் )

.



சரத் பொன்சேகா! :- மூளை வளர்ச்சி குன்றிய அமைச்சர்களே பதவி வகிக்கின்றனர்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச :- சர்வதேச விசாரணைகளுக்கு இடமில்லை, அழுத்தங்களுக்கும் அடிபணியப் போவதில்லை!



பிரதமர் டேவிட் கமரூன் :- பிரித்தானியா இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும்.



அவுஸ்ரேலியபிரதமர் :- இலங்கை கடற்படையைப் பலப்படுத்த இருபடகுகளை வழங்குவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத் தளபாடங்களைக் கூட்டாக உற்பத்தி செய்வது மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ள இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டாக முடிவு செய்துள்ளன

.

மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் முகம்மட் நான் ட் அதிர்ச்சித் தோல்வி , அப்துல் யமீன் வெற்றியீட்டியுள்ளார் .

2015 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு மால்டா நாட்டில் நடக்க உள்ளது.

17 ஆம் திகதி நடந்து முடிந்தகருணாநிதிதலைமையினாலானடெசே கூட்டத்தில்கொமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்றது குறித்த கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது இதில்மொத்தம் ஐந்து தீர்மானங்கள் போடப்பட்டுள்ளன . அவற்றில் ஒன்று தமிழக அரசை கண்டிப்பது . மீதி நான்கும் காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசுக்கு கண்டனமும் கோரிக்கையும் வைக்கும் தீர்மானங்கள் ஆகும்.

கம்போடிய நாடாளுமன்ற கூட்டத்தில் ஹன்சென் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார் .

கடந்த 1971 – ஆம் ஆண்டு வங்கதேசத்தில் நடந்த போர்க்குற்ற வழக்கில் ஜமாத் – இ – இஸ்லாமி தலைவர் அப்துல் காதர் முல்லாவுக்கு மரண தண்டனை வழங்கி அந்நாட்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது .

சீனாவில் உலகின் மிக உயரமான விமான நிலையம் திறக்கப்பட்டது . கடல்மட்டத்திலிருந்து 4.411 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது . இதற்கு முன்பு திபெத்தின் காம்டோ பகுதியில், கடல்மட்த்துக்கு மேல் 4.334 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள பங்டா விமான நிலையமே உலகின் மிக உயரமானது

.

இந்திய பெண் எழுத்தாளர் சுஷ்மிதா பானர்ஜி கொலைக்கு தலிபான் இயக்கம் பொறுப்பேற்றுள்ளது . 1995 – ஆம் ஆண்டு சுஷ்மிதா பானர்ஜி தலிபான் பயங்கரவாதிகளின் தாக்குதலில் இருந்து உயிர் தப்பினார் . இதுபற்றி அவர், ஏ காபூலிவாலாஸ் பெங்காலி ஒயிப் என்ற பெயரில் எழுதிய புத்தகம் உலகம் முழுவதும் அதிக அளவில் விற்பனையானது .அவர் எழுதிய இந்த உண்மைச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியில் கடந்த 2003 – ஆம் ஆண்டு, எஸ்கேப் பிரம் தலிபான் என்ற பெயரில் திரைப்படம் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது .

மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அமெரிக்க அரசு , வங்கதேச அரசு மீது அதிருப்தியில் உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன .

ஜர்தாரி, தனது பதவிக் காலமான 5 ஆண்டுகளை முழுமையாக நிறைவு செய்ய உள்ளார் , இதுவே பாகிஸ்தான் வரலாற்றில் பெரிய சாதனையாகக் கருதப்படுகிறது . இவரது பதவிக்காலம் முடிவடைகிறது இதைத் தொடர்ந்து , பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ( என் ) கட்சியைச் சேர்ந்த 12 – வது புதிய அதிபராக இந்தியாவில் பிறந்த மம்நூன் ஹுசேன் ( 73 ) பதவியேற்க உள்ளார் . இவர் உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவில் பிறந்தவர் .
2020 – ல் ஒலிம்பிக்போட்டிகளை நடத்த டோக்கியோ தேர்வாகியுள்ளது .

இலங்கை கடற்படைக்கு ரோந்துப் பணிக்காக இரண்டு கப்பல்களை தயாரித்து வழங்க இந்திய மத்திய அரசு திட்டமிட்டுள்ளது . அவற்றை , கோவா மாநிலத்தில் உள்ள பொதுத்துறை நிறுவனமான கோவா ஷிப்பிங்யார்டு லிமிடெட் நிறுவனம் மூலம் தயாரித்து 2017–18 ம் ஆண்டிற்குள் வழங்க திட்டமிட்டிருப்பதாக தகவல்கள்தெரிவிக்கின்றன .

அமெரிக்க உளவு ரகசியங்களை அம்பலப்படுத்திய , எட்வர்டு ஸ்னோடென்னுக்கு , ரஷ்யா – மாஸ்கோ தஞ்சம் அளித்துள்ளது .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் - அக்டோபர் எழுச்சியின் நினைவாக

1940 ஆம் ஆண்டுக் காலங்களில் ஒடுக்கப்பட்ட மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு யாழ் குடா நாடெங்கும் பல வித ஸ்தாபனங்களை உருவாக்கி தமது போராட்டங்களை விரிவு படுத்தினர். இவைகளில் யாழ்ப்பாண நகரில் மையப் படுத்தப்பட்டு பல தலைவர்கள் சந்தித்து உறவுளை வலுப்படுத்தவும், போராட்டங்களை வலுப்படுத்தவும் பேருஉதவியாக செயல் பட்டது சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கமாகும்.

1931 இல் சர்வசன வாக்குரிமை அமுலுக்கு வந்தபோது தமிழ்த் தலைவர்களின் பிரதிநிதியாக விளங்கிய சேர்.பொன்.இராமநாதன் ஒடுக்கப்பட்டமக்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என டொனமூர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்த வரலாறும் நாம் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. 1942இல் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினால் வட இலங்கையில் உள்ள சகல ஒடுக்கப்பட்டமக்களின் நலனையும், ஐக்கியத்தையும் கட்டிக்காக்க ஒரு பொதுவான அமைப்பை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில்,

1943 இல் மிகப் பெரும் ஒடுக்கப்பட்டமக்களின் மாநாடு கூட்டப்பட்டு அம்மாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு திரு. யோவே போல் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1944ம் ஆண்டில் இரண்டாவது மாநாடு நிகழ்ந்தப்பட்டது .தொடர்ந்து 1945 இல் நடைபெற்ற மகாசபை மாநாட்டில் இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு இலங்கை வந்தபோது மகாசபை சார்பில் தலித் மக்கள் பிரச்சனை பேசப்பட வேண்டுமென தீர்மானித்து எடுக்கப்பட்ட முயற்சிகள் ஜீ.ஜீ.பொன்னம்பலத்தினால் முறியடிக்கப்பட்டது .

1948 இல் சுதந்திரம் என்ற பெயரில் பிரித்தானிய அரசு இலங்கையில் இருந்த முதலாளித்துவத்தின் வாரிசுகளான சிங்கள உயர் வர்க்கத்தினரிடமும், யாழ் உயர் மேலாதிக்க சாதியினரிடமும் அரசியல் – சமூக – அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டுப்போகதொடர்ந்தும் ஒடுக்கப்பட்டமக்கள் தங்கள் போராட்டத்தினை இடது சாரி சிந்தனையாளர்களின் கருத்தியலின் நம்பிக்கையில் தமது போராட்டத்தை புதிய நோக்கில் முன்னெடுத்துச் சென்றனர்.

1956 இல் மகாசபையின் தொடர்ச்சியான போராட்டத்தின் பலனாய் நல்லூர் கந்தசாமி கோவில் சகல மக்களின் வழிபாட்டிற்கு திறந்து விடப்பட்டது.

1957 இல் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட எம்.பி.டி.சொய்சா அவர்களுக்கு தமிழரசுக் கட்சியானது கறுப்புக் கொடிகாட்டியும், பறை மேளம் அடித்தும் தமது எதிர்ப்பினைக் காட்டினர். இச்சம்பவமானது மகாசபைக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்தியது. மகாசபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியின் சதி வலையில் சிக்கி தலித்போராட்டத்தை நிலை குலையச்செய்தனர்.

1956 தொடக்கம் 1960 வரையிலான மகாசபையின் போராட்டத்தினால் சண்டிலிப்பாய், கரவெட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில், கட்டுவன்புலம், புலோலி, மந்துவில் ஆகிய பகுதிகளில் 19 பாடசாலைகள் ஒடுக்கப்பட்டமக்களுக்காகவே உருவாக்கப்பட்டன.

1965 இல் அருந்ததியர் சங்கம், சலவைத் தொழிலாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், திருவள்ளுவர் மகாசபை போன்ற பல சங்கங்களினால் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் பொதுஅமைப்பு உருவாக்கப்பட்டு 1966இல் அச்சுவேலியில் ஒரு மாநாட்டையும் நடாத்தியது.

1967 இல் ஒடுக்கப்பட்டமக்கள் பௌத்த மதத்தில் இணையத் தொடங்கினர் கன்பொல்லை, கரவெட்டி, புத்தூர், பூநகரி ஆகிய கிராமங்களிலும் பௌத்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. சர்வதேச ரீதியில் ஏற்பட்ட இடதுசாரிக் கோட்பாட்டு முரண்பாடுகளின் நிமித்தம் சீனக் கம்யூனிஸ்ட், ரஸ்ய கம்யூனிஸ்ட் எனும் பிளவு நிகழ்ந்த நிலையில் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் அப்பாதிப்பு நிகழ்ந்தது. அதன் காரணமாய்ச்சீனச் சார்பினர் சிறுபான்மைத் தமிழர் மகாசபையை விட்டு விலகினர். இதில் அங்கம் வகித்தவர்களாலேயே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.இதன் தலைவராக எஸ் .டி .என் .நாகரட்னம் அவர்களும் அமைப்பாளராக கே டானியல் அவர்களும் பணியாற்றினார். இதன் முதலாவது மாநாடு 21-10 -1967 இல் யாழ்ப்பாண நகர மண்டபத்தில், சங்கானை தேனீர்க்கடை பிரவேசத்தின் போது கோடரியால் கொடூரமாக கொல்லப்பட்ட சின்னர் கார்த்திகேசு நினைவு அரங்கில் நடைபெற்றது.

1967இல் ஆரம்பிக்கப்பட்ட சங்கானைப் போராட்டமானது 1968 வரை பரவலாக வடபகுதி முழுவதும் பரவியது. சங்கானைப் போராட்டத்தின் போது பல்வேறு துன்பங்களை ஒடுக்கப்பட்ட மக்கள் அனுபவித்த நிலையில், அவர்களின் துன்பத்தில் பங்குகொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் வந்துதவியவர்களில் கம்பஹா எம்.பி.யாயிருந்த எஸ்.டி பண்டாரநாயக்கா அவர்களும். தாழ்த்தப்பட்ட மக்கள் சம்பந்தமான போராட்ட வழக்குகளில் ஆஜராவதற்கு உதவியதோடு மட்டுமன்றி, பாராளுமன்றத்திலும், தென்னிலங்கை மக்களுக்கும் இச் செய்திகளைக் கொண்டுசென்றார். யாழ்ப்பாணத் தமிழ்உயர்சாதி சட்டத்தரணிகள் எவருமே உதவ முன்வராத நிலையில் வனம் ராஜரத்தினம்,கே வைகுந்தவாசன் விதிவிலக்காக இருந்து உதவி புரிந்தனர். பிரயாணச் செலவை மட்டும் ஏற்று எமது மக்களுக்காக யாழ்பாணம் வந்து வழக்குகளை நடத்தியவர்கள். மேலும் பண்டி டி சொய்சா, எச்.எம்.கரவிட்டா போன்ற சிங்கள முற்போக்கு சட்டத்தரணிகளும் நன்றிக்கும்,நினைவுக்கும் உரியவர்கள் ஆவார்கள் .

1968 இல் மந்துவிலில் நிகழ்ந்த சாதிவெறியர்களின் கொடுமைகளுக்கு எஸ்.இரத்தினம் என்பவர் பலியாக்கப்பட்டார். பின்னர் தொடர்ந்து ,வன்னியர் குமரேசு (சங்கானை), மா. சீவரட்ணம் (கன்பொல்லை),. க. செல்வராசா (கன்பொல்லை), மு. கந்தையா (கரவெட்டி), அரியரட்ணம் (அச்சுவேலி), நல்லப்பு (சங்கானை) இன்னும் சிலரும் மரணமடைந்தனர். தீண்டாமை ஒழிப்புப் போராட்ட செயல்பாடுகளில் ஒன்றான மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப்பிரவேசப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் போராட்டமே தமிழ்மக்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது ஆயுதப் போராட்டமாகும். தீண்டாமை ஒழிப்பு வெகுயின இயக்கத்தின் சார்பில் டானியல் போன்றவர்களால் எழுதப்பெற்ற பிரச்சார நாடகங்கள், என்,கே.ரகுநாதனும், பத்தண்ணாவும் இணைந்து ஆக்கிய கந்தன் கருணை நாடகம் பெரும் எழுச்சியைப் பெற்றது. கே. பசுபதி, சுபத்திரன், புதுவை, இரத்தினதுரை போன்ற கவிஞர்களின் கவிதைகளும் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கு உணர்ச்சியையும் , உத்வேகத்தையும் அளிப்பவையாக விளங்கின. சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான சட்ட திட்டங்கள் எமது நாட்டில் நிலவுகிறது. ஆனால் நடைமுறையில் சமூக மேலாதிக்க உணர்வு நிலையின் அடிப்படையில் தலித்துகளுக்கு சமூக நீதி, நியாயங்கள் இன்றும் மறுக்கப்பட்டே வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**1969 தை 17 இல் பார்வதி அச்சகத்தினால் வெளியிடப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# brand collection

MENS WEAR

2

**like nothing else**

# 42 S New Wing,Ground Floor,
Liberty Plaza, Colombo - 03

Tele ; 011 2370458 - 011 5657970
Email : brand.collection@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JEYACHANRANS

*The Art of Fashion*




**Tel : +94 11 4528438 / 5**
**Fax : +94 11 2362822**
**E-mail : info@jeyachandran.com**
**Web : www.jeyachandran.com**
**Skype : jeyachandran888**

**No.433, Galle Road, Wellawatte, Colombo - 06.**



**Printed by Multivision, Vavuniya.**
**Registed in the Department of Post of Sri Lanka under No - LK/T/1/181508**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org